
முத்துலட்சுமி ராகவன்
புதுசா.. புதுசா.. ஒரு
காதல் பாட்டு

முத்துலட்சுமி ராகவன்
எழுதிய

புதுசா.. புதுசா..
ஒரு காதல் பாட்டு..!



லட்சுமி பாலாஜி பதிப்பகம்

33/17, 2-வது மெயின் ரோடு,

சி.ஐ.டி. நகர், தி.நகர்,

சென்னை - 600 035

அழைக்க : 95669 42486

மின்னஞ்சல் : bchandar24@yahoo.com

website : www.muthulakshmiraghavan.com

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

புதுசா.. புதுசா.. ஒரு காதல் பாட்டு..!

உரிமை : **ஆசிரியருக்கு**

பொருள்	:	நாவல்
மொழி	:	தமிழ்
முதல் பதிப்பு	:	நவம்பர் 2016
வெளியீடு	:	**லட்சுமி பாலாஜி பதிப்பகம்** 33/17, 2-வது மெயின் ரோடு, சி.ஐ.டி. நகர், தி.நகர், சென்னை - 600 035 செல் : 95669 42486
நூலின் அளவு	:	1x8 கிரவுன்
தாள்	:	11.6 kg புக் பிரிண்ட்
அச்சு எழுத்து	:	11 புள்ளி
மொத்தப்பக்கங்கள்	:	204

விலை : ₹ 110/-

லேசர் டைப் செட் : **MEEPA Designing,** MDU-11.

அச்சிட்டோர் : கிளாசிக் பிரிண்டர்ஸ் செ-2.

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

புதுசா.. புதுசா..

ஒரு காதல் பாட்டு..!

எக்மோரில் நின்றது கார்.. இறங்கிக் கொண்ட சரவணன் ரயில் நிலையத்தைப் பார்த்தான்.. உள்ளே செல்வோரும்.. வெளியே வருவோருமாக கூட்டம் அலை மோதிக் கொண்டிருந்தது.. பெட்டியை கையில் எடுத்துக் கொண்டவன் படு ஸ்டைலாக கூலிங் கிளாஸை மாட்டிக் கொண்டான்..

"ஜஸ்ட் ஏ மினிட்.. காரைப் பார்க் பண்ணிட்டு வந்துடறேன்.." என்றான் குமார்..

தலையாட்டி விட்டு காத்திருந்த நேரத்தில் கடந்து சென்ற யுவதிகளை நோட்டமிட்டுக் கொண்டிருந்தான் சரவணன்..

"போகலாமாடா..?" குமார் வந்து விட்டான்..

"போகலாம்.. போகலாம்.."

முன்னால் சென்ற இளம் பெண்ணைப் பார்த்தபடி சரவணன் ஜொள்ள அவள் அவனைத் திரும்பிப் பார்த்தபடி நடந்தாள்..

"ஆரம்பிச்சுட்டியா.." குமார் சிரித்தான்..

"நிற்காம நடந்துக்கிட்டே இருந்தா எங்கே ஆரம்பிக்கிறது..?" என்று கேட்டு வைத்தான் சரவணன்..

"டேய்.." ரசித்துச் சிரித்த குமார்..

"அடுத்து எப்ப வருவ..?" என்று கேட்டான்..

"வேலையிருக்கப்ப வருவேன்.."

"உனக்கென்னப்பா.. ஊட்டியிலே ஹோட்டலிருக்கு.. குன்னூர்ல எஸ்டேட் இருக்கு.. என்னைப்பாரு.. சென்னையில ஷாப்பிங்மால், டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ன்னு உப்புச் சப்பில்லாத பிஸினெஸ்.."

"வித்துட்டு ஊட்டிப் பக்கம் வந்துரேன்.."

"விக்கிறதா..? டாடிக்குத் தெரிஞ்சா அவ்வளவுதான்.."

பேசியபடியே பிளாட்பாரத்தில் நடந்தார்கள்.. சரவணன் ஏறவேண்டிய ஏஸி கம்பார்ட்மெண்டின் பக்கத்திலே வந்ததும் கைக்கடிகாரத்தில் மணி பார்த்தான் குமார்..

"டிரெயின் கிளம்ப பிப்டீன் மினிட்ஸ் பாக்கியிருக்கு.. கூல் ஏதாச்சும குடிக்கலாமா..?"

"ஓகே.."

குமார் வாங்கிக் கொண்டு வந்த குளிர்பான பாட்டிலில் இருந்த ஸ்ட்ராவில் உறிஞ்சியபடி நண்பனுடன் கதை பேசிக் கொண்டிருந்த சரவணன் யதேச்சையாகத் திரும்பி கம்பார்ட்மெண்டைப் பார்த்தான்.. ஜன்னலோரமாக ஒரு அழகிய பெண் அமர்ந்திருந்தாள்.. சரவணனின் கண்களில் எரிந்த பல்லைக் கண்டு விட்டுத் திரும்பிப் பார்த்த குமார்..

"உனக்கு மச்சம்டா.." என்றான்..

அதை ஆமோதிப்பதைப் போல தலையசைக்கப் போன சரவணனின் பார்வை அந்தப் பெண்ணின் பக்கத்திலிருந்த தடியன்களின் மீது சென்றது..

"அக்கட சூடு.." குமாரிடம் அவர்களைக் காட்டினான்..

"இவனுக யாருடா..?"

"யாருக்குத் தெரியும்..?"

"நீ மச்சக்காரன்ங்கிறதை நான் வாபஸ் வாங்கிக்கறேன்.. எதுக்கும் ஜர்னி முழுக்க அந்தப் பெண்பக்கம் திரும்பாம மெயின்டெயின் பண்ணு.. உனக்கு அது கஷ்ட.ம்தான்னாலும் நோ அதர் வே மச்சி.."

"பார்க்கலாம்.."

டிரெயின் நகரப் போவதற்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்தன.. சரவணன் டிரெயினில் ஏறிக்கொண்டான்.. குமாரிடம் பேசிக் கொண்டிருந்த போதே டிரெயின் நகர ஆரம்பித்ததில் குமார் கையாட்டி விடை கொடுத்து விட்டு

நகர்ந்து விட்டான்.. சரவணன் உள்ளே போகாமல் டிரெயினின் வாசல் கம்பியைப் பிடித்தபடி சாய்ந்து நின்று நகரும் டிரெயினின் வேகத்தை ரசித்தான்..

அப்போதுதான் அவளைப் பார்த்தான்..

'இவ எப்ப கீழே இறங்கினா..?'

அவனுடைய கம்பார்ட்மெண்டில் உட்கார்ந்திருந்த அந்த அழகிய இளம்பெண் பிளாட்பாரத்தில் ஓடிவந்து கொண்டிருந்தாள்.

'டிரெயினைப் பிடிக்க ஓடி வர்றாளா..?'

சரவணன் சட்டென்று ஹீரோவாகி கம்பியை ஒரு கையால் பிடித்தபடி லாவகமாக குனிந்து பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்த வளின் இடையைப் பற்றி அலேக்காக தூக்கி விட்டான்..

'அசந்து போயிருப்பா..'

மகிழ்ந்து போனவன் அவளை டிரெயினுக்குள் இறக்கி விடுவதற்கும்.. டிரெயின் வேகமெடுத்து ஓடுவதற்கும் சரியாக இருந்தது.. வேக மூச்சுக்களை இழுத்துவிட்ட அந்தப் பெண்ணின் முகம் சிவந்திருந்தது..

'வெட்கமா இருக்கும்..' சரவணன் கூலிங் கிளாஸை சரி பண்ணிக் கொண்டான்..

அவள் எதையோ சொல்ல வாய் திறந்த போது..

"இட்ஸ் ஆல்ரைட்.." என்று ஸ்டைலாக தோள்களைக் குலுக்கினான்.. அவள் அவனை கூர்ந்து பார்த்து விட்டு..

"என்ன இட்ஸ் ஆல்ரைட்..?" என்று விசாரித்தாள்..

"தேங்க்ஸ் சொல்லலாம்ன்னுதான வாயைத் திறந்தீங்க.. அதுக்குத்தான் இட்ஸ் ஆல்ரைட்டுன்னு சொன்னேன்.." சரவணன் விளக்கம் சொன்னான்..

"மண்ணாங்கட்டி..!" என்று அவள் வெடித்தாள்..

"வாட்..?"

உதவி செய்ததற்கு நன்றி நவிழாமல் அவள் மண்ணாங்கட்டியை விளித்ததின் மர்மம் அவனுக்குப் புரியவில்லை..

"பிளாட்பாரத்தில் நின்னுக்கிட்டு இருந்தவளை என்ன அலுவலுக்காக டிரெயினுக்குள் தூக்கி விட்டிருக்கீங்க..?" அவள் பாய்ந்த போது.. என்னங்கடா இது என்று ஆகிவிட்டது அவனுக்கு..

'ஏண்டா சரவணா.. இப்படியா சொதப்பி வைப்ப..?' அவன் மனச்சாட்சி கேலி செய்ததில்..

"ஏங்க.. நீங்க டிரெயினுக்குள்ளதானே உட்கார்ந்திருந்தீங்க..?" என்று அவன் சண்டைக்குப் போனான்..

"அதையும் பார்த்தாச்சா..?"

"பார்த்தாச்சு.. அதனாலதான் நீங்க டிரெயினை மிஸ் பண்ணிருவீங்களோன்னு தூக்கி விட்டேன்.. அது தப்பா..?"

"தப்புத்தான்.."

அவள் விழிகள் கனலைக் கக்கின.. நல்லதுக்கே காலம் இல்லையா என்று சலித்துக் கொண்டான் சரவணன்..

"எதுக்கோ பிளாட்பாரத்தில இறங்கினிங்க.. டிரெயின் கிளம்பிருச்சு.. உங்களால ஏற முடியாதுன்னு இடுப்பில கை கொடுத்து தூக்கிட்டேன்.. அதுக்கா இத்தனை கோபம்..? ஆபத்துக்கு பாவமில்லைன்னு கேட்டதில்லையா..?"

"உங்களை.." அவள் பல்லைக் கடித்தாள்..

"எதுக்கோ பிளாட்பாரத்தில இறங்கலை.. டிரெயின் நகருகிறதைத் தெரிஞ்சுதான் பிளாட்பாரத்தில குதிச்சேன்.."

"ஈஸிட்..? நான் பார்க்கலையே.."

"நீங்க உங்க பிரண்டுகூட குழாவிக்கிட்டு இருந்தீங்க.."

"எல்கேஜியில இருந்து காலேஜ் வரைக்கும் கூடப் படிச்ச பிரண்ட்ஷிப்புங்க... அப்படித்தான் குழாவிக்குவோம்.."

"என்னவோ செய்து தொலைங்க.. என்னைத் தப்பிக்க விடாம எதுக்காக இம்சை செய்கறீங்க..?"

"தப்பிக்கிறதா..? நீங்களா..? எதுக்குங்க..?"

"ஊம்..? கட்டாயக் கல்யாணத்தில இருந்து தப்பிக்க.."

அவள் அலுத்துக் கொண்டபடி உள்ளே போனாள்... அங்கேயிருந்த தடிமாட்டு தாண்டவராயன்கள் இவளைக் கண்டதும் நிம்மதியாகி வழி விட்டு உட்கார்ந்தார்கள்.. ஜன்னலோரமாக சரிந்து கொண்டவள் சரவணனை முறைத்துக் கொண்டே இருந்ததில் அவன் கவலையாகிப் போனான்..

இருந்திருந்து ஒரு அழகிய பெண்ணின் விரோதத்திற்கா அவன் ஆளாக வேண்டும்..?

அவளைச் சமாதானப் படுத்தும் வகையறியாது திகைத்தான்.. அவளுடன் பேசப் போனால் அருகிலிருந்த தடியன்கள் முறைத்தனர்.. எதற்கடா வம்பு என்று அவர்களிடமே பேச்சுக் கொடுக்க முயன்றான் சரவணன்..

"எந்த ஊருக்குப் போறிங்க..?"

"கட்டாயம் சொல்லித்தான் ஆகனுமா..?"

கேட்டவனின் விழிகளில் சரவணனின் எழும்புகளை எண்ணி விடும் உத்தேசமிருந்ததில் மரியாதையாக வாயை மூடிக் கொண்டான் சரவணன்..

'ஒரு பிகருக்காக ஓடற டிரெயினில் பைட் பண்ணனுமா..?'

அது வேலைக்கு ஆகாது என்பதில் ஜன்னல் பக்கமாக திரும்பி வெளியே கொஞ்சம் வேடிக்கை பார்ப்பதும்.. எதிரில் அமர்ந்திருப்பவளை நோட்டம் பார்ப்பதுமாக பொழுதைப் போக்க ஆரம்பித்தான்..

அப்படி அவளை அவன் நோட்டம் போடும் போதெல்லாம் அவள் அவனை வெட்டி விடுவதைப் போல பார்த்து வைத்தாள்.. எதன்பொருட்டு கோபப்படுகிறாள் என்று தெரிந்திருந்ததால் அவளது அனல் பார்வையில் அவன் பின்வாங்கி தப்பித்தான்..

'கட்டாயக் கல்யாணமா..?'

அவளின் அபரிதமான அழகை ஆராய்ந்தவனுக்கு இந்தப் பேரழகைக் கண்டவர்கள் அவளைக் கட்டாயப்

படுத்தியேனும் திருமணம் செய்து கொள்ள முனையத்தானே செய்வார்கள் என்று தனக்குள் கேட்டுக் கொண்டான்..

அப்படியொரு திருமணத்திலிருந்து தப்பிக்க விடாமல் அவளுக்கு உதவுகிறேன் பேர்வழியென்று டிரெயினுக்குள் தூக்கி விட்டு விட்டானே..

எப்படியாவது தான் செய்த தவறை சமன் செய்ய வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது.. அவளது அழகிய பெரிய கருவிழிகளில் சூழ்ந்திருந்த கலக்கத்தை விரட்டியடிக்க வேண்டும்..

'என்ன செய்வது..?'

எதிரில் இருந்த தடி மாடுகளைப் பார்த்தான்.. ரயிலின் ஆட்டத்தில் விழிகள் சொக்க அவர்கள் இருவரும் ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து என்று தூங்கி வழிந்து கொண்டிருந்தார்கள்..

அவன் அவளைப் பார்த்தபடி எழுந்தான்..

லேசாக கண் சமிக்ஞை செய்தான்..

"கண்ணடிக்கிறயா..?" அவள் முறைத்ததில்..

'தேவைதான் எனக்கு..' என்று தலையில் அடித்துக் கொண்டான்..

இந்த லட்சணத்தில் இருந்தால் எப்படித்தான் அவளுக்கு உதவி செய்வது..?

சொக்கிக் கொண்டிருந்த தூக்கத்தைத் கைவிட்ட சொக்கத்தங்கங்களில் ஒருவனின் காதில் அவள் கேள்வி விழுந்து விட்டது போல.. அவன் முழுதாகத் தூக்கத்தை விரட்டியடித்து விட்டு..

"என்னது..? கண்ணடிக்கிறானா..? டாய்.." என்று சவுண்டு விட்டான்..

அவ்வளவுதான் மற்ற சொக்கத் தங்கங்களும் சொக்கிக் கொண்டிருந்த தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்ள.. தப்பிக்க மார்க்கம் தேடினான் சரவணன்..

எங்கே..? அந்த இளம் பெண்ணை சைட் அடிக்கத் தோதாக இருக்கும் என்று அவளுக்கு எதிரே ஜன்னல் பக்கமாக உட்கார்ந்து தொலைத்து விட்டதில் அந்தத் தடியன்களில் இருவர் அவன் பக்கத்தில் வாகாக உட்கார்ந்து விட்டார்களே..

அவர்களைக் கடந்து எப்படி அவன் தப்பிப்பான்..?

"என்னடா கருணா..?"

"இந்தப்பய நம்ம பாப்பாவப் பாத்துக் கண்ணடிச்சானாம்டா.."

"அடிடா அவனை.."

"மிதிடா.."

நான்கு தடியன்களும் கூக்குரல் எழுப்ப.. தொலைந்தோம் என்றுதான் நினைத்தான் சரவணன்.. அந்தத் தடியன்களின் எழுச்சியைக் குயிலினும் இனிய தேன்குரல் தடுத்து நிறுத்தியது..

"கண்ணடிக்கிறயான்னு கேட்கலைண்ணா.. கண்ணை அடிக்கிற மாதிரி லைட் வெளிச்சம் உறுத்துதே.. அதை ஆஃப் பண்ண முடியுமா, முடியாதான்னுதான் சத்தம் போட்டேன்.."

"அப்படியா பாப்பா.."

மற்ற தடியன்கள் மூவரும் 'கருணா' என்றழைக் கப்பட்ட தடியனை முறைத்துப் பார்த்தாகள்.. எப்பேற்பட்டத் தூக்கம் சொக்கிக் கொண்டு வந்தது..? ரயிலின் தாலாட்டில் ஏஸி கம்பார்ட்மெண்டில் கம்பளியைப் போர்த்திக் கொண்டு தூங்கும் சுகமே தனியல்லவா..? அதைக் கெடுத்த கருணாவை என்ன செய்தால் தேவலாம்..

"ஏண்டா எருமைமாடே..! உன் காதுதான் டமாரமாச்சே.. ஒழுங்காக் கேக்காம இப்படியா கூப்பாடு போட்டு பாப்பாவைத் தொந்தரவு பண்ணுவ..?"

கொதித்த தடியனின் கோபம் 'பாப்பா'வைத் தொந்தரவு பண்ணியதற்காக வந்ததில்லையென்று தடியனுக்கும் தெரியும்.. கருணாவுக்கும் தெரியும்..

"இல்லடா பொன்னா.. என் காதில அப்படித்தான் விழுந்துச்சு.."

"விழும்.. விழும்.. ஆளப்பாரு.. எனக்கு நல்லா வந்திரும் வாயில.. இருக்கிற இருப்பில இவன் ஒருத்தன்.."

கருணாவுக்கு தன் செவிகளின் செவி மடுக்கும் திறனில் சந்தேகம் வந்தது.. அவன் காதுகளில் மிகத் தெளிவாக 'கண்ணடிக் கிறயா..?' என்ற ஒற்றை வார்த்தைதானே விழுந்தது..?

'பாப்பா எப்படி அத்தனை வார்த்தைகளைக் கோர்வையாச் சொல்லுது..?'

குழம்பிப் போனவனாக அவன் கண்களை மூடித் தூங்க முயன்றான்.. ரயிலின் ஆட்டத்தில் அவன் சரவணனின் தோளில் தலைசாய்த்துச் சயனிக்க முயல சரவணனுக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது..

'ச்சை..! இது என்ன ஏஸி கம்பார்ட்மெண்டா..? இல்லை எருமை மாடுகளின் கூடாரமா..?'

எதிரில் இருந்த பரதேவதைதான் அவன் கண்ணடித்தான் என்ற குற்றச்சாட்டிலிருந்து விடுதலை வாங்கிக் கொடுத்து விட்டாளே.. அதற்கு மேலும் அந்தத் தடியன்களிடம் பேச பயப்படவேண்டுமா என்ன..?

"ஹலோ.." அவன் தோளைக் குலுக்கி நகர்ந்து உட்கார்ந்தான்..

சாமியாடிக் கொண்டிருந்த கருணா சரவணனின் மடிமீது விழுந்துவிட.. பொறுத்தது போதும் என்ற சரவணன் பொங்கி எழுந்தான்..

"என்ன மிஸ்டர்..? இந்த மொத்தக் கம்பார்ட்மெண்டையும் விலைக்கு வாங்கியிருக்கீங்களா..?"

மடியில் கிடந்தவனைத் தள்ளி விட்டு அவன் போட்ட சப்தத்தில் அந்தக் கம்பார்ட்மெண்டே விழித்துக் கொண்டது..

"இப்ப என்னத்தடா பண்ணித் தொலைச்ச..?"

பொன்னனாகப்பட்டவன் விழித்த விழியில் கருணாவின் தூக்கம் இறக்கை கட்டிக் கொண்டு பறந்துவிட.. அவன் சரவணனை விரோதமாகப் பார்த்தபடி..

"ஒன்னுமில்லடா மாப்பிள்ள.. தூக்கச் சடவில ஐயா மேல சாஞ்சுப்புட்டேனாம்.. துரை கொதிக்கிறாரு.." என்றான்..

"வாட்'ஸ் தி பிராப்ளம்.." என்றபடி அங்கே வந்தார் டி.டி.ஆர் அவரிடம் டிக்கெட்டை எடுத்து நீட்டியபடி..

"இது என்னோட சீட் சார்.. இவங்களுக்கு அங்கே பர்த்.. அதில படுக்காம என் பக்கத்தில உட்கார்ந்து அடிச்சாட்டியம் பண்றாங்க.. இந்த ஆள் என்னடான்னா என் மடியில தலை வைத்துப் படுத்துத் தூங்கறான்.." என்று பொருமினான் சரவணன்..

"ஐ.. ஸீ.."

டிக்கெட்டை செக் பண்ணியபடி அவர்களையும் அடிப் பார்வையில் நோட்டமிட்டார் டி.டி.ஆர்.. சரவணனின்

மேல்தட்டுத் தோற்றத்தையும்.. மற்ற நால்வரின் 'அடியாள்' போன்ற தோற்றத்தையும் பார்த்தவருக்கு சரவணனின் துன்பம் புரிந்தது..

"உங்க சீட்டில உட்காராம மத்தவங்க சீட்டில உட்கார்ந்து அவர்களை டிஸ்டர்ப் பண்ணக் கூடாது.." கண்டிப்புடன் சொன்னார்..

கொதித்துப் போன கருணா ஏதோ பேச முற்பட்ட போது பொன்னன் அவனைப் பார்வையால் அதட்டி அடக்கினான்.. டி.டி.ஆர் போனதும்..

"அறிவிருக்காடா உனக்கு..? கவர்ண்ட்மெண்டு ஆளுககிட்ட வம்புக்கு போறியே.. அந்தாளுபாட்டுக்கு ரயில்வே போலிஸைக் கூப்பிட்டுட்டா கதை கந்தலாகிராதா..?" என்று கடிந்து கொண்டான்.

"ஆமாண்டா மாப்பிள்ளை.. அதை மறந்து போனேன் பாரு.."

வேறு வழியில்லாமல் அப்பர் பர்த்தில் ஏறிப் படுத்த கருணா அங்கிருந்து குப்புறக் கவிழ்ந்து சரவணனைப் பார்த்து ஒற்றை விரலை உயர்த்தி இருக்குடா உனக்கு என்று எச்சரித்தான்..

'இருந்தா அதைப் பத்திரமா நீயே வைத்துக்க..' எரிச்சலுடன் கால்களை நீட்டித் தனது சீட்டை ஆக்ரமித்து பாதுகாத்துக் கொண்ட சரவணன் ஒரு பக்கமாக திரும்பிப் படுத்தான்..

தங்களுக்கும் சேர்த்துத்தான் டி.டி.ஆர் உத்தரவு போட்டிருக் கிறார் என்பதைப் புரிந்து கொண்டிருந்த அந்தப் பொன்னனும் இன்னொருவனும் அவர்களுக்கான பர்த்தில் படுக்க.. அந்தப் பெண்ணும் சரவணனைப் போல கால்களை நீட்டிப் படுத்திருந்தாள்..

இப்போது தைரியமாக அவளை நோட்டமிட்டான் சரவணன்.. கொடி போன்ற உடலும்.. சேலையின் விளிம்பைத் தாண்டி முயல்குட்டி போல நீண்டிருந்த மென்மையான பாதங்களுமாக அவளது தோற்றம் அவனை தொந்தரவு செய்தது..

சங்குக்கழுத்தும்.. அதில் தவழ்ந்த நீண்ட பின்னலும் அவனை ஈர்த்தன.. முழுநிலவு முகம் என்று நினைத்துக் கொண்டான்..

கண்ணுக்கு அழகான பெண்கள் நொடிப் பொழுதில் வாலிபர்களை கவிஞர்களாக ஆக்கி விடுகிறார்கள்..

'தூங்கறாளா..?'

கட்டாயத் திருமணத்தில் மாட்டிக் கொள்ளப் போகிறவள் எப்படி இப்படி நிச்சிந்தையாக தூங்குகிறாள் என்றிருந்தது அவனுக்கு..

அவளுக்கு தாய், தகப்பன் இல்லையா..? அவர்கள்தான் இவளை கட்டாயத் திருமணம் செய்து கொள் என்று கட்டாயப் படுத்துகிறார்களா..?

'ஒரு மண்ணும் புரியலை..'

அவள் எந்த ஊருக்குப் போகிறாள் என்று அறிந்து கொள்ள அவனுக்கு ஆவலாக இருந்தது..

'கேட்டாச் சொல்லிட்டுத்தான் வேறு வேலையைப் பார்ப்பா..'

அவனும் அவளைப் போலவே ஒரு கையால் விழிகளை மறைத்துத் தூங்க முயற்சி செய்தான்.. தூக்கம் வந்து தொலைப்பேனா என்று மல்லுக்கட்டியது..

எதிரில் தேவதையைப் போல அழகான இளம் பெண்ணொருத்தி படுத்திருக்கிறாள்.. அவ பாவம்.. கட்டாயத் திருமணத்தில் மாட்டிக் கொள்ளச் செல்கிறவளாம்.. தப்பிக்க முயன்று பிளாட்பாரத்தில் குதித்தவளை உதவி செய்கிறேன் பேர்வழியென்று இடுப்பில் கைகொடுத்து அலேக்காக தூக்கி ரயிலுக்குள் விட்டு விட்ட அறிவாளி அவன்.. என்ன செய்து அந்தப் பிழையை சரிசெய்யப் போகிறான்..?

'அட்லீஸ்ட்.. இவ பெயரையாவது தெரிஞ்சுக்கனும்..'

அவன் எழுந்தான்.. ஏஸி கம்பார்ட்மெண்டின் கதவைத் திறந்து வாசல் பக்கமாகப் போனான்.. லேசாக எட்டிப் பார்த்து ரயிலின் பக்கவாட்டில் ஒட்டப் பட்டிருந்த பெயர் பட்டியலில் அவள் பெயரைத் தேடினான்..

"ஆர்த்தி.."

அவன் காதோரமாக குயில் கூவியது.. தலையை உள்ளே இழுத்துக் கொண்டவனின் எதிரே சாய்ந்து நின்றாள் அவள்..

"இதைப் படிக்கிறேன்னு டிரெயினில இருந்து விழுந்து வைச்சிரப் போறிங்க.."

"தேங்க்ஸ்.." பார்வையில் அவளைத் தின்றான்..

"எதுக்கு..? பெயரைச் சொன்னதற்கா..?" தலையைச் சாய்த்து அவள் கேட்ட விதத்தில் தடுக்கி விழுந்தான்..

"இல்லை.. உங்க பாடிகார்டுககிட்டயிருந்து என்னைக் காப்பாற்றினதுக்கு.." அவளை ஆழமாகப் பார்த்தான்..

அவன் பார்வை ஏன் என்னைக் காப்பாற்றினாய் என்று கேட்டது..

"நீங்க கண்ணடிக்கலைன்னு எனக்குத் தெரியும்.." எதிர் காற்றில் அலைபாய்ந்த முடியைக் கோதியபடி அவள் சொன்னாள்..

"தெரிந்துமா அந்தக் கேள்வி கேட்டிங்க..?"

"நான் கேட்டது கருணா அண்ணா காதில விழுந்து வைக்கும்ன்னு எதிர்பார்க்கலை.."

"கருணா அண்ணனா..?"

"ஊம்.."

"ஏங்க.. அவங்களே உங்களைக் கடத்திக்கிட்டுப் போறாங்க.. அவர்களைப் போய் அண்ணாங்கறிங்க..?"

என்ன கொடுமையோ என்று அலுத்துக் கொண்டான் சரவணன்.. கடத்தல்காரர்கள் அண்ணனாக ஆவார்களா..?

3

"சின்ன வயசில இருந்து அப்படித்தான் கூப்பிட்டுப் பழக்கம்.."

மெல்லிய குரலில் பேசினாள் ஆர்த்தி.. அவள் பார்வை கடந்து போன மின் கம்பங்களில் பதிந்து பதிந்து மீண்டது.. அவள் விழிகளில் ததும்பிய சோகத்தில் சரவணன விசனம் கொண்டான்..

இந்த அழகான பெண்ணுக்கு துணை செய்ய யாருமில்லையா..?

"சின்ன வயசுன்னா..?"

"நான் பிறந்ததில் இருந்துன்னு வைத்துக்கலாம்.."

"என்னங்க இது.."

"ம்ம்ம்.. இவங்க நாலு பேரும் என்னைத் தூக்கி வளர்த்தவங்க.."

"அப்படிப்பட்டவங்க எதுக்காக உங்களைக் கடத்திக்கிட்டுப் போகிறாங்க.. உங்க மேல பாசமில்லையா..?"

"அது நிறைய இருக்கு.. ஆனா.. அதைவிட அதிகமா எங்கப்பா மேல பயமும், விசுவாசமும் இருக்கே.."

அமைதியாக சொன்னாள் ஆர்த்தி.. துயரத்தில் தோய்ந்திருந்த அவளது வார்த்தைகளில் விம்மலின் சாயல் இருப்பதை உணர்ந்தான் சரவணன்.. இருளில் மிளிரும் விளக்குகளின் வெளிச்சப் புள்ளிகளைக் கணக்கில் எடுப்பதைப் போல பார்த்துக் கொண்டிருந்தவளின் பார்வையில் தென்பட்ட விரக்தியில் சரவணனின் மனம் நைந்தது.. ஏதோ ஒரு வகையில் அவளுக்கு அவனும் அநீதி இழைத்து விட்டதைப் போல துயரம் கொண்டான்..

"உங்க அப்பாவா உங்களைக் கடத்திக்கிட்டு வரச் சொல்லியிருக்காரு..?" சரவணனால் நம்ப முடியவில்லை..

ஆமாம் என்ற பாவனையில் தலையசைத்தவளின் விழிகள் பளபளத்தன.. முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.. அழுகிறாளோ என்று தவித்துப் போனான் சரவணன்..

"ஏன் ஆர்த்தி..?"

அவன் குரலில் தொனித்த ஆதங்கத்தில் அவள் முகம் உயர்த்தி அவனைப் பார்த்தாள்.. அவளுக்காக அவன் தவிக்கும் தவிப்பை அவனது விழிகள் பிரதிபலித்ததில் அவள் முகம் கனிந்தது.. வார்த்தைகள் தேவையற்ற மௌனம் அவர்களைச் சூழ்ந்தது..

"தடக்.. தடக்.."

சீரான லயத்துடன் ரயில் ஓடிக் கொண்டிருந்தது.. நள்ளிரவைத் தொட்டுக் கொண்டிருந்த அந்த நேரத்தில் பயணிகள் அனைவரும் ஏஸியின் இதமான குளிரில்

கம்பளியைப் போர்த்திக் கொண்டு தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.. சரவணனும், ஆர்த்தியும் மட்டும் ஏதும் பேசாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி எதிரும், புதிருமா சாய்ந்து நின்றிருந்தார்கள்..

"ஏன்..?"

தனக்குத்தானே கேட்டுக் கொள்பவளைப் போல மௌனத்தை உடைத்தாள் ஆர்த்தி.. அவள் விழிகள் இருளில் எதையோத் தேடுவதைப் போலத் துழாவின.. அவளது தேடுதல் எதுவாக இருக்கக்கூடும் என்று யோசித்தான் சரவணன்..

"ஏன்ங்கிற கேள்வியைப் பலமுறை எனக்கு நானே கேட்டிருக் கிறேன்.. மிஸ்டர்.."

"சரவணன்.."

"சரவணன்.. அருமையான பெயர்.."

"உங்க பெயர் அழகான பெயர்.."

அவளுக்கும், அவனுக்குமான தனிமையை அவன் பயன் படுத்திக் கொள்கிறான் என்று நினைத்துக் கொள்வாளோ என்ற தயக்கத்துடன்தான் அவன் அதைச் சொன்னான்.. நல்லவேளை..! அவள் தவறாக எடுத்துக் கொள்ளவில்லை.. மென்மையாக சிரித்தாள்.

"என் அம்மா வைத்த பெயர்.."

இதைச் சொல்லும் போது ஒலித்த அவளது குரலின்

தழுதழுப்பில் அவனுக்குள் ஏதோ தோன்றியது.. அதைப் பட்டென்று கேட்டு விடவும் முடியாது.. எனவே அவளைப் பேச விட்டு அமைதி காத்தான்..

"அம்மா இப்ப இல்லை.. எனக்கு எட்டு வயதா இருந்தப்ப விசக்காய்ச்சல்ன்னு படுத்தாங்க.. எழுந்திருக்கவே இல்லை.."

"ஐ ஆம் ஸாரி.." வருத்தத்துடன் சொன்னான் சரவணன்..

அவனுடைய வருத்தத்தில் இதமாக உணர்ந்தாள் ஆர்த்தி.. அந்த நன்றியுணர்வை கண்களில் பிரதிபலித்தாள்.. லேசான நட்பின் இழை அவர்களுக்கு இடையில் உண்டானது.. எவரிடமும் பகிர்ந்து கொள்ளாத அவளின் சோகங்களை அவனிடம் பகிர்ந்து கொள்ளலாம் போல அவளுக்குத் தோன்றியது.. சோகத்தின் கனம் தாங்காமல் தவித்துக் கொண்டிருந்தவளுக்கு.. அதன் மதிப்பறிந்து செவி கொடுக்கும் ஒருவனிடம் அதை இறக்கி வைத்து விட வேண்டும் போலத் தோன்றியதில் வியப்பில்லை.. இது சாய்ந்து கொள்ளத் தோள் தேடும் ஜீவன்களின் மனதில் உண்டாகும் தவிப்புத்தான்..

"அவங்க இருந்திருந்தா இப்படிக் கட்டாயக் கல்யாணத்துக்குப் பயந்து ஊர், ஊரா ஓடி ஒளிய வேண்டிய நிலைமை எனக்கு ஏற்பட்டிருக்காது.."

கோடியில் ஒரு வார்த்தை என்று நினைத்துக் கொண்டான் சரவணன்.. தாயின் சிறகுகளுக்கடியில்

கிடைக்கும் பாதுகாப்பை வேறு எவராலும் கொடுத்து விட முடியாதுதான்..

"அப்பா மறுகல்யாணம் பண்ணிக்கிட்டாங்க.."

"சித்தி கொடுமை..?"

"ம்ம்ம்..."

வார்த்தைகளால் உணர்த்த முடியாத துயரத்தை அந்த முணுமுணுத்தல் உணர்த்தியது.. ஆர்த்தியை இரக்கத்துடன் பார்த்தான் சரவணன்..

'இவள் தாயில்லாப் பெண்ணா..?'

"சித்தி சாகசம் தெரிந்தவங்க.."

'பெரும்பான்மையான சித்திகள் இப்படித்தானே இருக்கிறார்கள்..?' சரவணன் பெருமூச்சு விட்டான்..

விதிவிலக்காக சில சித்திகள் இருப்பதுண்டு.. அப்படிப்பட்ட 'சித்தி..' வாய்க்க கொடுத்து வைத்திருக்க வேண்டும்.. ஆர்த்தி பாவம்.. கொடுத்து வைக்கவில்லை போல..

இரண்டாம் மனைவியாக வாழ வருகிறவர்களின் மனதில் இயல்பாகவே ஒரு பாதுகாப்பில்லாத உணர்வு தோன்றி விடுகிறது.. வேறு ஒரு பெண் பெற்ற பிள்ளைகளுக்கு அவளுடைய கணவன் தந்தை என்ற முறையில் சொந்தமாகி நிற்பதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. என் கணவன்தான், எனக்கு மட்டும்தான் என்று அவள் அவனை மூத்த தாரத்தின்

குழந்தைகளிடமிருந்து விலக்கி அவள் பக்கமாக இழுக்கப் பார்க்கிறாள்.. நாளடைவில் அவளுக்கும் குழந்தைகள் பிறந்துவிட என் கணவன் நான் பெற்ற குழந்தைகளுக்கு மட்டும்தான் தகப்பன் என்று வட்டம் போட்டு மூத்த தாரத்தின் குழந்தைகளை அநாதையாக்கி விடுகிறாள்..

அது ஒரு போராட்டம்..! வில்லியாக இருந்தாலும் இரண்டாம் மனைவியாக வாழ வருபவளும் ஒரு பெண்தானே.. அவளது போராட்டத்தில் அவள் தரப்பில் ஒரு நியாயம் இருக்கத்தானே செய்கிறது..?

இதில் அநாதையாகி விடும் மூத்த தாரத்தின் குழந்தைகளுக்கான முழுப் பொறுப்பும் அந்தத் தகப்பனைத்தானே சேர்ந்தது..? அவனல்லவா இரண்டாம் மனைவியின் மன பயத்தைப் போக்கி.. அவனுடைய குழந்தைகளை அவளை ஏற்றுக் கொள்ளச் செய்திருக்க வேண்டம்..?

"எங்க வீட்டுக்குள்ளே காலடி வைச்சதும் அவங்க செய்த முதல்வேலை என்னையும் அப்பாவையும் பிரிச்சு வைச்சதுதான்.."

"அவங்க பிரிச்சா உங்க அப்பா ஏங்க பிரியறாரு..?"

சரவணன் கோபப்பட்டான்.. அவள் பெருமூச்சு விட்டாள்..

"எட்டு வயசுப் பெண்ணால இதை யோசிக்க முடியுமா..?"

'எப்படி முடியும்..?'

அனுதாபத்துடன் ஆர்த்தியைப் பார்த்தான்... அவள் விரக்தியுடன் வெளியே பார்த்தாள்.. காற்றில் ஆடிய கூந்தலின் நுனிகள் அவளது சோகத்தை உணர்ந்ததைப் போல அவளது நெற்றியை வருடிக் கொடுத்து அவளை ஆறுதல் படுத்திக் கொண்டிருந்தன.. அந்தக் கூந்தலின் நுனிகளாக அவன் இருக்கக் கூடாதா என்று ஏக்கப்பட்டான் சரவணன்.. சோகத்தில் தொய்ந்து நிற்பவளின் நெற்றியை வருடிக் கொடுத்திருக்கலாமே..

அந்தப் பேரழகி எட்டு வயது சிறுமியாக இருந்தபோது தாயை இழந்தவள்.. தந்தையின் மறுமணத்தால் தந்தையிடமிருந்து விலக்கி நிறுத்தப்பட்டவள் என்ற உண்மையில் அவன் மனம் கனத்தது..

"அவங்க என்ன சொல்வாங்க.. ஏது சொல்வாங்கன்னு தெரியாது.. அப்பா கோபப்படுவார்.. சப்தம் போடுவார்.."

"அடிப்பாரா..?" மனம் துடிக்கக் கேட்டான்..

"ஊஹூம்.." தலையை ஆட்டி மறுத்தாள்..

"அதை மட்டும் அவர் செய்ய மாட்டார்.. அதில் சித்தி கோபப் படுவாங்க.. அடியாத பிள்ளை படியாதும்பாங்க.. பிள்ளைக்குத்தான் அந்தப் பழமொழி பொருந்தும்.. பெண்ணுக்கில்லைன்னு அப்பா சொல்லிருவார்.."

"பரவாயில்லை.. இதையாவது சுயமாய் யோசிச்சிருக்காரே.."

சரவணனின் கேலிப் பேச்சில் அவள் உதட்டைக் கடித்தாள்.. என்னதான் இருந்தாலும் அவளைப் பெற்ற

அப்பாவாயிற்றே என்று தன்னைக் கடிந்து கொண்டான் சரவணன்.. அவன் யார்..? ரயிலில் சந்தித்த சிநேகிதன்.. அவனிடம் ஓர் ஆறுதலுக்காக அவள் மனதிலிருப்பதைச் சொல்கிறாள்.. அதையே ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொண்டு அவளுடைய அப்பாவை குறைவாக அவன் பேசலாமா..?

"அப்பா யோசிக்கிறவர்தான்.. அதிலும் அறிவா யோசிக் கிறவர்.. அந்த ஊருக்கு பெரிய மனிதர்.. அவர் பேச்சுக்கு ஒட்டு மொத்த ஊரும் கட்டுப்படும்.. அப்பேற்பட்ட அறிவாளி என் விசயத்தில் யோசிக்கலைன்னா எங்கேயோ.. ஏதோ.. தப்பு நடந்திருக் குன்னுதானே அர்த்தமாகுது.."

அவள் கேள்வியில் அவன் சிரித்துவிட்டு..

"கொடுத்து வைத்த அப்பா.." என்றான்..

"அவர் பக்கமா பரிஞ்சு பேசறதுக்காக இதைச் சொல்லலை சரவணன்.. சின்னப் பெண்ணா இருக்கிறப்ப சித்தி பண்ணின சூட்சுமமான காரியங்கள என்னால புரிஞ்சுக்க முடியலை.. வளர்ந்த பின்னால முடிஞ்சது.."

எது முடிந்தது என்ற கேட்கப் போன சரவணன் ரயிலின் ஓட்டம் குறைவதைக் கவனித்தான்.. விழுப்புரம் என்ற பெயர்ப் பலகையைக் கண்டதும் அவன் உடல் விறைத்தது..

"உஷ்ஷ்.." வாயில் விரலை வைத்து எச்சரித்தான்..

"இங்கே இறங்கிக்கன்னு சொல்கிறீங்களா..?" இலகுவாக கேள்வி கேட்டு அவனை அயர வைத்தாள் ஆர்த்தி..

"எப்படிங்க..?"

"இதைத்தானே அப்ப கண்ணடிச்சுச் சொன்னீங்க..?"

"கண்ணடிச்சேன்னே முடிவு கட்டிட்டீங்களா..?"

"பின்னே..? இல்லையா..?"

இமைகொட்டி அவள் சிரித்த சிரிப்பில்.. இவளா சற்றுமுன் துயரத்தில் கண்கலங்கியவள் என்று வியந்து போனான் சரவணன்..

4

ஒரு சின்னச் சிரிப்பில் அனைத்துத் துயரங்களையும் துரத்தி விடுவதென்பது எளிதான ஒன்றல்ல.. நெருஞ்சி முள்ளாய் மனதை நெருடும் துயரங்களால் அழிந்து போகாமல் அதை எதிர்கொண்டு மனதில் குருதி கொப்பளிக்கும் ரணத்தின் வலியை மறந்து சிரித்து வாழ எத்தனை பேரால் முடியும்..?

ஆர்த்தியால் அது முடிந்தது.. அவளது துயரமான கடந்த காலத்தையும், அதன் தொடர்ச்சியான நிகழ்காலத்தையும் மறந்து அவள் இலகுவாக சிரித்தாள்..

அந்தச் சிரிப்பில் தன்னை இழந்தான் சரவணன்.. அவளையே பார்த்த அவன் பார்வையின் ஊடே விரல் சொடுக்கி குனிந்தாள் அவள்..

"என்ன சார்.. வழியைச் சொல்லிட்டுத் திகைச்சு நிற்கறிங்க.. என்ன..? நான் இந்த ஊரில இறங்கி ஓடிரவா..?"

"இட்'ஸ் ஃபைன்.."

"நீங்க சொன்னா ஓகேதான்.."

அவள் உள்ளே செல்லத் திரும்ப அவன் அவள் கை பிடித்துத் தடுத்து நிறுத்தினான்..

"அப்ப என்னடான்னா இடுப்பில கை கொடுத்து அலேக் பண்ணினீங்க.. இப்ப கையைப் பிடிச்சு இழுக்கறீங்க.. எப்ப சான்ஸ் கிடைச்சாலும் டபால்ன்னு பாய்ஞ்சு கபால்ன்னு அமுக்கிக்கறிங்க பாருங்க.. அங்கே நிக்கறிங்க சாரே.."

இது விளையாடக் கூடிய நேரமா என்று தோன்றினாலும் அவளது குறும்புப் பேச்சில் வசீகரிக்கப் பட்டான் சரவணன்..

"ஆமாங்க.. உள்ளே நாலு தடியன்களை காவலுக்கு வைச்சிருக்கிற உங்க கையைப் பிடிச்சு இழுக்கறேன்.. போவிங்களா.."

"எங்கே போகச் சொல்கிறீங்க..?"

அப்போதுதான் அவள் விழுப்புரத்தில் இறங்கி எங்கே போவாள் என்பதையே யோசிக்க ஆரம்பித்தான் சரவணன்.. கும்மிருட்டில் ரயில் நிலைய விளக்குகள் மட்டும் ஒளிர.. மிகச் சிலரே ரயிலில் ஏறக் காத்து நின்றனர்..

'இந்த மிட் நைட்டில இவளைத் தனியாப் போகச் சொல்வதா..?' யோசித்தான் சரவணன்..

வேறு வழியும் தெரியவில்லை.. அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவள் புருவங்களை உயர்த்தி இறக்கினாள்..

"கமான்.. க்விக்.. சீக்கிரமா ஐடியாவச் சொல்லுங்க.. டிரெயின் நிக்கப் போகுது.."

"தெரியுதில்ல.. அப்புறம் எதுக்காக உள்ளே போகப் பார்த்தீங்க வாசல் இங்கேதானே இருக்கு..?"

"ஆனா.. என் பெட்டி உள்ளே இருக்கே.."

"என்ன பேசறிங்க நீங்க..? இப்ப அது ரொம்ப முக்கியமா..?"

"எனக்கு முக்கியம்.. மாத்து டிரஸ், பணம், சர்டிபிகேட்ஸ்ன்னு எனக்குத் தேவையான அத்தனையும் அந்தப் பெட்டியிலதான் இருக்கு.."

"சர்டிபிகேட்ஸையுமா பெட்டியில வைச்சிருக்கீங்க.. ஏங்க.. அதையெல்லாம் பத்திரமா வீட்டில வைச்சிருக்கனும்ங்க.."

"வீட்டிலதான் இருந்தது.. நான் வீட்டை விட்டு ஓடி வந்தப்ப அதை பெட்டியில அள்ளிப் போட்டுக்கிட்டு ஓடி வந்தேன்.."

என்னவோ தண்ணீர் குடிக்க வந்தேன் என்பதைப் போல வெகு இயல்பாக சொல்லி மறுபடியும் அவனை வசீகரித்தாள் ஆர்த்தி.. இவள்தான் எத்தனை இலகுவாக வாழ்வை எதிர்கொள்கிறாள் என்று வியந்து போனான் சரவணன்..

"உன்னே போனா மாட்டிக்குவீங்க.."

"யார்கிட்ட..?"

"உங்க பாடிகார்டுகிட்ட.."

"அவங்கதான் தூங்கறாங்களே.."

"அதுதாங்க எனக்கு ஆச்சரியமாயிருக்கு.. உங்களைக் கடத்திக்கிட்டு வர்றவங்க காவலுக்கு முழிச்சிருக்காம இப்படிக் கும்பகர்ணன் போல தூங்கி வழியறாங்களே.."

"அதில உங்களுக்கு ரொம்பவும் வருத்தம் போல.."

"இருக்காதா பின்னே..? அந்தத் கருணாத் தடியன் என் மடிமேல தலை வைச்சில்ல தூங்க ஆரம்பிச்சான்.."

சரவணனின் முகம் போன போக்கில் பல்வரிசை தெரிய சிரித்து மயக்கி வைத்தாள் ஆர்த்தி..

"நீங்க இருக்கீங்களே.. முடியல.."

"என்னை விடுங்க.. அந்த கும்பகர்ணன்களுக்குப் பதில் சொல்லுங்க.."

"அவங்க அப்படித்தான் தூங்குவாங்க.."

ஆர்த்தியின் குரல் ஆழ்ந்து ஒலித்தது.. அதில் தெரிந்த அமைதி விரவிய பாசத்தில் திகைத்தான் சரவணன்..

"என்னங்க..?"

"அது அப்படித்தான்.. தூக்கம் வரலைன்னாலும் தூங்கறதைப் போலக் கண்ணை மூடிக்குவாங்க.."

"எதுக்கு..?"

"நான் தப்பிச்சு போகறதைக் கண்டுக்காம இருக்கிறதுக்குத் தான்.. டிரெயின் கிளம்பினதும் நான் பிளாட்பாரத்தில குதிச்சதை அவங்க பார்த்துக்கிட்டுத்தான் இருந்தாங்க.. ஆனாலும் பார்க்காததைப் போல பேசிக்கிட்டு இருந்தாங்க.."

"ஆர்த்தி..!"

"மனுசங்களோட உடம்பைத்தான் கூலிக்கு பணிய வைக்க முடியும்.. மனசையில்ல.. அவங்க மனசு பூரா என்னைத் தூக்கி வளர்த்த பாசமிருக்கு.. இப்ப மட்டுமில்ல.. இதுக்கு முன்னாலே இரண்டு தடவை என்னைத் தப்பிப் போக விட்டிருக்காங்க.."

"கேட்கவே ஆச்சரியமா இருக்கு.. கல்லுக்குள் ஈரமா..?"

"கல்லுக்குள்தான் ஈரமிருக்கும்.. அவங்க பார்க்கத்தான் கரடு முரடா தெரிவாங்க.. மனசெல்லாம் பச்சைப் புள்ளை மாதிரி பாசம் நிறைஞ்சிருக்கும்.. ம்ஹீம்.. இவங்களும் என்னைத் தப்பிப் போகத்தான் விடறாங்க.. நான்தான் மாட்டிக்கறேன்.."

"எப்படி..?"

"நான் அடைக்கலம் தேடி ஓடற இடங்கள் என் கூடப்படிச்ச சிநேகிதிகளோட வீடுகளாத்தானே இருக்கும்..? அங்கே வந்து என்னைக் கண்டுபிடிச்சு இழுத்துக்கிட்டு வந்துருவாங்க.."

"ஓ.."

"நீங்க இப்படியே 'ஓ' போட்டுக்கிட்டு இருங்க.. நான் போயி என் பெட்டியை எடுத்துக்கிட்டு வந்துடறேன்.. டிரெயின் நிற்கப் போகுது.. ஐந்து நிமிசத்துக்குள்ள நான் இறங்கியாகனும்.."

"இங்கே இறங்கி.. எங்கே போவீங்க..?"

"தெரியலை.. யோசிக்கனும்.. என் சித்தி கண்டு பிடிக்க முடியாத இடத்துக்கு நான் ஓடிரனும்.. அதுக்கு முதல்ல டிரெயினை விட்டு இறங்கியாகனும்.. விழுப்புரம் பெரிய ஊர்.. எல்லா ஊருக்கும் டிரெயினும் இருக்கும்.. பஸ்ஸீம் கிடைக்கும்.. இங்கே இறங்கிடறதுதான் பெட்டர்.."

ஆர்த்தி அவசரமாக உள்ளே போனாள்.. அவளுக்கு காவலாக இருந்த நான்கு தடியன்களும் தூங்கிக் கொண்டிருக்க பெட்டியை எடுத்துக் கொண்டாள்.. சரவணன் அவர்களைப் பார்த்தான்.. சீரான அவர்களின் சுவாசம் இயற்கையான தூக்கம் போல இல்லாமலிருந்ததில் அவன் மனம் கனிந்தது..

'தூங்கறதைப் போல நடிக்கிறாங்க..'

அவனும் குனிந்து பெட்டியை எடுத்துக் கொண்டான்.. அதைக் கவனித்த ஆர்த்தி எதையோ பேசப் போக.. வாயில் ஒற்றைவிரலை வைத்து அவளைப் பேசாமலிருக்கும்படி எச்சரித்தான்.. விரைவாக அவன் முன்னால் போக அவள் பின் தொடர்ந்தாள்.. அவர்கள் பிளாட்பாரத்தில் குதிக்கவும் ரயில் நகரவும் சரியாக இருந்தது.. வேகமெடுத்து ரயில் விரைந்து

விட.. ஆள் நடமாட்டம் இல்லாத ரயில்வே ஸ்டேசனில் ஆர்த்தியும், சரவணனும் மெதுவாக நடந்து அங்கிருந்த பெஞ்சில் சாய்ந்து உட்கார்ந்தார்கள்..

"டீ.. சூடான டீ.."

நின்று கிளம்பிய ரயிலில் விற்கக் கொண்டு வந்த டீக்கப்புகளுடன் முன்னால் வந்து நின்றான் ஒருவன்..

"டீ சாப்பிடறிங்களா..?"

சரவணன் கேட்டான்.. குளிர் நிரம்பிய அந்த இரவு வேளையில் சூடான டீயைக் குடித்தால் தேவலையென்ற நினைவுடன் ஆர்த்தி தலையை அசைத்தாள்..

"ரெண்டு கப் டீ குடுப்பா.."

சரவணன் நீட்டிய ரூபாயை வாங்கிக் கொண்டு டீ விற்பவன் நகர்ந்து விட.. அவர்கள் இருவரும் விச்ராந்தியாக டீயைக் குடிக்க ஆரம்பித்தார்கள்..

"நீங்க ஏன் இறங்கினீங்க..?" ஆர்த்தி கேட்டாள்..

"இந்த மிட்நைட்டில உங்களைத் தனியா விட மனமில்லைங்க.."

சரவணனின் வார்தைகளில் இருந்த உண்மை அவள் மனதைத் தொட்டது.. கண்கள் கசிய அவனை நன்றியுடன் பார்த்தாள்..

"தேங்க்ஸ்.." மனமார நன்றி சொன்னவள்..

"பட்.. நான் தனியாத்தானே போயாகனும்..?" என்று விரக்தியுடன் சொன்னாள்..

"எங்கே போகப் பேறிங்க..?"

"தெரியலை.. எங்கே போனாலும் என் சித்தி கண்டு பிடிச்சுருவாங்க.. அவங்களுக்கு சூட்சும புத்தி.."

"உங்க அப்பா கண்டு பிடிக்க மாட்டாரா..?"

அவள் தலையை அசைத்தாள்.. விரக்தி இழையோடிய முகத்தில் லேசான கனிவும் கலந்திருந்தது.. விந்தையான அந்த உணர்வுக் கலவையை இமை கொட்டாமல் பார்த்தான் சரவணன்..

"அப்பா கண்டு பிடிச்சாலும் வெளியே காட்டிக்க மாட்டாரு.."

"உங்களுக்கு காவல் வந்த அண்ணாச்சிகளைப் போலவா..?"

"ம்ம்ம்.."

"பரவாயில்லை.. பெத்த பாசம் கொஞ்மாச்சும் இருக்குதே.."

"அது நிறையத்தான் இருந்தது.. இருக்குது.. அதை வெளிக் காட்ட முடியாம சித்தி வேலி போட்டு தடுத்து வைச்சிருக்காங்க.."

"வேலியை உடைக்க எத்தனை நேரமாகும்..?"

"உடைக்க முடியாத வேலியா இருந்தா எப்படி அவரால உடைக்க முடியும்..? ஊருக்கே பஞ்சாயத்து பண்றவரு.. அவரையே பஞ்சாயத்தில நிற்க வைச்சிட்டாங்க.."

"யாரு.."

"என் சாகசக்கார சூர்ப்பனகை சித்தி..!"

ஆர்த்தி வெறுப்புடன் சொன்னாள்.. அவள் முகத்தில் தீயின் ஜ்வாலை தெரிந்தது.. முப்புரத்தையும் எரிக்கும் தீ..! அநீதியைக் கண்டு பொங்கும் தீ..!

அந்த தகதகப்பில் பிரமித்துப் போனான் சரவணன்..

அந்தத் தீயின் தனலில் ஜொலிஜொலித்த அவள் முகத்தில் தெரிந்த உக்கிரத்தில் யோசனையானான் சரவணன்.. நெருக்கடியான நிலையிலும் கேலி பேசி சிரித்தவள்.. எங்கே போவது என்று தெரியாத நிலையிலும் அமைதியுடன் உரையாடியவள்.. அவளுடைய சித்தியைப் பற்றிப் பேசும்போது மட்டும் தீயின் தனலை முகத்தில் பிரதிபலிக்கிறாள் என்றால் அந்தச் சித்தி எத்தனை கொடூரமானவளாக இருக்க வேண்டும்..?

"நேரில் பார்த்தா இப்படிச் சொல்ல மாட்டிங்க.." வெறுப்புடன் சொன்னாள் ஆர்த்தி..

"ஏன்..?"

"அப்படியொரு தேஜஸா, அழகா இருப்பாங்க.. பேசற வார்த்தைக்கு வலிக்குமோன்னு மென்மையாக உச்சரிப் பாங்க.. பார்வையிலே கருணை பொங்கி வழியும்.. அதிலே விழுந்தவர்தான் என்னோட அப்பா.."

'நீங்க விழலையா..?"

ஊருக்கே நியாயம் சொல்லும் அளவுக்கு புத்திசாலியான பெரியமனிதரே ஒரு பெண்ணின் புறத்தோற்றத்தில் மயங்கி விழுந்திருக்கும் போது எட்டு வயது சிறுமியாக நின்றிருந்த ஆர்த்தி மட்டும் ஏன் மயங்கவில்லை..?

"அவங்க மயக்க நினைத்திருந்தா மயங்கியிருப்பேனோ என்னவோ.. அவங்க அதைச் செய்யலை.. அப்பாவிடம் காட்டிய மென்மையான முகத்தை என்னிடம் காட்டலை.. கடுமையைத்தான் காட்டினாங்க.."

சரவணனுக்கு பரிதாபமாக இருந்தது.. ஆர்த்தியின் சித்தி எப்படி இருப்பாள் என்று யோசித்தான்.. ஊதல் காற்று உடலைத் தழுவியதில் சிலிர்த்துப் போனவளாக சேலை முந்தானையை இழுத்துப் போர்த்தியபடி அவனைப் பார்த்து முறுவலித்த ஆர்த்தியைப் பார்த்தான்.. நிச்சயம் இவளைப் போல தேவதையின் அழகோடு இருக்க மாட்டாள் என்று நினைத்துக் கொண்டான்.. எட்டு வயதுச் சிறுமியை மருட்டும் அழகு தேவதையின் அழகாக இருக்க முடியுமா..?

"பெயரென்ன..?" என்று கேட்டான்..

"இதுதானே வேண்டாம்ங்கிறது.. பெயர் தெரியாமலா நடுஜாமத்தில பக்கத்தில உட்கார்ந்து பேசிக்கிட்டு இருக்கறீங்க..?"

"உங்க பெயரைக் கேட்கலைங்க.. உங்க சித்தியோட பெயரைக் கேட்டேன்.."

சிரித்துக் கொண்டிருந்தவள் முகம் மாறினாள்..

"சொப்னா.." என்றாள்..

"மாடர்ன் பெயரா இருக்கு.."

"அவங்களும் கொஞ்சம் மாடர்னாத்தான் இருப்பாங்க.."

"உங்க அம்மா பெயர் என்ன..?"

சரவணன் எதிர்பார்த்தபடியே கடுத்திருந்த ஆர்த்தியின் முகம் கனிந்தது.. அவளது தாயின் மடியில் தலை சாய்த்திருப்பதைப் போன்ற நெகிழ்ச்சியுடன்..

"கீர்த்தி.." என்றாள்..

"உங்க பெயருக்குப் பொருத்தமான பெயர்.."

"ஊஹூம்.. அம்மாவோட பெயருக்குப் பொருத்தமாத்தான் ஆர்த்தின்னு எனக்குப் பெயர் வைத்தாங்க.."

அந்த அளவுக்கு ஆர்த்தியின் அம்மாவிற்குத் தன் குடும்பத்தில் செல்வாக்கு இருந்திருக்கிறது என்பதை நினைத்துப் பார்த்தான் சரவணன்.. அப்படிப்பட்டச் செல்வாக்குடன் இருந்த பெண்மணியின் மகள் கட்டாயத் திருமணத்தில் இருந்து தப்பிக்க ஊர், ஊராக ஓடிக் கொண்டிருக்கிறாள்..

"உங்க அப்பாவுக்கு உங்க மேலே கொஞ்சூண்டாவது பாசம் இருக்கனுமே.."

"கொஞ்சூண்டுன்னு இல்லை.. நிறையவே இருக்கு.. அதை வெளிக்காட்டிக்க முடியாம இருக்காரு.."

"அவரிடம் உங்களுக்கு இந்தக் கல்யாணத்தில விருப்ப மில்லைன்னு சொல்லியிருக்கலாமே.."

சரவணனின் கேள்வியில் அவன் முகத்தைப் பார்க்க முடியாமல் தலையைத் திருப்பிக் கொண்டாள் ஆர்த்தி.. அவளது உதடுகள் எதையோ சொல்லத் துடிப்பதைப் போல நடுங்கின.. கண்களின் பளபளப்பிற்குக் காரணமான கண்ணீரின் பிண்ணனி எதுவாக இருக்கக் கூடும் என்று புரியாமல் குழம்பினான் சரவணன்..

'பிரச்னை என்னன்னு சொன்னாத்தானே தெரியும்...? சொல்லாம மனசுக்குள்ளேயே போட்டுக்கிட்டுப் புழுங்கினா என்னதான் செய்ய முடியும்..?'

"சொல்ல முடியாது சரவணன்.." பெருமூச்சு விட்டாள் ஆர்த்தி..

'என்னிடம் சொல்ல முடியாதுன்னு சொல்கிறாளா..?'

"சொல்லிப் பிரயோசனமும் இல்லை.."

'உன்னால என்னத்தைடா கிழிக்க முடியும்ன்னு கேட்கிறா போல..'

"அப்பாவாலே எதுவும் செய்ய முடியாது.."

'ஓ..! அவ அப்பாகிட்டச் சொல்கிறதைப் பற்றிச் சொல்றாளா..? நல்லவேளை.. என்னை எதுவும் சொல்லலை..'

"அவரோட சிச்சுவேசன் அப்படி.."

ஆர்த்தியின் துயரத்தில் கோபமானான் சரவணன்.. அவனும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறான்.. அவள்

அநியாயத்துக்கு அவளுடைய அப்பாவுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டிருக்கிறாள்.

"என்னத்தங்க மண்ணாங்கட்டி சிச்சுவேசன்..? பெத்த பொண்ணு கட்டாயக் கல்யாணத்துக்கு பயந்து ஊரை விட்டு ஓடிக்கிட்டு இருக்கு.. இவர் என்னடான்னா செய்து வைத்த சிலையாட்டம் கல்யாணத்தை நிறுத்தாம அழிச்சாட்டியம் பண்ணிக்கிட்டு இருக்கார்.. நீங்க என்னவோ சிச்சுவேசன், அது இதுன்னு கதை சொல்றீங்க.."

"கதையில்லை சரவணன்.. நிஜம்.."

"என்னவோ போங்க.. எதுவும் சரியாப் படலை.. இதுவே உங்க சித்திக்குப் பிறந்த பிள்ளைகளா இருந்தா இப்படி இருப்பாரா..?"

"இல்லை.." என்றாள் ஆர்த்தி..

"அதைச் சொல்லுங்க.. இப்பவாவது உங்க அப்பாயார்ங் கிறதை ஒப்புக்கிட்டிங்களே.. ஒரு மனிதர் இப்படியா பர்ஸ்ட் வொய்போட பெண்ணுக்கும் செகண்ட் வொய்போட பிள்ளை களுக்கும் இடையே பார்சியாலிட்டி பார்ப்பார்..?

"நீங்க தப்பாய் புரிஞ்சுக்கிட்டிங்க.."

"என்னங்க.. நீங்க..? இப்பத்தான் புத்தியோட பேசறிங்கன்னு சந்தோசப்பட்டேன்.. அதுக்குள்ளே பழையபடி பேச ஆரம்பிச் சுட்டிங்களே.."

"அது இல்லைங்க.. நான் இல்லைன்னு சொன்னது வேற ஒன்னை.."

"வேற ஒன்னா..? எது அது..?"

"என்னோட சித்திக்கு குழந்தைகள் இல்லை.."

"ஓ..!"

'எதிர்பாராத ட்விஸ்ட்டுடா சாமி..' சரவணனுக்குத் தலையைச் சுற்றியது..

'இன்னும் எத்தனை ட்விஸ்ட்களை வைத்திருக்காளோ..'

ஆர்த்தி ஏதோ யோசனையுடன் காலாட்டியபடி பேசாமல் இருந்தாள்.. அதுகூட நன்றாக இருக்கிறதே என்று தோன்றியது சரவணனுக்கு.. எதுவுமே பேசாமல் மௌனமாய் இருப்பது கூட சுகமான ஒன்றுதான்.. நினைத்துப் பார்க்கும் போது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.. அவன் எதற்காக எக்மோருக்கு வந்தான்..? இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறான்..?

சரவணனுக்கு சிரிப்பு வந்தது.. சிரித்தான்.. ஆர்த்தி மோனம் கலைந்தவளாக அவனை விசித்திரமாக பார்த்து வைத்தாள்.. இவள் என்ன நினைத்துக் கொண்டிருப்பாள் என்ற யோசனை ஓடியது சரவணனுக்கு.. அவளுடைய துயரக் கதையை ரசித்துச் சிரித்துக் கொண்டிருக்கிறான் என்று நினைப்பாளோ..

அந்த நினைவு வந்ததும் அவசரமாக சிரிப்பை நிறுத்திக் கொண்டு..

"ஸாரி.." என்றான்..

"எதுக்காக ஸாரி சொல்கிறீங்க..?" ஆர்த்தி புருவங்களை உயர்த்தினாள்..

"இல்லை, நீங்க இப்படியொரு சிச்சுவேசனில இருக்கிறப்ப நான் சிரிச்சிருக்கக் கூடாதுதான்.." குற்ற உணர்வுடன் சொன்னான் சரவணன்..

"நீங்க வேற.. இப்படியாப்பட்ட சிச்சுவேசனில இருக்கிறவளே சிரிச்சுக்கிட்டு இருக்கேன்.. நீங்க சிரிக்கிறதுக்கு என்ன..?"

இலகுவாக அவள் சொல்லியபோது அவளை அவனுக்குப் பிடித்திருந்தது.. அவன் மனதின் குற்ற உணர்வை நொடிப் பொழுதில் அவள் விலக்கி விட்டதை ஆச்சரியத்துடன் உணர்ந்தான் அவன்..

இவள்தான் எத்துனை இதமானவளாக இருக்கிறாள் என்ற பரிவு அவனுக்குள் உண்டானது..

"யு ஆர் ஸோ குட்.." என்றான்..

அவள் கசப்புடன் சிரித்துக் கொண்டாள்... அந்தச் சிரிப்பு எதற்காக என்று அவனுக்கு விளங்கவில்லை.. அவளிடம் கேட்கவும் மனமில்லை..

"எங்கே போகலாம்ன்னு இருக்கறீங்க..?" இதமாக விசாரித்தான்..

அவள் அவனைப் பார்த்த பார்வையில் திகைப்பு, குழப்பம், சிந்தனையென்று பல்வேறு உணர்ச்சிக் கலவைகள் இருந்தன..

"உங்க டயத்தை வேஸ்ட் பண்ணிக்கிட்டு இருக்கேனில்ல..?"

குற்ற உணர்வுடன் அவள் கேட்டதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அவனிருக்கும் போது அவள் குற்ற உணர்வு கொள்வதா..? எதனால் இந்தப் பரிவு என்று அவனுக்கே பிடிபட வில்லை.. அவள் தாயில்லாத பெண் என்பதனால் இருக்கலாம் என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.. கூடவே அவளிருக்கும் பரிதாப நிலையை வேறு நினைவு படுத்திக் கொண்டான்.. அப்படிப்பட்ட சூழலில் இருக்கும் பெண்ணுக்கு உதவ நினைக்கும் மனிதாபிமானம் அவனுடையது என்றது அவன் மனது..

"அதெல்லாம் இல்லைங்க.. நீங்க கில்ட்டியாய் ஃபீல் பண்ணாதீங்க.."

"எப்படி ஃபீல் பண்ணாம இருக்க முடியும்..? உங்களைப் பார்த்தா நேரத்தை அளந்து செலவளிக்கிறவரைப் போல இருக்கு.. வெட்டியாய் பொழுதைப் போக்குகிறவரைப் போல இல்லை.."

"உங்க கூடப் பேசறது வெட்டிப் பேச்சா..?"

"எனக்கு இல்லை.. உங்களுக்கும் அப்படியே இருக்கனும்னு கட்டாயம் ஒன்னுமில்லையே.."

"நான் அப்படி நினைக்கலை ஆர்த்தி.. உங்களுக்கு ஹெல்ப் பண்ணனும்னு நினைக்கறேன்.. உங்களைத் தனியா விட்டுட்டு என் வேலையைப் பார்க்கப் போனா நான் மனிதனே இல்லை.."

ஆர்த்தி உதட்டைக் கடித்தபடி பேசாமல் இருந்தாள்.. சற்றுப் பொறுத்து..

"தேங்க்ஸ்.." என்றவளின் குரல் கம்மியிருந்தது..

"இப்பச் சொல்லுங்க.. எங்கே போகப் போறிங்க..? உங்களுக்குத் துணையா நானும் வர்றேன்.. உங்களைச் சேர்க்க வேண்டிய இடத்தில சேர்த்த பின்னாலேதான் என்னால நிம்மதியா ஊருக்குப் போக முடியும்.."

ஆர்த்தி துயரத்துடன் அவனைப் பார்த்தாள்.. விழிகளில் நீர்மல்க..

"எங்கே போகிறதுன்னுதான் தெரியலையே.." என்றாள்..

அவளது துயரம் சரவணனின் மனதைப் பிசைந்தது.. எவரும் இல்லாத அநாதையாக அவன் முகம் பார்த்து அவள் மருகியதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

அவளுக்கென்று யாருமே இல்லையா..?

"நான் எங்கே போனாலும் சித்திக்கு தெரிந்து விடும்.. எனக்கு முன்னாலே அவங்க அங்கே நிற்பாங்க.."

"உங்க சித்தி எதுக்காக இத்தனை மெனக் கெடறாங்க..? உங்களுக்கு கட்டாயக் கல்யாணம் பண்ணி வைக்கிறதினால அவங்களுக்கு என்ன லாபம்..?"

"என் அப்பாவோட வாரிசான என் கழுத்தில் வேற ஒருத்தன் தாலியைக் கட்டினா சொத்து முழுசும் அவனுக்குப் போய் சேர்ந்திரும்ங்கிற எண்ணம்.."

"அதுக்கு கல்யாணத்தையே தடுத்து நிறுத்தலாமில்ல..?"

"எத்தனை நாள் நிறுத்தி வைக்க முடியும்..?"

"இப்ப மட்டும் சொத்து கை நழுவிப் போய் விடாதா..? கட்டாயக் கல்யாணம் பண்ணிக்கிறவன் சொத்தைக் கேட்காம இருப்பானா..?"

"அவனுக்கு சொத்துப் போய் சேரனும்ங்கிறதுதானே சித்தியோட எண்ணம்.."

"புரியலை.."

"சித்திக்கு ஒரேயொரு தம்பி.. இருக்கான்.. அந்தப் பொறுக்கிக்குத்தான் என்னைக் கட்டாயக் கல்யாணம் பண்ணி வைக்கப் போகிறாங்க.."

"ஓ.."

உண்மையிலேயே ஆர்த்தியின் சித்தி சொப்னா கெட்டிக் காரிதான் என்று வியந்து போனான் சரவணன்.

'என்ன ஒரு மாஸ்டர் பிளான்..!'

"அப்பாகிட்ட அவங்க சொன்னப்ப அவர் ஒப்புக்கவே இல்லை.. முடியாதுன்னு சொல்லிட்டார்.. நான் படிச்சிக்கிட்டு இருந்தேன்.. எனக்கு இதெல்லாம் தெரியாது.. கடைசி செமஸ்டர் முடிஞ்சு வீட்டுக்கு வந்தப்பதான் இப்படியொரு பேச்சு ஓடினதே எனக்குத் தெரியும்.."

"முடியாதுன்னு சொன்ன உங்க அப்பா எப்படி சம்மதம் சொன்னாரு..?"

இயல்பாகத்தான் கேட்டான் சரவணன்.. பேச்சு போகும் திசையிலேயேதான் கேள்வி கேட்டான்.. அதற்கு எதற்காக ஆர்த்தியின் உடல் தூக்கிப் போட வேண்டும் என்று அவனுக்குப் புரியவில்லை.. அவளது உதடுகள் துடித்தன.. முகத்தில் உக்கிரத்துடன் கூடிய விசனம் வந்தது.

அந்த நள்ளிரவின் குளிர் வேளையில் அப்படியொரு உக்கிரம் வந்து ஆர்த்தியின் முகத்தில் சிம்மாசனமிட்டு அமர்ந்ததில் மௌனமானான் சரவணன்.. அவாவர் மனதின் போராட்டங்களைப் பற்றி அவர்களுக்குத்தான் தெரியும்.. அவரவர் மனதின் போராட்டங் களைப் பற்றி சும்மாவா பாடி வைத்தார் கவிஞர்.

'கண்ணிலே என்ன உண்டு..?
கண்கள்தான் அறியும்..
கல்லிலே ஈரமுண்டு
கண்களா அறியும்..?
என் மனம் என்னவென்று
என்னையன்றி யாருக்குத் தெரியும்..?'

என்று..?

உன் மனதின் உக்கிரத்துக்கு காரணம் என்ன என்று சரவணன் ஆர்த்தியிடம் கேட்கவில்லை.. உனது சித்தியின் தம்பிக்கு உன்னை மணம் முடித்துக் கொடுக்க மறுத்த உன் அப்பா எப்படி சம்மதித்தாள்..? அதற்கான காரணம் என்ன

என்றும் கேட்கவில்லை.. மாறாக.. இதமாக அவளது முகத்தைப் பார்த்து.

"எங்க வீட்டுக்கு வர்றீங்களா..?" என்று கேட்டான்..

"என்ன..?" விழிகள் விரிய அவனைப் பார்த்தாள் ஆர்த்தி..

அவன் 'என்னுடன் வருகிறாயா..' என்று கேட்கவில்லை.. 'எங்களது வீட்டிற்கு வருகிறாயா..' என்றுதான் கேட்டான்.. அவனது அந்தத் தன்மை அவளை வெகுவாகக் கவர்ந்தது..

"உங்க வீட்டில என்னன்னு சொல்வீங்க..?"

அவளின் பதில் கேள்வியில் அவளது மனது புரிந்து போக அவன் மென்மையாக அவளுக்குத் தைரியம் கொடுக்கும் விதத்தில் புன்னகைத்தான்.

"என்னவோ சொல்றேன்.. அதைப்பத்தி நீங்க ஏன் கவலைப் படறீங்க..? நீங்க எங்க வீட்டுக்கு வர ஒப்புக்கறீங்களா..? அதைச் சொல்லுங்க.."

"அது.. அது.. வந்து.." அவள் தடுமாறினாள்..

அவளுடைய நிராதரவான அந்த நிலைமையில் அவளுக்கான உதவிக் கரத்தை அவன் நீட்டுகிறான்.. அதைப் பற்றிக் கொள்ள முடியாமல் அவள் வளர்ந்த விதம் அவளைத் தடுத்தது..

"உங்க வீட்டில யார், யார் இருக்காங்க..?"

அவளது கேள்வியில் அவள்மனம் புரிந்துபோக அவன் அவளை ஆழ்ந்த பார்வை பார்த்தான்.. ஊடுறிவிய அவனது பார்வை அவளைத் துளைத்ததில் அவள் தலை குனிந்தாள்..

"யார், யார் இருக்கிறாங்கன்னு நினைக்கறிங்க.. நான் மட்டும் தனியா இருக்கிறேன்னா..? இல்லை.."

அவன் பேச்சை நிறுத்தியதில் அவள் பதைப்புடன் அவனைப் பார்த்தாள்.. அவன் சொல்லப் போகும் வார்த்தைகள் என்னவாக இருக்கக்கூடுமென்ற அனுமானத்தில் அவளது இதயம் நடுங்கியது. அதை உணர்ந்தவனைப் போல அவளையே பார்த்தபடி.

"என் வொய்ப் இருப்பான்னு நினைத்தீங்களா..?" என்று கேட்டான்..

'இருக்கலாமில்ல..' உதட்டை மடித்துக் கடித்தபடி அவள் இணையாமல் படிந்திருந்த தண்டவாளங்களைப் பார்த்தாள்..

அவன் வீட்டில் அவனது மனைவி இருப்பதில் அவளுக்கென்ன பிரச்னை வந்தது.. அவன் மனைவி ஆர்த்தியின் வரவை எப்படி எடுத்துக் கொள்வாள் என்று கவலைப்படுகிறாளா..?

"குழந்தைகளை விட்டு விட்டிங்களே.." நிதானமாக எடுத்துக் கொடுத்தான் சரவணன்..

"குழந்தைகளுமா..?" ஆர்த்திக்கு ஏனோ மனதின் பாரம் அதிகமாவதைப் போல இருந்தது. அவளது தனிமை அவளை

அதிகமாக அழுத்தியது.. மனதின் பாரம் அதிகரித்தது.. அது ஏனென்றும் தெரியவில்லை.

அவள் மனதைப் படிப்பவனைப் போல அவளையே சரவணன் பார்த்துக் கொண்டிருந்தான்.. ஆர்த்திக்கு தர்ம சங்கடமாக இருந்தது. அவள் இப்படி மௌனம் சாதித்தால் அவன் என்னவென்று எடுத்துக் கொள்வான்..?

தர்ம சங்கடத்துடன் ஏதாவது ஒன்றைப் பேசிவிட வேண்டும் என்று பிரயத்தனங்களை மேற்கொண்டு அவள் பேச வாய் திறந்தபோது சரவணன் உரக்கச் சிரித்து வைத்தான்..

"ஏங்க.. என்னைப் பார்த்தா குழந்தை குட்டியோட இருக்கிற குடும்பஸ்தன் போலவா தெரியுது..?"

இலகுவாக அவன் கேட்டதில் ஆர்த்தியின் மனபாரம் குறைந்து அவள் முகம் தெளிந்தாள்..

"ஆளைப் பார்த்து ஒருத்தரை எடை போட முடியுமா என்ன..?"

அவனைப் போலவே அவளும் பதில் சொன்னாள்.. திடிரென்று மனதில் வந்த உற்சாகத்திற்கு காரணம் புரியாமல் திகைக்கவும் செய்தாள்.. ஆசுவாசப் பெருமூச்சு ஏன் வருகிறது..? அவன் மனைவி, குழந்தைகள் என்று குடும்பஸ்தனாக இருப்பதில் அவளுக்கு என்ன ஆட்சேபனை..? அவனை அவளுக்கு எத்தனை வருடங்களாக தெரியும்..? மாதங்கள்..? வாரங்கள்..? அல்லது நாள்கள்..?

நான்கு மணி நேர அளவில் மட்டுமே அறிந்த, பழகிய ஒருவனைப் பற்றி இத்தனை ஆழமாக அவள் சிந்திக்க வேண்டுமா..?

அவன் எவனோ ஒரு அன்னியன் என்று அவளால் ஏன் நினைக்க முடியவில்லை..? மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளாத மன பாரத்தை ஏன் அவனிடம் பகிர்ந்து கொண்டாள்..? ஒரு சிநேகிதனைப் போல ஏன் அவனை உணர்ந்தாள்..? வாழ்க்கையானது எல்லாக் கேள்விகளுக்கும் விடையளிப்பதில்லை.. விடையில்லாத பல உணர்வுகளை உள்ளடக்கியதுதான் வாழ்க்கை.

"என்னை எப்படி எடை போட்டிங்க..?"

"நானென்ன எடை மெஷினா..?"

"ஜோக்..?"

"அப்படிக்கூட வைத்துக்கலாம்.."

"சிரிப்பே வரலை.."

"உங்களுக்கு சிரிக்க வரலைன்னு சொல்லுங்க.. என் ஜோக்கை குறை சொல்லாதீங்க.."

விட்டுக் கொடுக்காமல் அவள் வாயாடிய தன்மையில் ஈர்க்கப்பட்டான் சரவணன்.. சுவராஸ்யம் நிரம்பிய உரையாடல்கள் வாழ்க்கையில் இனிப்பைச் சேர்ப்பவை.. அது அவளுக்கு இலகுவாக கை வந்தது.

"எனக்கு இன்னும் கல்யாணமாகலைங்க.. நான் கட்டை பிரம்மச்சாரி.."

அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்த்தபடி ஏன் இதைச் சொன்னான்..? படபடக்கும் அவளது இமைகளின் மூலமாக அவளது மனதின் படபடப்பை அறிய முயல்கிறானா..?

அவள் முகத்தைத் திருப்பி அவன் பார்த்த ஆராய்ச்சிப் பார்வையிலிருந்து தப்பிக்க முயன்றாள்.. அவன் இதழோரம் சிரிப்பு அரும்பியது.

"கல்யாணமாகலைன்னு சொல்லுங்க.. பிரம்மச்சாரின்னு சொல்லாதீங்க.. அதுக்கு யார் கேரண்டி கொடுப்பாங்க..?"

"அட..! நீங்க இப்படிக்கூடப் பேசுவீங்களா..?"

அவன் வியந்து சிரித்ததில் அவளுக்கு வெட்கமாகி விட்டது.

"ஊரே கேரண்டி கொடுக்கும்ங்க.." துளைக்கும் பார்வையுடன் சொன்னான் அவன்.

இவன் இப்படிப் பார்க்காமலிருந்தால் தேவலாம் என்றிருந்தது அவளுக்கு.. அவன் முகத்தைப் பார்க்க முடியாமல் விரல்களைப் பார்த்தாள்.. அவளது பெண்மையின் நாணத்தை ரசித்துப் பார்த்தான் சரவணன்.. இவள் தேவதை என்றிருந்தது அவனுக்கு..

"என் வீட்டில் என் அப்பாம்மா இருக்காங்க.. அப்புறமா என்கூடப் பிறந்த சுட்டித்தங்கை இருக்கிறா.."

இப்போதும் அவள் முகத்தையே உற்று உற்றுப் பார்த்தபடிதான் சொன்னான்.. அதைப் பொருட்படுத்தாமல் முக மலர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள் ஆர்த்தி.

"அப்பா, அம்மா, தங்கைன்னு இருக்காங்களா..?"

குதூகலத்துடன் கேட்டாள்.. அவளது குதூகலத்தில் அவன் மனம் மிருதுவானது.. அவளுக்குக் கிட்டாத குடும்பம் அவனுக்குக் கிட்டியிருப்பதில் பொறாமை கொள்ளாமல் குதூகலிக்கிறாளே..

குடும்பச் சூழலை இந்த அளவுக்கு அவள் விரும்புகிறாளா..?

"ஆமாம்.."

"உங்க தங்கை பெயர் என்ன..?"

"சரண்யா.. அப்பா பெயர் சுந்தரம்.. அம்மா பெயர் கவிதா.."

"அப்பாம்மா பெயரைக் கேட்கலையே.."

"அடுத்த கேள்வி அதாத்தானே இருக்கும்..? நான் வருமுன் காத்துக்கிற கேட்டகிரிங்க.."

"அடேங்கப்பா.. புல்லரிக்குது போங்க.."

"எங்கே போகச் சொல்கிறிங்க..? நீங்க கூட வராம போகிறதா இல்லை.."

அவனது வார்த்தைகளில் நெகிழ்ந்து போனாள் ஆர்த்தி.. நன்றியுணர்வில் பேச வாய் வராமல் அவள் தடுமாறியதைக் கண்டு கொள்ளாமல்..

"சந்தடி சாக்கில அடேங்கப்பான்னு என்னை 'டேய்'ன்ன கூப்பிட்டுட்டீங்க.. கில்லாடிதான்.." என்று சொன்னான் சரவணன்.

"கிடைச்சது சான்ஸீன்னு பழி போடறிங்களா..?"

அவளையுமறியாமல் இயல்பாகி விட்டாள் ஆர்த்தி.. நினைத்தது நடந்து விட்டதில் தனக்குள் சிரித்துக் கொண்ட சரவணன்..

"வாங்க போகலாம்.." என்று எழுந்து கொண்டான். எங்கே என்று கேட்காமல் ஆர்த்தி அவனுடன் இணைந்து நடந்தாள்.

"டிரெயினில் போகலாமா..?" என்ற அவளின் கேள்விக்கு..

"வேண்டாம்.." என்று மறுத்து விட்டான் சரவணன்.

"குன்னூருக்கு அடுத்த டிரெயின் எப்போன்னு விசாரிக்கனும்.. கார்த்திருக்கனும்.. அது ரிஸ்க்.. நாம உடனடியாக இடத்தைக் காலி பண்ணியாகனும்... இனியும் இங்கே நிற்கக் கூடாது.."

"அப்ப.. பஸ்ஸில் போகலாம்ங்கறிங்களா..?"

"அதுவும் ரிஸ்க்தான்.."

"பின்னே..?"

"வாங்க சொல்றேன்.."

ரயில் நிலையத்தை விட்டு விரைவாக வெளியில் வந்தார்கள்.. சரவணன் செல்போனை காதில் கொடுத்து யாரிடமோ பேசினான்.. அங்கிருந்த கடையின் பூட்டப் பட்டக் கதவின் பக்கமாக ஒதுங்கி நின்றான்.. யாருக்காகவோ காத்திருப்பதைப் போல இருந்தது அவனது செய்கை..

என்னவாக இருக்கக் கூடும் என்று குழம்பிய ஆர்த்தி எதுவும் கேட்காமல் சாலையின் போக்குவரத்தை வேடிக்கை பார்த்தாள்.. புதுச்சேரிக்குச் செல்லும் பிரதான சாலையை ஒட்டியிருந்தது அந்தக் கடை.. அந்த நள்ளிரவுப் பொழுதிலும் புதுச்சேரிச் சாலையில் பங்களும் கார்களுமாக போக்குவரத்து நெரிசல் இருந்தது.. சரவணனிடம் அதைச் சொன்னபோது ஆமோதித்து தலையை ஆட்டினான்..

"இது பிஸியான ரோடு.. விழுப்புரத்தில இருந்து புதுச்சேரிக்கு டிராவல் பண்ற மக்களோட எண்ணிக்கை அதிகம்.."

"மிட் நைட்டிலுமா..?"

"யெஸ்.."

அப்படிப்பட்ட நெருக்கடி மிகுந்த போக்குவரத்திற்கு தோதாக சாலை இல்லை என்பதை கவனித்தாள் ஆர்த்தி.. நான்கு வழிச்சாலை வேண்டாம்.. சாலைக்கு நடுவில் பிரிக்கும் சுவர் இருக்கலாமல்லவா..?

"டிவைடர் இல்லை போல இருக்கே.."

"நீங்க வேற.. போகப் போக ரோடு குறுகி.. கட்டிடங்க மேலே எல்லாம் இடிச்சுக்கிட்டு போகிற மாதிரி இருக்கும்.."

தொலைவில் தெரிந்த ஒரு காரைக் கண்டதும் சரவணின் கண்கள் பிரகாசித்தன.. கையை ஆட்டினான்.. காரின் ஒளி வெள்ளம் அவன் மேல் பாய்ந்தது.. கார் அவனருகில் வந்து நின்றது.

"ஹலோ.. சரவணன்.."

காரை விட்டு இறங்கியவர் சரவணனிடம் கை குழுக்கினார்..

"தேங்க்யூ சிவராமன்.."

"இதுக்கெல்லாம் தேங்க்ஸ் சொல்லனுமா..? உங்களுக்கு ஹெல்ப் பண்ண சான்ஸ் கொடுத்ததுக்கு நானில்ல தேங்க்ஸ் சொல்லனும்.."

தொடர்ந்து வந்த வேறொரு காரில் ஏறிப் போய் விட்டார் சிவராமன்.. அவர் கொண்டு வந்த காரின் பின்சீட்டைத் திறந்து பெட்டியைக் கடாசிய சரவணன்..

"உங்க பெட்டியையும் போடுங்க.." என்றான்..

"என்னமோ ஆளைப் போடச் சொல்கிறதைப் போலவே டோன் இருக்கு.."

சிரித்தபடி அவளின் பெட்டியையும் பின்சீட்டில் வைத்தாள் ஆர்த்தி.. அவளுக்காக சரவணன் திறந்து விட்ட மூன்சீட்டின் கார் கதவைப் பிடித்தபடி சரவணனுக்கு நன்றி சொல்லிவிட்டு காரில் ஏறிக் கொண்டாள்.. சுற்றி வந்து

டிரைவர் சீட்டில் உட்கார்ந்து காரைக் கிளப்பினான் சரவணன்.. விழுப்புரம் பேருந்து நிலையத்தைக் கடந்து நான்கு வழிச்சாலையைத் தொட்ட கார் மின்னல் வேகத்தில் பறந்தது.

"அவர் யார்..?" விசாரித்தாள் ஆர்த்தி..

"சிவராமன்.." என்றான் அவன்..

"ஆஹா.. எவ்வளவு தெளிவான ஆன்சர்..! இப்படி ஆன்சர் பண்ண உங்களாலேதான் முடியும்.." போலியாக வியந்தாள்..

"ஐயாவை என்னன்னு நினைச்சீங்க..?" அவன் காரை ஓட்டியபடி காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான்.

"முடியல.." என்றாள் அவள்.

"ஹா..ஹா.." ரசித்துச் சிரித்த சரவணன்..

"சிவராமன் எனக்குத் தெரிந்தவர்.. பிஸினெஸ் ரீதியாப் பழக்கம்.. ஊட்டிக்கு வந்தா எங்க ஹோட்டலிலதான் தங்குவார்.." என்றான்.

"உங்க ஹோட்டலா..?"

"ஊம்.. ஸ்டார் ஹோட்டல்.."

"ஊட்டியில் இருக்கா..?"

"ஊம்.. வாட் ஃபார்..?"

"ஒன்னுமில்ல.."

அவள் மௌனமாகி விட்டாள்.. அவளை லேசாகத் திரும்பிப் பார்த்த சரவணன் புருவங்களை உயர்த்தினான்.

"என்ன ஆச்சு..? எனக்கு ஊட்டியில ஸ்டார் ஹோட்டல் இருக்கிறதில என்ன பிராப்ளம்..?"

"எதுவும் பிராப்ளமிருக்குன்னு நான் சொன்னேனா..?"

"சொன்னாத்தானா...? திடீர்ன்னு பேசாமடந்தையா கிட்டிங்களே.."

"பேசிப்பேசி வாய் வலிக்குது.."

"ஈஸிட்..? என் பக்கத்தில இருக்கிறவங்க பேசாம வந்தா கார் ஓட்ட எனக்குக் கை வலிக்குமே..."

"அடப்பாவி..!"

மனதில் பேசுவதாக நினைத்துக் கொண்டு அவள் வாய் விட்டுச் சொல்லி விட்டுத் தன் தலையில் தானே குட்டிக் கொண்டாள்..

"என்ன..? மைண்ட் வாய்ஸீன்னு நினைச்சு வாய் விட்டுட்டீங்களா..?"

"ஹி.. ஹி.."

அவளின் அசட்டுச் சிரிப்பை ஒரு தினுசாக அவன் பார்த்து வைத்ததில் சிரிப்பை நிறுத்திக் கொண்டாள் ஆர்த்தி.

'சொதப்பறேனே..'

"புதுச்சேரிக்கு ஒரு வேலையா வந்தேன்.. வந்த இடத்தில் என்கார் ரிப்பேராகிருச்சு.. ஷோ ரூமில விட்டிருக்கேன்.. அவங்க ரிப்பேர் பண்ணி ஊட்டியில வந்து டெலிவரி கொடுத்துருவாங்க.. இப்ப ஊட்டிக்கு ரிட்டர்ன் ஆக கார் வேணும்.. உங்க காரைக் கொடுக்க முடியுமா..?

ஊட்டிக்குப் போனதும் என் டிரைவர்கிட்ட காரைக் கொடுத்து உங்க வீட்டில விட்டுட்டு வரச் சொல்லிடறேன்.. அவன் பஸ்ஸில் ரிட்டர்ன் ஆகிக்குவான்னு சொன்னேன்.. இவ்வளவு விளக்கம் சொல்லணுமா சார்.. ஒன்னுக்கு நாலு கார் வீட்டில நிற்குது.. உங்களிடம் ஒரு காரைக் கொடுத்தனுப்பறதில எனக்கொன்னும் சிரமமில்லை.. நீங்க ஊட்டிக்குப் போனதும் திருப்பி அனுப்புங்கன்னு சொல்லி இம்மிடியட்டா காரைக் கொண்டு வந்து நிறுத்திட்டார்..."

'ஒரு போன் காலுக்கு இத்தனை மதிப்பா..?'

ஆர்த்திக்குப் பிரமிப்பாக இருந்தது.. பார்வைக்கு விளையாட்டுப் பிள்ளை போல இருக்கும் அவனது பிண்ணனி அவளுக்கு மலைப்பாக இருந்தது.. அவளும் பணக்கார வீட்டுப் பெண்தான் அவளது உயரம் வேறுரகம்.

"இந்த விளக்கம் போதுமா..? இன்னும் கொஞ்சம் வேணுமா..?"

"போதும்ங்க.. போதும்.. இதுக்கு மேலேயும் விளக்கம் கேட்டு என் காது ஜவ்வைக் கிழிச்சுக்க நான் ரெடியா இல்லை.."

அவள் பயந்ததைப் போலக் காதுகளைப் பொத்திக் கொண்டதை ரசித்துச் சிரித்தான் சரவணன்..

"உன்னைத்தானே.. தஞ்சமென்று..
நம்பி வந்தேன் நானே..."

காரில் சிடி ஒலித்தது.. ஆர்த்தியின் பார்வையில்..

"ஏங்க.. இது என்ன என்னோட காரா..? யதார்த்தமாக பாட்டுக் கேட்கலாம்ன்னு சிடியை ஆண் பண்ணினேங்க.. அது இப்படிப் பாடி வைக்கும்ன்னு கனவா கண்டேன்..?" என்று நியாயம் கேட்டான் சரவணன்.

ஆர்த்திக்கு சிரிப்பு வந்தது.. அவள் மனதை அறிந்ததைப் போல் ஒலித்து வைத்த பாடலில் மனம் லயித்தாள்.. இதுபோன்ற அழகான அரிதான நிகழ்வுகளை வாழ்நாள் முழுவதும் மறக்கவே முடியாது என்று அவளுக்குத் தோன்றியதைப் போல அவனுக்கும் தோன்றியதோ என்னவோ.. அவள் அவனைப் பார்த்த அதே நொடியில் அவனும் அவளைப் பார்த்து வைத்தான்.

சந்தித்த பார்வைகள் சங்கமித்து நின்றன.. ஓரிரு நொடிகளில் பார்வையைத் திருப்பிக் கொண்ட ஆர்த்தியின் விரல்கள் நடுங்கின.. பார்வையைத் திருப்பாமல் சாலையிலும் ஓர் கண், அவள்மேல் ஓர் கண் என்று காரையோட்டிக் கொண்டிருந்த சரவணனுக்கு இருளிலும் அவளது நடுக்கத்தை கண்டு கொள்ள முடிந்தது.

அனைத்து மனித ஜீவன்களிடமும் இருக்கிறது.. ஒற்றைப் பார்வையில் உயிர் தரிக்கும் வினாடி..!

"உயிர்ப் பூவெடுத்து..
ஒரு மானவயிட்டேன்..
விழி நீரெடுத்து ஒருகோலமிட்டேன்.."

ஆர்த்தியின் நுனிவிரல் காரின் ஜன்னலோரமாக கோலம் வரைந்தது.. ஏனோ தெரியவில்லை.. அவளால் பேச

முடியவில்லை.. அந்த இரவும், நிலவும், நான்கு வழிச்சாலையின் பயணமும், அவள் மனதை ஒலிப்பதைப் போன்ற பாடலும் அவள் மனதை நிரப்பி ஏதோ செய்தன..

"மனதின் கதவொன்று திறக்கின்றதா..?
மௌனம் வெளியேறத் துடிக்கின்றதா..?"

பாடலின் வரிகளில் கண்மூடி சீட்டில் சாய்ந்தாள் அவள்.. மெலிதான ஒளியில் கோட்டோவியம் போல தெரிந்தவளின் அழகை ரசித்த வண்ணம் காரை ஓட்டிக் கொண்டிருந்த சரவணனுக்கு வியப்பாக இருந்தது.

ஊட்டிக்குப் போக ரயிலேறியவன் வழியில் இறங்கி இரவல் காரில் ஓர் இளம் பெண்ணுடன் பயணம் செய்வான் என்பதை நினைத்தாவது பார்த்திருப்பானா..?

நினைவில் அடங்காத நிகழ்வுகளைக் கொண்டதுதான் வாழ்க்கை..!

தலையில் மப்ளரும்.. உடையை மறைத்த ஸ்வெட்டருமாக வாசலில் பால் வாங்கியபடி செக்யூரிட்டியிடம் வாய் வளர்த்துக் கொண்டிருந்தாள் மயிலா..

"என்ன மயிலா.. இப்பத்தான் எந்திரிச்சியா..?"

பால்காரன் பாலை மயிலா ஏந்திக் கொண்டிருந்த பாத்திரத்திலும்.. ஜொள்ளை அவன் வாயிலும் ஊற்றியபடி கேட்டான்.

"என்னமோ எனக்குப் படியளக்கிற முதலாளி மாதிரி கேள்வி கேக்கிற..? நா எப்ப எந்திரிச்சா உனக்கென்ன..?"

"சும்மா கேட்டேன்.. அதுக்குப் போயி கோவிச்சுக்கறியே.."

"நீ சும்மா கேளு.. இல்லே காசு கொடுத்துக் கேளு.. அந்தக் கருமாயத்த என்கிட்ட எதுக்காக கேட்கிறேன்னுதான் நான் கேட்கிறேன்.."

"அட என்ன அம்மணி.. எதுக்கெடுத்தாலும் சடைச்சுக்கிற.."

"யோவ்.. காலங்காத்தால கடுப்பக் கிளப்பாம ஓடியே போயிரு.. சொல்லிப்புட்டேன்.. அழகான பேர அம்மணின்னா மாத்தற..?"

எப்படிப் பேசினாலும் போர்கொடியை உயர்த்தும் மயிலாவிடம் வார்தையாட நேரமும், திராணியும் இல்லாததினால் ஏக்கமாக ஒரு மேய்ச்சல் பார்வையைப் பார்த்து விட்டு சைக்கிளை மிதித்தான் பால்காரன்..

"வந்துட்டான்.. விட்ட விடிகாலையில வாய் வளர்க்க.."

மயிலா வாய்க்குள் பால்காரனைத் திட்டித் தீர்த்தாள்..

"அவன் என்னத்தைக் கேட்டுப்புட்டான்னு இந்த விரட்டு விரட்டற..?" செக்யூரிட்டி கேட்டான்..

"ஏன்ய்யா.. அவன் வாங்கினது பத்தாதா..? நீயும் கொஞ்சம் வாங்கனுமா..?"

"நீ கொடுக்கிறதிலேயே குறியா இரு.."

"உன் கண்முன்னால கடல போடப் பாக்கிறான்.. நீ என்னத்தச் செஞ்சான்னு நாயம் பிளக்கிற.. இனம், இனத்தோடதான சேரும்.."

செக்யூரிட்டியையும் ஒரு பிடி பிடித்து விட்டு.. வீட்டைப் பார்த்து நடந்தாள் மயிலா.. சீராக இருபுறமும் அரை செங்கல் முக்கோண வடிவத்தில் நடப்பட்டிருக்க.. அகன்ற போர்டிகோவை நோக்கிப் பாதை போய் கொண்டிருந்தது.. போர்டிகோவைத் தாண்டி பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்ட படிகளில் அவள் ஏறியபோது கார் வரும் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தாள்.

'யாரு அது..? நம்ம சின்னய்யா மாதிரியில்ல இருக்குது..?'

உற்றுப் பார்த்தவளுக்கு சரவணனின் பக்கத்தில் ஆர்த்தி அமர்ந்திருப்பது தெரிந்து விட்டது.

'பொண்ணு மாதிரியில்ல தெரியுது..'

மயிலா உள்ளே போகாமல் நின்று விட்டாள். சரவணனுடன் இறங்கிய ஆர்த்தியைக் கண்டதும்.

'பொண்ணேதான்..' என்று தனது அனுமானத்தை மெச்சிக் கொண்டாள்..

கண்ட காட்சியை கவிதாவிடம் விவரிக்க புள்ளி மானைப் போல துள்ளி ஓடினாள் மயிலா.. மருண்ட

விழிகளில் நிரம்பியிருந்த கலக்கத்துடன் தயங்கி நின்றாள் ஆர்த்தி.. காரைப் பூட்டிச் சாவியுடன் இறங்கிய சரவணன் புருவங்களை உயர்த்தினான்..

"என்ன..?"

"பயமாயிருக்கு..?"

"எதுக்கு பயம்..? நான் பார்த்துக்கிறேன்.."

"நான் யாருன்னு உங்க பேரண்ட்ஸ் கேப்பாங்களே.."

"என்னிடம்தான் கேட்பாங்க.. நான் பதில் சொல்லிக்கறேன்.. நீங்க வாயைத் திறக்காம நின்றால் போதும்.. அது ஈஸியான வேலைதானே.. கஷ்டம் ஒன்னுமில்லையே..?"

அவனது கேலியான கேள்வியில் அவளது முகம் சிவந்தது.. நிமிர்வான நடையுடன் சரவணன் போர்டிகோவைக் கடந்து அகன்று நீண்டிருந்த வாசல் படிகளில் ஏறினான். முயல் குட்டியைப் போல அவனைப் பின் தொடர்ந்தாள் ஆர்த்தி..

சமையலறைக்குள் ஓடிய மயிலாவின் கையிலிருந்த பாத்திரத்தில் பால் தளும்பிச் சிதறியதில் சமையல் வேலை செய்யும் அஞ்சலைக்கு கோபம் வந்து விட்டது.

"பொம்பளையா லட்சணமா நடந்து வரத் தெரியாதா..? நாலு கால் பாய்ச்சலில ஓடி வர்ற..? பால் கொட்டிட்டா அமமாவுக்கு யாரு பதில் சொல்றது..?"

"சொல்லத்தானே ஓடி வந்தேன்.."

"என்னடி பினாத்தற..?"

"உனக்குப் புரியாது அஞ்சலை.. அம்மா எங்கே..?"

மூச்சிரைக்கக் கேட்ட மயிலாவின் கேள்விக்கு..

"இங்கே இருக்கேன்.." என்ற பதில் மாடிப் படிகளிலிருந்து வந்தது.

காலைக் காபிக்காக மாடியிறங்கி வந்து கொண்டிருந்த கவிதா மங்களகரமான அழகோடு இருந்தாள்.. கனிவும் அழகும் சேர்ந்த கலவையான முகம்.

"என்னத்துக்கு அம்மாவைத் தேடுற..? என்ன வைச்சிருக்கிற அம்மாவுக்கு..?"

இயல்பாக மயிலாவை வினவியபடி சமையலறைப் பக்கமாக வந்தவள் உள்ளே எட்டிப் பார்த்து..

"அஞ்சலை.. காபி கலந்தாச்சா..?" என்று குரல் கொடுத்தாள்.

"அப்பவே டிகாசன் ரெடிம்மா.. இந்த மயிலா பாலை வாங்கிக்கிட்டு வரத்தான் இம்புட்டு நேரமாகிருச்சு.. ஒரு நொடியில பாலைக் காய்ச்சி காபியைக் கலந்துடறேன்ம்மா.." அஞ்சலை பரபரத்தாள்.

"சரி, சரி.. சீக்கிரமா பாலைக் காய்ச்சு.."

அஞ்சலைக்கு உத்தரவிட்டு விட்டு 'என்ன..' என்று வினவும் பாணியில் மயிலாவின் முகத்தைப் பார்த்தாள் கவிதா..

"சின்னய்யா வர்றாரும்மா.."

"வரட்டும்.. சென்னைக்குப் போயிருக்கிற சரவணன் நேற்றைக்கு நைட்டே டிரெயின் ஏறியிருப்பானே.. இன்னைக்கு வந்துருவான்னு தெரியுமே.. இதையா சொல்ல வந்த..?"

"அதில்லைம்மா.. சின்னய்யா கூட.."

மயிலா வேண்டுமென்றே பேச்சிற்கு இடைவெளி விட்டு நிறுத்தினாள்.. கவிதாவின் புருவங்கள் சுருங்கின.. மயிலாவிற்கு அதுதானே வேண்டும்..?

"சின்னய்யா கூட..?"

"சின்னய்யாகூட யாரோ ஒரு பொண்ணும் வந்திருக்காங்கம்மா.."

'யாரா இருக்கும்..?'

கவிதா ஹாலுக்கு விரைந்தாள்.. எப்படி என்ற பாவனையில் மயிலா அஞ்சலையைப் பார்க்க..

"இதில எல்லாம் உன்னை யாராலயும் அடிச்சுக்க முடியாதே.. எங்கேயிருந்துதான் வம்பு கொண்டு வருவியோ.." என்றாள் அவள்.

ஆர்த்தி பின் தொடர உள்ளே வந்த சரவணன்.. கவிதாவைக் கண்டதும் சிரித்தான்.. அவன் பின்னால் நின்றிருந்த ஆர்த்தியை அறிமுகமற்ற பார்வை பார்த்தபடி.

"வாடா சரவணா.. ஜர்னி எப்படியிருந்தது..?" என்று வரவேற்றாள் கவிதா..

"செம டயர்டும்மா.. சூடா ரெண்டு கப் காபி ப்ளீஸ்.."

சோபாவில் சரிந்து உட்கார்ந்து கால்களை நீட்டிய சரவணன் ஆர்த்தியைப் பார்த்து..

"உட்காருங்க.. இதை உங்க வீடு மாதிரி நினைத்துக்கங்க.. ஃபீரியா.. ஃபீல் பண்ணுங்க.. அன் ஈஸியா ஃபீல் பண்ணாதீங்க.." என்று உபசரித்தான்..

தயக்கத்தைக் கைவிடாமல் உட்கார்ந்த ஆர்த்தியை வேடிக்கை பார்த்தபடி நின்றிருந்த மயிலாவிடம்..

"கிச்சனுக்குப் போய் மூணு கப் காபி கொண்டு வா.." என்று விரட்டினாள் கவிதா..

வந்திருக்கும் பெண் யாராக இருக்கக் கூடும் என்ற பல்வேறு அனுமானங்களுடன் சமையலறைக்கு ஓடினாள் மயிலா.. அதை அறியாவிட்டால் அவளது தலை வெடித்து விடும் போல இருந்தது.

மகனிடம் பொதுவான விவரங்களைப் பேசியபடி ஆர்த்தியை பார்த்துக் கொண்டிருந்தாள் கவிதா.. அவளது முகத்தில் தெரிந்த பயமும், தவிப்பும் கவிதாவை எதையெதையோ யோசிக்க வைத்தன.. அது எதுவாகவும் இருக்காது என்று தன் மனதைச் சமாதானப் படுத்த முயன்றாள்..

"ஹாய் அண்ணா.."

மாடிப்படிகளில் தடதடத்த ஓசை கேட்டது.

"சரண்யா வர்றா.." ஆர்த்தியிடம் சொல்லிச் சிரித்தான் சரவணன் வெகு காலம் பழகிய நெருங்கிய உறவினரிடம்

பேசுவதைப் போல இலகுவாக பேசிச் சிரித்தவனுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்தான் ஆர்த்தி..

ஊதா வண்ண நைட்டியும்.. கருநீல ஸ்வெட்டருமாக தூக்கக் கலக்கத்துடன் வந்த சரண்யா..

"உனக்கென்னண்ணா.. ஆண்பிள்ளை.. பிஸினெஸ்டிரிப்புன்னு உலகம் பூரா சுத்தி வர்ற.. என்னால அது முடியுதா..? ஒருவழியா சென்னை உன்னை விட்டிருச்சு போல.." என்று சொல்லியபடி சரவணனின் பக்கத்தில் சரிந்து உட்கார்ந்து அவன் தோளில் தலை சாய்த்துக் கொண்டாள்..

"உன்னோட அளப்பறையை ஊட்டியும், குன்னூருமே தாங்க முடியாம நடுங்குது.. இதில உலகத்தைச் சுத்தினா உலகம் தாங்குமா சரண்..?" தங்கையை கலாய்த்தான் சரவணன்..

"உன்னையே தாங்கறப்ப என்னைத் தாங்காதா..? எல்லாம் தாங்கும்.. ஊட்டியும், குன்னூரும் குளிரில நடுங்கினா நீ என்மேல பழி போடுவியா.." தமையனின் விலாவில் குத்திய சரண்யா அப்போது தான் ஆர்த்தியைப் பார்த்தாள்..

"அட.. நம்ம வீட்டுக்கு கெஸ்ட் வந்திருக்காங்க.. யாருண்ணா..?"

தான் கேட்கத் தயங்கிய கேள்வியை வெகு இயல்பாக மகள் கேட்டு விட்டதில் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் கவிதா..

"இவங்க பெயர் ஆர்த்தி.." கவிதாவை பார்த்தபடி சரண்யாவுக்கு அறிமுகம் செய்து வைத்தான் சரவணன்..

"ஆர்த்தின்னா..?" சரண்யா விடவில்லை..

"ஆர்த்தின்னா ஆர்த்திதான்.. என் பிரண்டு குமாரோட சிஸ்டர்.."

'என்னது..?'

வாய்வரை வந்துவிட்ட வார்த்தையைத் தொண்டைக் குள்ளேயே நிறுத்தி வைக்க அரும்பாடுபட்டாள் ஆர்த்தி.. அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த சரவணின் பார்வையில் எச்சரிக்கை இருந்தது.. வாயைத் திறக்கக் கூடாது என்று அவன் சொல்லியிருந்தது நினைவுக்கு வர வாயை மூடிக் கொண்டாள் ஆர்த்தி.. கைவிரல்களின் நடுக்கத்தைத்தான் அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

"குமாரோட சிஸ்டரா..?"

கவிதாவின் முகத்தில் பரவிய நிம்மதியில் ஆர்த்தி குற்ற உணர்வைக் கொண்டாள்.. தெரியாத ஒருவனின் தங்கையாக அந்த அருமையான பெண்மணியை ஏமாற்றுகிறாளே என்றிருந்தது அவளுக்கு.. கவிதாவை அவளுக்குப் பிடித்திருந்தது.. கவிதாவின் சாயலும், முகமும்,

பார்வையும், பேச்சும், அவளுக்கு கீர்த்தியை ஞாபகப் படுத்தின.. அவளது தாயின் முகத்தில் பொங்கி வழியும் கருணையை கவிதாவின் முகத்தில் கண்டாள் ஆர்த்தி.

'இவங்க கிட்ட பொய் சொல்ல வேண்டியிருக்கே..'

சரவணனிடம் சொன்னால் வேறு என்ன வழியிருக்கிறது என்று கேட்டு வைப்பான்.. அவளுக்கு வழி தெரியாததினால்தானே அவனது வீட்டில் அடைக்கலம் தேடி வந்திருக்கிறாள்..?

"குமாரைத்தான் பார்த்திருக்கோம்.. அவனோட தங்கையைப் பார்த்ததில்லை.. எத்திராஜில் படிச்சுக்கிட்டு இருக்கிறதாச் சொன்னான்.. இப்ப என்ன செய்கிறம்மா..?" கவிதா பரிவுடன் கேட்டாள்..

"நம்ம வீட்டில் உட்கார்ந்திருக்காங்க.." என்றான் சரவணன்..

"ஜோக்கு..? சிரிப்பே வரலை.." அபிப்ராயம் தெரிவித்த சரண்யா ஆர்த்தியை ஒட்டுதலுடன் பார்த்தாள்..

அது ஏனென்று புரியாமல் திருதிருத்தாள் ஆர்த்தி.. சரண்யாவின் பார்வையை சந்திப்பதைத் தவிர்த்து கவிதாவிடம் வெகு மரியாதையாக..

"படிப்பை முடிச்சுட்டேன் ஆண்ட்டி.." என்றாள்..

மேலே என்ன சொல்வது என்று அவளுக்குத் தெரியவில்லை.. அவள் ஒன்றைச் சொல்லப் போக.. சரவணன் வேறு ஒன்றைச் சொல்லி வைத்தால் விணையாகி விடுமே என்று வாயை மூடிக் கொண்டு அனுமதி காத்தாள்..

"குமார் ஃபாரின் போக வேண்டியிருக்கும்மா.."

அடுத்த பொய்யை அவிழ்த்து விட்டான் சரவணன்.. நல்லவேளை வாயைத் திறக்கவில்லை என்று நினைத்துக் கொண்டாள் ஆர்த்தி.. குமார் யார் என்றே அவளுக்குத் தெரியாது.. இந்த லட்சணத்தில் அவன் ஃபாரின் போவதைப் பற்றி எப்படித் தெரியும்..

சரவணன் அவளைப் பார்த்த பார்வை வேறு குமாரின் வெளிநாட்டுப் பயணத்துக்கும் அவளுக்கும் ஏதோ ஒரு சம்பந்தம் உருவாகப் போவதை அறிவித்தது. அது என்னவாக இருக்க முடியும் என்று யூகிக்க முயன்றாள் ஆர்த்தி.. முடியவில்லை..

"அப்படியா..?"

"உங்களுக்கே தெரியும்.. குமாருக்கு அப்பா மட்டும்தான்.. அம்மா இல்லைங்கிறது.."

ஆக.. இது ஒன்றில் மட்டும் அவள் பொய் சொல்ல வேண்டியதே இல்லை போல.. அந்தக் குமாருக்கு சித்தி இருக்கிறாளா என்று கேட்டு வைத்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தாள் ஆர்த்தி..

"பாவம்.. தாயில்லா பசங்க.."

கவிதாவின் இரக்கமான பார்வை வருடிக் கொடுத்ததில் அப்படியே அவள் காலடியில் உட்கார்ந்து மடியில் தலை சாய்த்துக் கொள்ள வேண்டும் போல உருகி விட்டாள் ஆர்த்தி.. பசுவைத் தேடும் கன்றின் பார்வையாக ஆர்த்தியின்

பார்வை இருந்ததில் வாத்சல்யத்துடன் புன்னகைத்தாள் கவிதா..

"இந்த ஃபாரின் டிரிப்பில் குமார்கூட அவனோட அப்பாவும் ஜாயின் பண்ணிக்கிறார்.." கதை பிணைத்தான் சரவணன்..

"பிஸினெஸ்ஸை யார் பார்த்துக்குவாங்க..?" சரண்யா கேட்டு வைத்தாள்..

"குட் கொஸ்டின்.." பாராட்டுதலைத் தெரிவித்தான் சரவணன்.

அதற்கான பதிலைச் சொல்ல அவன் ஆயத்தப்படுத்திக் கொள்வதைப் புரிந்து கொண்ட ஆர்த்திக்கு சிரிப்பு வந்தது.

"உன்னோட ஆன்சரும் குட் ஆன்சரா இருக்கணும்.." சரண்யா அச்சுறுத்தினாள்.

"கொஞ்சம் கேப் விடு சரண்.. யோசிக்கணுமில்ல..?"

"ஏன் யோசிக்கணும்..? எதுக்காக யோசிக்கணும்..?"

"என்ன நீ.. பேசற வார்த்தையில எல்லாம் குற்றம் கண்டு பிடிக்கிற..? இட்'ஸ் டூ பேட்.."

"த்ரி பேடாவே இருந்துட்டுப் போகட்டும்டா அண்ணா.. நீ ஆன்சரைச் சொல்லு.."

"அதைக் கவனிக்கத்தான் சூப்பர்வைசர்ஸ் இருக்காங்கள்ல.. ஷாப்பிங் மாலையும், டிபார்ட்மெண்டல் ஸ்டோரையும் கவனிச்சுக்கிறது என்ன பெரிய விசயமா..?"

"நீ அப்படி வர்றியா.."

"யெஸ் மை டியர் சிஸ்டர்.. விளக்கம் போதுமா..?"

"ஆனாலும் அண்ணா.. சூப்பர்வைசரை மட்டும் நம்பி பிஸினெஸ்ஸை விட்டுட்டுப் ஃபாரின் போறது தப்பு.."

"இதை குமாரைப் பார்க்கிறப்ப நேரடியாச் சொல்லு.. என்னை விட்டிரு.. உன் கேள்வி மழையைத் தாங்க முடியல.."

"குமாரும் அவரோட அப்பாவும் ஃபாரின் போயிட்டா இவங்க மட்டும் எப்படித் தனியா இருப்பாங்க..?"

"குட் கொஸ்டின்"

இப்போது உண்மையாகவே தங்கையை சிலாகித்தான் சரவணன்.. அவன் சொல்ல வேண்டிய பொய்க்குப் பாதை போட்டுக் கொடுத்து விட்ட தங்கையின் மீது அவனுக்குப் பிரியம் வந்தது.. அவளோ..

"என்ன அண்ணா.. திடீர்ன்னு பாசப்பறவையை பறக்க விடற.. என்ன விசயம்..?" என்று உஷாரானாள்..

"சென்னைக்குப் போயிட்டு வந்திருக்கேன்.. பிரிஞ்சிருந்த தங்கையைப் பாசமாப் பார்த்தாக் கூடத் தப்பா சரண்..?"

"ஓகே.. ஓகே.. நீ கண்டினியூ பண்ணு.."

"நீ நினைச்சதைப் போலதான் குமாரும் நினைச்சான் சரண்.."

அந்த வார்த்தைகளில் சரண்யாவின் முகத்தில் பிரகாசம் ஏற்பட்டதைக் கவனித்தாள் ஆர்த்தி.. பெண்ணின்

உணர்வுகளைப் பெண்ணே அறிவாள்.. குமாரின் மீது சரண்யாவுக்கு ஏதோ ஒருவிதமான ஈர்ப்பு இருப்பதை ஆர்த்தியின் நுட்பமான பெண் மனதால் புரிந்து கொள்ள முடிந்தது..

"அம்மா.." கவிதாவின் பக்கம் திரும்பிய சரவணன்..

"குமாரும் அவனுடைய அப்பாவும்.. ஃபாரின் போறதால ஆர்த்தி தனியா சென்னை வீட்டில இருக்கனுமேன்னு குமார் ஃபீல் பண்ணினான்.. அவங்க ரிலேடிவ்ஸ் யாரையாவது வரச் சொல்லலாம்ன்னு யோசிச்சான்.. அவனோட அப்பாவுக்கு அது பிடிக்கலை.. அவங்க கஷ்டப்பட்ட காலத்தில ஹெல்ப்புக்கு யாரும் வரலையாம்.." என்று தொடர்ந்து கதை சொல்ல ஆரம்பித்தான்.

ஆர்த்திக்கு சுவாரஸ்யமாக இருந்தது.. அவன் சிறந்த கதைசொல்லி என்பதைப் போல அவள் ஆர்வமாக கதை கேட்ட விதத்தைக் கண்ட சரவணனுக்கு தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது..

'இப்படிக் கதை கேட்டா அம்மா சந்தேகப்பட்டுவிட மாட்டாங்களா.. அம்மாவைக் கூடச் சமாளித்து விடலாம்.. சரண்யா சந்தேகப்பட்டுக் தொலைத்துட்டா சமாளிக்கிறது கஷ்டமாச்சே..'

ஆர்த்தியை பார்வையில் அதட்டினான்.. அவள் புரியாமல் விழித்தாள்.. இது வேலைக்கு ஆகாது என்று தன் முயற்சியைக் கை விட்டான் சரவணன்..

நல்லவேளையாக கவிதாவும், சரண்யாவும் குமாரின் குடும்பத்தைப் பற்றிய நினைவலைகளில் மூழ்கியிருந்தார்கள்.. ஆர்த்தி கதை கேட்டதை அவர்கள் கவனிக்கவில்லை..

"நிஜம்தானே.. பாவம்.. தாயில்லாப் பிள்ளைகளை வளர்க்க அவர் தனியாளா எத்தனை சிரமப்பட்டிருப்பார்.. உதவிக்குன்னு ஒரு சொந்தக்காரங்ககூட வரலையாமே.. குமார் சொல்லி வருத்தப் பட்டிருக்கான்.." என்றாள் கவிதா.

"பாவமில்லைம்மா.." சரண்யாவின் கண்கள் கசிந்து விட்டன.

அவளின் வருத்தம் யாரைப் பற்றியது என்று யோசித்தாள் ஆர்த்தி.. தாயில்லாக் குழந்தைகளைத் தனித்து வளர்த்த குமாரின் அப்பாவை நினைத்து வருத்தப் படுகிறாளா இல்லை.. தாயில்லாமல் தந்தையின் அரவணைப்பில் மட்டும் வளர்ந்த குமாரை நினைத்து வருத்தப் படுகிறாளா..?

இரண்டாவதாகத்தான் இருக்கும் என்று நினைத்துக் கொண்டாள் ஆர்த்தி..

"ஸோ.. குமாரோட அப்பா என்னிடம் ஒரு ரிகஸ்டை வைத்தார்.."

"என்னண்ணா சொல்ற..? குமாரோட அப்பா உன்னிடம் ரிகஸ்ட் பண்ணிக்கிட்டாரா..?"

"ஆமாம் சரண்.."

"எதுக்குண்ணா..?"

"அவரும், குமாரும் ஃபாரின் போய் திரும்பி வருகிற வரைக்கும் ஆர்த்தியை நம்ம வீட்டில அம்மாவோட பாதுகாப்பில தங்க வைக்க முடியுமான்னு கேட்டுக்கிட்டார்.."

'அடிச்சாண்டா அந்தர் பல்ட்டி..' ஆர்த்தி வியந்து போனாள்..

அங்கே சுற்றி, இங்கே சுற்றி, திறம்பட அவன் வீட்டில் ஆர்த்தியைத் தங்க வைக்கும் கதையொன்றை சொல்லி விட்டானே..

'இவன் கெட்டிக்காரன்தான்..'

மெச்சுதலான ஆர்த்தியின் பார்வையில் சட்டை காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு 'எப்புடி..?' என்ற பார்வையைப் பார்த்தான் சரவணன்.. 'தூள்..' என்று கட்டைவிரலை உயர்த்திக் காண்பித்தாள் ஆர்த்தி..

அதைக் கவனிக்காமல் கவிதாவும் சரண்யாவும் உருகியிருந்தார்கள்.. சரவணன்தான் வெகு கெட்டிக் காரத்தனமாக கவிதாவின் பொறுப்பில் ஆர்த்தியை தங்க வைத்துக் கொள்ள வேண்டுமென்று குமாரின் அப்பா கேட்டுக் கொண்டதாக கதை பிணைந்திருந்தானே..

"குமாரோட அப்பா அப்படியா சொன்னார்.?" நெகிழ்ந்து போனாள் கவிதா..

"அம்மாவைச் சொல்லிட்டு என்னை விட்டு விட்டார் பார்த்தியா..? ஏன்.. நான் இவங்களைப் பார்த்துக்க மாட்டேனா..?" குறைபட்டாள் சரண்யா..

"புரியாம பேசாதே சரண்.. அம்மா வீட்டுக்குப் பெரியவங்க..! நமக்கு அம்ம்மா..! தாயில்லாத பெண்ணை அம்மாகிட்டத்தானே ஒப்படைத்தாகனும்..?"

இதை உண்மையாகச் சொன்னான் சரவணன்.. ஆர்த்தியும் அழுதுவிட்டாள்.. கவிதாவால் தாங்க முடியவில்லை..

"இங்கே வாம்மா.." இரு கைகளையும் விரித்து அழைத்தாள்.. அம்மா என்று அழைப்பதைப் போன்ற அதே பாசத்துடன்..

"ஆண்ட்டி.." என்று அழைத்தபடி எழுந்து ஆர்த்தி கொஞ்சம் கூட யோசிக்காமல் கவிதாவின் காலடியில் அமர்ந்து அவள் மடியில் தலை சாய்த்து விட்டாள்..

அவள் அப்படிச் செய்வாள் என்று எதிர்பார்க்காததில் திகைத்துப் போய் விட்டாலும்.. மடியில் தலை சாய்த்த பெண்ணின் மனம் தாயைத் தேடுகிறது என்பதில் பரிவு கலந்த இரக்கம் கொண்டாள் கவிதா..

சரவணன் உதட்டைக் கடித்துக் கொண்டான்.. இதைச் செய்யாதே என்று எப்படி அவன் ஆர்த்தியிடம் சொல்வான்..? உலகின் அனைத்துப் பாசங்களிலும் வலிமை மிகுந்தது தாயின் மீதான பாசம் அல்லவா..?

அவன் தாயை அவள் தாயாக எண்ணி மடி சாய்ந்து விட்ட அந்தப் பேதையின் தாய்ப்பாச தேடலில் அவன் மனம் கசிந்தது..

10

"பாடுற பாட்டில தூது விட்டு
தேடுற மயிலே..! உன் மனசை விட்டு
கேட்கிற வரமே கிடைச்சிருச்சா..?"

இனிமையான பாடலில் மனம் மயங்கினாள் ஆர்த்தி.. பாடுகிற பெண்ணைப் பார்த்தாள்.. முதுகில் தேயிலைக் கூடையும்.. தலையை மறைத்த முக்காடுமாக மலைவாழ் பெண்ணின் அனைத்து அடையாளங்களுடனும் இருந்த அந்த இளம் பெண்ணின் முகத்தில் ரகசியமான சந்தோசம் இருந்தது.

பாடலில் தூது விட்ட அவளது தேடல் அவளுக்குக் கிடைத்து விட்டதா என்று கேட்க வேண்டும் போல ஆசை கொண்டாள் ஆர்த்தி..

"பிடிச்சிருக்கா..?"

அவளது கவனத்தைக் கலைத்து ஈர்த்தது சரண்யாவின் குரல்.. மலைப்பாதையில் நடந்து கொண்டிருந்த ஆர்த்தியுடன் நடந்து கொண்டிருந்தவள் அருகிலிருந்த தேயிலைச் செடிகளின் மீது கையைப் பரவ விட்டவாறே கேட்டாள்..

'எதைக் கேட்கிறாள்..?' தடுமாறினாள் ஆர்த்தி..

அவளைப் பிடித்திருக்கிறதா என்று கேட்கிறாளா..? இல்லை.. அவளது அம்மாவைப் பிடித்திருக்கிறதா என்று கேட்கிறாளா..? இரண்டும் இல்லாமல் அவளுடைய அண்ணனைப் பிடித்திருக்கிறதா என்று கேட்கிறாளா..?

எதைக் கேட்கிறாள் சரண்யா..?

'அவளுடைய அண்ணனைப் பிடிச்சிருக்கான்னுதான் கேட்கிறான்னா என்ன சொல்கிறதா உத்தேசம்..? பிடிச்சிருக்குன்னா..?' அவளது மனம் கேட்டு வைத்தது..

"என்ன.. பேசாம வர்றீங்க..? எங்க ஊரைப் பிடிச்சிருச்சா..?"

'ஓ.. இவள் இதைக் கேட்டாளா..?'

ஏமாற்றம் போல ஏன் உணர்ந்தாள் ஆர்த்தி..? பிடிபடாத உணர்வுகளுடன் போராடியபடி..

"பிடிச்சிருக்கே.." என்றாள்..

"இதைச் சொல்ல இவ்வளவு நேரமா..?"

'உனக்கென்ன..? ஈஸியா பிடிச்சிருக்கான்னு கேட்டு வைச்சிட்ட.. நீ எதைக் கேட்கிறன்னு தெரியாம எப்படி நான் பதிலைச் சொல்றது..?'

"உங்களுக்கு ஆர்த்தின்னு பேரை வைச்சது தப்புங்க.. பேசா மடந்தைன்னு பேர் வைச்சிருக்கனும்.. அடிக்கடி மௌனியாகிடறீங்க.."

சரண்யாவின் மனத்தாங்கலை மெல்லிய புன்னகையின் மூலம் சரிசெய்தாள் ஆர்த்தி.. இருபுறமும் அடர்ந்திருந்த

தேயிலைச் செடிகளின் பாத்திகளின் அளவை வியப்புடன் பார்த்தாள்.. கச்சிதமாக அளவெடுத்து போடப் பட்ட சதுரத் துண்டங்களாக இருந்தன அந்தப் பாத்திகள்.. குளிர் நிறைந்த மலைக்காற்று உடலைத் தொட்டு விளையாட அந்த மலைப் பாதையில் நடப்பதை விரும்பி ரசித்தாள் அவள்..

"நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க ஆர்த்தி.."

"நீங்களும்தான் அழகாயிருக்கீங்க.."

"ஆஹா.. இதை அப்படியே உங்க அண்ணன் காதில போட்டு வையுங்களேன்.. எனக்கு யூஸா இருக்கும்.."

"அண்ணனா..?"

யார் அந்த அண்ணன் என்று கேட்டுவிட இருந்த ஆர்த்தி சுதாரித்துக் கொண்டு..

"அண்ண்ண்ண்...னனா..?" என்று கண்டு கொண்டடேன் கண்டு கொண்டேன் என்ற தொனியில் சொன்னாள்..

"உங்க அண்ணனேதான்.. குன்னூருக்கு அடிக்கடி வருவாரு.. அம்மா, அப்பாகூட விழுந்து விழுந்து பேசுவாரு.. என்னைக் கல்லையும், மண்ணையும் பார்க்கிறதைப் போலப் பார்த்துட்டுப் போயிடுவாரு.. எனக்கு கடுப்புக் கடுப்பா இருக்கும்.."

இதற்கு என்ன சொல்வது என்று தெரியாமல் பொத்தாம் பொதுவாக..

"அது அப்படித்தான்.." என்று சொல்லி வைத்தாள் ஆர்த்தி..

அதனாலதான் எனக்குப் பிடிச்சிருக்கு.. சான்ஸ் கிடைச்சா சைட் அடிக்கத் தயங்காத ஆளுக மத்தியில என் பக்கமே திரும்பாம அண்ணன்கூட ஸ்டே பண்ணிட்டுப் போகிற உங்க அண்ணனோட குணம் என்னை அட்ராக்ட் பண்ணிருச்சு.."

'பாருடா.. இதுதான் எதிர்மறை வினையா..?'

ஆர்த்திக்கு யார் அந்தக் குமார் என்று அறியும் ஆவல் மிகுந்தது. சரவணனைப் போன்ற மைத்துனன் கிடைக்க அவன் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே..

சரண்யாவை விட்டு விட்டு சரவணனைப் பற்றி அவள் மனம் நினைத்த நினைவில் தடுமாறிப் போனாள் ஆர்த்தி.

எதற்கெடுத்தாலும் சரவணன்தானா..? அவனது நண்பனைப் பற்றிப் பேசுவதும், நினைவுகளைப் பகிர்ந்து கொள்வதும் சரண்யா.. சரண்யாவைப் போன்ற மனைவி கிடைக்க குமார் கொடுத்து வைத்திருக்க வேண்டுமென்று ஏன் அவள் நினைக்கவில்லை..?

தேயிலைப் பாத்திகளைக் கடந்து.. அகன்ற, சீரான மலைப் பாதையில் ஏறி அவர்கள் நடந்தார்கள்.. சரண்யா சளசளத்துக் கொண்டே வந்தாள்.. ஊம் கொட்டியபடி நடந்த ஆர்த்திக்கு குன்னூரைப் பிடித்திருந்தது.. அதை வாய் விட்டுச் சொன்னாள்..

"உங்க ஊர் அழகான ஊர்.."

"சென்னையை விட அழகில்லை.."

'அதுசரி.. அங்கேதானே குமார் இருக்கிறான்..?'

புரிந்து கொள்ளலுடன் ஆர்த்தி சிரித்தது சரண்யாவுக்குப் பிடித்திருந்தது.. அவள் தோழமையுடன் ஆர்த்தியைப் பார்த்துக் கண்சிமிட்டினாள்.. ஆர்த்திக்கு சரவணன் டிரெயினில் கண் சிமிட்டிய சம்பவம் நினைவுக்கு வந்தது.

'அண்ணனும்.. தங்கையும் கண் சிமிட்டறதில எக்ஸ்பர்ட்டுகளா இருக்கிறாங்க..'

அவர்களைக் கடந்து போன படகுக்கார் ஒன்று நின்றது.. வெளிநாட்டுக் கார்..! அதன் நீள அகலத்தை வியந்து நோக்கினாள் ஆர்த்தி..

"பப்பாளிப்பழம்கிட்ட மாட்டிக்கிட்டோமே.." முணுமுணுத் தாள் சரண்யா..

"பப்பாளிப்பழமா..?"

சரண்யா வைத்திருந்த பெயரைக் கேட்ட ஆர்த்திக்கு சிரிப்புத்தான் வந்தது.. எங்கிருந்து இப்படிப்பட்ட பட்டப் பெயர்களை அவள் தேடிப் பிடிக்கிறாள் என்று கேட்டாள் அவள்.. ஒருநாள் அதை விலாவாரியாக எடுத்து இயம்புவதாக வாக்களித்தாள் சரண்யா..

"இப்பச் சொல்ல முடியாதுங்க.. பப்பாளிப்பழம் வந்துக்கிட்டு இருக்கு.."

சரண்யாவால் 'பப்பாளிப்பழம்' என்று பாசமாக அழைக்கப் பட்ட பெண்மணி காரின் பின்பக்கக் கதவைத்

திறந்து இறங்கினாள்.. செல்வச் செழுமையில் தளதளப்பாக இருந்தவளைப் பார்த்தால் பப்பாளிப்பழம் போலதான் இருந்தது.. ஐம்பதுகளின் ஆரம்பத்தில் இருந்தவள் சரண்யாவைப் பார்த்து அகலமாக புன்னகைத்தாள்..

அதைவிட அகலமாகப் புன்னகைத்து.

"ஆண்ட்டி.." என்று அப்பிக் கொண்டாள் சரண்யா..

ஆர்த்தி கண்களைக் கசக்கிவிட்டு இவள் சரண்யாதானா என்று உறுதிப்படுத்திக் கொண்டாள்..

"சரண்யாக் குட்டிக்குத்தான் என்மேல எவ்வளவு பிரியம்.." மகிழ்ந்து போனாள் 'பப்பாளிப்பழ' ஆண்ட்டி.. அத்தோடு நிறுத்தாமல்..

"மலைப்பாதையில வாக் போயிட்டு வர்றியா..?" என்று படு அபத்தமாக அந்த ஆண்ட்டி கேட்ட கேள்விக்கு..

"இல்லை ஆண்ட்டி.. மீன் பிடிக்கப் போயிட்டு வர்றேன்.." என்று சிரிக்காமல் பதில் சொன்னாள் சரண்யா..

'இவள் இருக்காளே..'

சிரிக்காமலிருக்க ஆர்த்தி பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியதாக இருந்தது.. ஆண்ட்டியோ..

"ஹா.. ஹா.. உனக்கு ஹியுமர் சென்ஸ் அதிகம் சரண்யாக் குட்டி.." என்று சிரித்து மகிழ்ந்து போனாள்..

"நீங்க எங்கே போயிட்டு வர்றீங்க ஆண்ட்டி..? கோவிலுக்கா..?" பவ்யமாக சரண்யா கேட்க..

"இல்லேடா.. கிளப்புக்கு போயிட்டு வர்றேன்.." என்றாள் ஆண்ட்டி..

"தெரியுமே.. இதாவது கோவிலுக்குப் போகிறதாவது.. நாள் பூராவும் லேடிஸ் கிளப்பில உட்கார்ந்து வம்பளக்கும்.."

தாழ்ந்த குரலில் ஆர்த்தியிடம் முணுமுணுத்து மேலும் சிரிப்பை மூட்டினாள் சரண்யா.. மிட்டாயை மெல்லுவதைப் போலச் சிரிப்பை மென்று தின்று கொண்டிருந்த ஆர்த்தியின் மீது ஆண்ட்டியின் பார்வை படிந்தது.. அவள் யோசனையானதில்..

"என்கொயரி கமிசன் ஆரம்பமாகப் போகுது.." என்ற அடுத்த முணுமுணுப்பு சரண்யாவிடமிருந்து வந்தது.

ஆர்த்தியின் சிரிப்பு மறைந்தது.. அவள் கலவரமானாள்.. அவளை பாதாதிகேசம் முதல் அளந்த ஆண்ட்டியின் லேசர் பார்வையில் நடுங்கிப் போனாள்..

"ரிலாக்ஸா இருங்க.." சரண்யா முணுமுணுப்பில் தைரியம் கொடுத்தாள்..

'எங்கே..? இந்தம்மா பார்க்கிற பார்வையிலே எப்படி ரிலாக்ஸாய் இருக்கிறது..?'

"இந்தப் பெண் யார் சரண்யா..? பார்த்த முகமாய் இல்லையே.."

"எப்படி ஆண்ட்டி பார்த்திருப்பீங்க..? இவங்க இந்த ஊர்க்காரங்க இல்லையே.."

"அதுதான் தெரியுதே.."

"அதானே.. உங்களுக்குத் தெரியாம இருக்குமா..? யாரு நீங்க..? ஓடுகிற தண்ணிரிலே ஒன்பது சுளுக்கெடுத்து விட மாட்டிங்களா..? பை.. ஆண்ட்டி.."

பாராட்டியபடியே சரண்யா டாட்டா சொல்லிவிட்டு நடக்க ஆரம்பிக்க அவளை இழுத்துப் பிடித்து நிறுத்தினாள் ஆண்ட்டி..

"நில்லும்மா.."

"எதுக்கு ஆண்ட்டி..? எனக்கு கால் வலிக்குதே.."

"வலிச்சாப் பொறுத்துக்க.."

"என்ன தேவைக்கு..?"

"என் தேவைக்குன்னு வைத்துக்கயேன்.. இது ஊட்டிக்காரப் பொண்ணு போலவும் தெரியலையே.."

"எப்படித் தெரியும்..? இவங்க ஊட்டிக்காரப் பெண்ணில்லையே.."

சரண்யா என்னவோ சிரிக்காமல்தான் சொன்னாள்.. ஆர்த்திக்குத்தான் அந்த இக்கட்டான நிலைமையிலும் சிரிப்பு வந்தது.. சரண்யாவின் அடாவடிப் பதில்களுக்கு அஞ்சிப் பின்வாங்காமல் பிடிவாதமாக நின்றிருந்தாள்.. 'பப்பாளிப்பழ' ஆண்ட்டி..

"அப்படியே ஆணியடிச்சதைப் போல நிக்கிறதைப் பாருங்களேன்.. நீங்க யாருன்னு தெரிஞ்சுக்காம இதுவும் நகராது.. நம்மையும் நகர விடாது.." ஆர்த்தியின் காதுகளில் முணுமுணுத்தாள் சரண்யா..

"அப்போ.. தாராபுரக்காரப் பொண்ணா..?" ஆண்ட்டி சரண்யாவின் கூற்றை உறுதிபடுத்தினாள்..

"எல்லா ஊரையும் சொல்றீங்க.. சென்னையை விட்டுட்டீங்களே.."

"ஓ.. இது சென்னைக்காரப் பொண்ணா..?"

ஆண்ட்டி அத்துடன் நிற்க வேண்டுமே என்று ஆர்த்தியின் மனம் நடுங்கியது.

சொந்த அடையாளமின்றி அடுத்தவரின் அடையாளத்தில் மறைய நேர்வது கொடுமை.. அந்தக் கொடுமையை அனுபவித்துக் கொண்டிருந்தாள் ஆர்த்தி.. நல்ல வேளையாக குமாரின் தங்கையின் பெயரை சரவணனின் வீட்டார் அறிந்திருக்கவில்லை.. அந்த வகையில் தப்பித்தாள் ஆர்த்தி.. தனது சொந்தப் பெயரைச் சொல்ல முடிகின்றதே என்ற நிம்மதி அவளுக்கு..

ஆண்ட்டியின் லேசர் பார்வை ஆர்த்தியை ஆராய்ந்ததில்..

"எக்ஸ்ரே எடுக்கறவங்க இந்தம்மாவைக் கடத்திக்கிட்டு போயிரலாம்.. இது கண்ணாலேயே எக்ஸ்ரே எடுத்துக் கொடுத்திரும்.." என்று பரிந்துரை செய்தாள் சரண்யா..

"ஏன் சரண்யா..?" ஆண்ட்டி வினா எழுப்ப..

"என்ன ஆண்ட்டி..?" என்று பதில்வினா எழுப்பினாள் சரண்யா.

"சென்னைக்கார பொண்ணுங்கறியே.."

"ஆமாம் ஆண்ட்டி.. அதில ஏதாவது குற்றம்குறை இருக்கா..?"

பதவிசாக கேட்டு வைத்து ஆர்த்திக்கு சிரிப்பை மூட்டினாள் சரண்யா.. ஆண்ட்டிக்கு ஏன் சிரிப்பு வரவில்லை என்று யோசித்தாள் ஆர்த்தி.. அதைப் பற்றியெல்லாம் யோசிக்கிற ரகமாக இல்லை அந்த ஆண்ட்டி.. ஒரே குறிக்கோளுடன் ஆர்த்தியைப் பற்றிய பேச்சையே அவள் வளர்த்தாள்.

"அட அதுக்கில்லைம்மா.."

"எதுக்கில்லைம்மா..?"

"சென்னைப் பொண்ணுக்கு குன்னூரில என்ன வேலை..?"

"எதுவும் இல்லைன்னா நீங்க வேலை குடுப்பீங்களா ஆண்ட்டி..?"

"ஹா..ஹா.. நான்தான் சொன்னேனே.. உனக்கு ஹியுமர் சென்ஸ் அதிகம்ன்னு.. எதுக்கெடுத்தாலும் ஜோக்கை சொல்லி அசத்திருவியே.."

"நீங்க அயருகிற ஆளா ஆண்ட்டி..?"

"இந்தப் பெண் உன் கூடப் படிச்சவளா..?"

"இல்லை ஆண்ட்டி.."

"சொந்தக்காரப் பெண்ணா..?"

"ஏறக்குறைய அப்படித்தான் ஆண்ட்டி.."

உரையாடல் தொடர்ந்து கொண்டே இருந்தது.. ஆண்ட்டி விடுகிற ரகமாக இல்லை.. சரண்யாவும் விவரத்தைக் கக்குகிற ரகமாக இல்லை.. அந்த விடாக்கண்டி.. கொடாக்கண்டி போராட்டத்தில் ஆர்த்தி அல்லாடிப் போனாள்.. அழகான உலாவுதலின் இடையே அபஸ்வரம் தட்டி விட்டதைப் போல உணர்ந்தாள்..

"ப்ளீஸ் சரண்யா.."

சரண்யாவிடம் அவள் கெஞ்சியதற்காகப் போனால் போகிறது என்று விவரம் சொன்னாள் சரண்யா..

"அண்ணாவோட பிரண்டும், அப்பாவும் ஃபாரின் போயிருக்காங்க ஆண்ட்டி.. அவங்க வீட்டுப் பெண்ணை எங்க வீட்டிலே பாதுகாப்பா விட்டுவிட்டு போயிருக்காங்க.."

சரண்யா பெருமையுடன் சொன்னாள்.. குமாரின் தங்கையை சரண்யாவின் குடும்பம் பாதுகாக்கிறது என்ற உணர்வில் அவள் ஆர்த்தியை சரவணன்தான் அழைத்துக் கொண்டு வந்தான் என்பதையே மறந்து விட்டாள்.. என்னவோ குமாரும், அவனுடைய அப்பாவும் நேரில் வந்து ஆர்த்தியின் கையைப் பிடித்து சரவணனைப் பெற்றவர்களின் கைகளில் ஒப்படைத்து..

"எங்க கண்ணையையே உங்ககிட்ட ஒப்படைத்து விட்டுப் போகிறோம்.. பத்திரமாப் பார்த்துக்கங்க.." என்று

நெக்குருகியதைப் போலவே அனைவரிடமும் பேசி வைத்தாள்..

அது ஆர்த்தியை எந்த அளவிற்குக் காப்பாற்றிக் கொண்டிருக் கிறது என்பதை சரண்யா அறிவாளா என்ற நினைவுடன் உதட்டைக் கடித்துக் கொண்டாள் ஆர்த்தி..

சரண்யாவின் இயல்பான அந்த வார்த்தைகள் ஆர்த்திக்கான கௌரவத்தைத் தேடாமலே தந்து கொண்டிருந்தன..

"ஓ..! அப்படியா..? இந்தப் பெண்ணோட அம்மாவும் ஃபாரின் போயிட்டாங்களா..?"

"ஊஹீம்.. சாமிகிட்டப் போயிட்டாங்களாம்.."

"ஐய்யோ.. பாவம்.."

ஆண்ட்டியின் பரிதாப வார்த்தைகளில் சங்கடம் கொண்டாலும் இனியாவது அவள் வழியை விட்டு விலகுவாளே என்று நிம்மதியடைந்தாள் ஆர்த்தி..

"தாயில்லாப் பெண்ணா..? நம்ம வீட்டுக்கு ஒருநாள் அழைத்துக்கிட்டு வா சரண்யா.."

"நம்ம வீடா..?"

"எங்க வீட்டைத்தான் சொல்றேன்ம்மா.."

"அது உங்க வீடு ஆண்ட்டி.. நம்ம வீடுன்னு நீங்க சொல்கிறதை வைச்சு.. உங்க வீட்டிலே நான் பங்கு கேட்டுட்டேன்னு வைச்சுக்கங்க.. உங்க பெண்ணும், பிள்ளையும் என்னை ஊறுகாய் போட்டுற மாட்டாங்களா..?"

"வந்துருவாங்களோ.. சரண்யா என் மருமகள்ன்னு சொல்லிற மாட்டேன்..? எங்களோட அத்தனை புராப்பர்ட்டிகளயும் உன் பேருக்கு எழுதி வைச்சிர மாட்டேன்..?"

ஆண்ட்டியின் வார்த்தைகளை சரண்யா ரசிக்கவில்லை.. விளக்கெண்ணையைக் குடித்ததைப் போல அவள் முகம் மாறிப் போனதை அந்த ஆண்ட்டியும் ரசிக்கவில்லை..

"ஏன்ம்மா..? என் மகனை மேரேஜ் பண்ணிக்க உனக்குக் கசக்குதா..?" என்று நேரடியாகவே கேட்டு விட்டாள்..

அதற்குள் இயல்பு நிலைக்குத் திரும்பி விட்ட சரண்யா..

"ஜோக்கடிக்காதீங்க ஆண்ட்டி.." என்று அதை நகைச் சுவையாக்கி சிரித்து வைத்தாள்..

இப்போது ஆண்ட்டியின் முகம் விளக் கெண்ணையைக் குடித்து வைத்தது.. மாறிப் போன முகத்துடன்..

"சரிசரி.. பத்திரமா வீட்டுக்குப் போய் சேருங்க.." என்றபடி சரண்யாவின் பேச்சைக் கண்டு கொள்ளாதவளைப் போல காருக்கு நடந்து விட்டாள்..

"ப்பா..! இது இருக்கே.."

சரண்யா வாயைக் குவித்து.. 'ஊஃப்..' என்று காற்றை ஊதித் தோள்களைக் குலுக்கினாள்..

ஆண்ட்டியின் கார் கிளம்பிப் போய் விட்டது.. சரண்யாவின் முகத்தில் இறுக்கம் வந்திருந்தது.. அது அந்த ஆண்ட்டியின் பேச்சினால் விளைந்ததாக இருக்கலாம் என்று நினைத்துக் கொண்டாள் ஆர்த்தி.. பிடிக்காத ஆணுடன் இணை சேர்த்துப் பேசப்படுவதை பெண் மனம் விரும்புவதில்லை..

அதைப் பற்றி வினவுவது நாகரிகமாக இருக்காது என்பதினால் ஆர்த்தி மௌனித்தாள்.. உணர்வுகள் தனிப்பட்டவை.. அவரவர்க்குச் சொந்தமானவை.. அவற்றில் மற்றவர் தலையிடக் கூடாது.

ஆழ்ந்த சிந்தனையுடன் நடந்து கொண்டிருந்தாள் சரண்யா.. அவளாலும் அப்படி சிந்திக்க முடியும் என்பதில் வியப்படைந்தாள் ஆர்த்தி.. குறும்பும், துடுக்குத்தனமும் நிரம்பியிருக்கும் ஒருத்தியிடம் ஆழமான சிந்தனைகளும் குடிகொண்டிருப்பதை அப்போதுதான் அவள் உணர்ந்தாள்..

'இவ மனசில என்ன இருக்கு..?'

எளிதில் கேட்டு விட முடியாத கேள்வி.. வீடு நெருங்கி விட்டதை உணர்ந்த ஆர்த்திக்கு இன்றைக்கு இவ்வளவுதானா என்று சோர்வு எழுந்தது..

அவள் வீட்டை விட்டு வெளியில் செல்லக் கூடாது என்று சரவணன் உத்தரவு பிறப்பித்திருந்தான்.. அதை வீட்டாரின் முன்னால் சொல்லாமல் தனியே அவளிடம் சொல்லியிருந்தான்.. ஆர்த்தியினால் வீட்டில்

அடைபட்டிருக்க முடியவில்லை.. முதல் இரு தினங்கள் அவள் வீட்டை விட்டு நகராமல் உட்கார்ந்திருந்தாள்தான்.. அடுத்தடுத்த நாள்களில் அவளுக்கு மூச்சு முட்ட ஆரம்பித்து விட்டது.. அதை உடைத்து அவளை வெளிக் கொணர்ந்தவள் சரண்யாதான்..

"வர்றீங்களா.. இப்படியே ஒரு வாக் போயிட்டு வரலாம்.." அவளின் அழைப்பில் உற்சாகமாகி அவள் கரம் கோர்த்து குன்னூரின் தேயிலைச் செடிகளின் மத்தியில் சுற்றிவந்து ஆசுவாசமானாள் ஆர்த்தி.. சரண்யாவின் துடிப்பான குணம் அவளது தனிமையைத் தகர்த்தெறிந்தது.. கலகலப்பாக பேசிச் சிரிக்கக் கற்றுக் கொடுத்தது.. தனது இக்கட்டான நிலையை மறந்து சிரித்துப் பேச ஆரம்பித்தாள் ஆர்த்தி..

'இவளால்தான் இது சாத்தியமானது...' நன்றியுடன் சரண்யாவைப் பார்த்தாள்..

"ஓ..! வீடு வந்துருச்சா..?"

அதைக்கூட உணராமல் சிந்தித்தபடி வந்த சரண்யா கேட்டாள்.. ஆர்த்திக்கு பாவமாக இருந்தது..

"அது வரலை.. நாம்தான் வீட்டுக்கு வந்திருக்கோம்.." என்றாள்.

"இங்கே பாரு.. பேசாமடந்தைகூட போட்டுத் தாக்கறாங்க.. கொஞ்ச நேரம் மௌனகுரு வேசம் போட்டு விடக் கூடாதே.. ஸ்வாஹா பண்ணிக் கிளம்பிருவீங்களே.."

சரண்யாவின் பழைய கலகலப்பு திரும்பி விட்டது..

ஆர்த்தி நிம்மதியாக உணர்ந்தாள்.. இதற்காகத்தானே அவள சரண்யாவை உசுப்பி விடுவதைப் போல பேசிவைத்தாள்..

"அதில்லை சரண்யா.. வீட்டுக்கு கால்கள் இல்லை.. நமக்குத்தான் இருக்கு.."

"இந்த ஏழாவது அறிவை வைச்சுத்தான் அதைக் கண்டு பிடிச்சீங்களா..? எங்கேயோ போயிட்டிங்க போங்க.."

சிரித்துப் பேசியபடி வீட்டுக்குள் போனவர்களை காபி டிபனுடன் எதிர்க கொண்டாள் கவிதா.. கொஞ்சநேரம் அவர்கள் மூவருமாக அரட்டையடித்தார்கள்.. டென்னிஸ் விளையாடலாமா என்று கேட்டாள் சரண்யா..

"ஓ.." உற்சாகமாக தலையை அசைத்தாள் ஆர்த்தி..

தோட்டத்தில் இருந்த டென்னிஸ் கோர்ட்டில் அவர்கள் விளையாட கவிதா நாற்காலியைப் போட்டு உட்கார்ந்து வேடிக்கை பார்த்தபடி அவர்கள் இருவரையுமே உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தாள்.. இருள் மயங்கிய வேளையில் சுந்தரமும், சரவணனும் வந்துவிட விளையாட்டு நின்றது.. சரவணனின் பார்வை ஆர்த்தியின் மீது படிந்தது.. காலையிலிருந்து அவளைப் பார்க்காத துடிப்புடன் அவன் பார்வையை எதிர்கொண்ட ஆர்த்தியின் பார்வையிலிருந்த ஆவலை உணர்ந்தவனின் கண்கள் மின்னின..

இது என்ன வகையான சொந்தம் என்று தெரியாமல் தவித்துப் போனாள் ஆர்த்தி.. அவள் யார்..? அவன் யார்..? ஏன் இந்த தவிப்பு..?

12

"தீபாதரணையைத் தொட்டுக் கும்பிட்டுக்கம்மா.."

கனிவுடன் சொன்னாள் கவிதா.. அர்ச்சகர் நீட்டிய தீபாதரணைத்தட்டிலிருந்த கற்பூர ஒளியைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள் ஆர்த்தி.. குங்குமப் பிரசாதத்தை நெற்றியில் இட்டுக் கொண்டாள்.. கர்ப்பகிரகத்தில் இருந்த அம்மனின் கண்களில் கருணை ததும்பிக் கொண்டிருந்தது.

'காத்திடு தாயே..' ஆர்த்தியின் மனம் விம்மியது..

நாளாக நாளாக அந்தக் குடும்பத்துடன் அவள் ஒன்றிக் கொள்ள ஆரம்பித்திருந்தாள்.. அவள்வேறு அந்தக் குடும்பம் வேறு என்றே அவளுக்குத் தோன்றவில்லை.. தனித்திருக்கும் நொடிகளில் அதைப் பற்றிய யோசனை வரும்போது அவள் மனம் பதைக்கும்.. அந்த வீட்டை விட்டு வெளியேற வேண்டியவள் அவள் என்ற உண்மையில் பரிதவித்துப் போவாள்..

மூக்குத்தியின் ஒளிர்வுடன் சர்வ அலங்கார பூஷிதையாய் அவளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்த அம்மனிடம் என்ன சொல்லி இறைஞ்சுவது என்று புரியாமல் திகைத்தாள் ஆர்த்தி.. அவள் எதைக் கேட்பாள்..? இந்த

வீட்டுடன் அவளுக்கிருக்கும் பந்தம் நிலைக்க வேண்டும் என்று கேட்க முடியுமா..? அது சாத்தியமாகுமா..?

"வாம்மா.. பிரகாரத்தைச் சுற்றலாம்.."

மென்மையாக அவளை அழைத்தாள் கவிதா.. தலையாட்டி விட்டு அவளைத் தொடர்ந்த ஆர்த்தியின் அடக்கமும், பணிவும், பதவிசும் கவிதாவை வெகுவாகக் கவர்ந்தன.. ஆர்த்தி கவிதாவின் பின்னாடியே சுற்றினாள்.. கவிதாவின் முந்தானையைப் பிடிக்காத ஒன்றுதான் குறை.. மற்றபடி குட்டி போட்ட பூனையைப் போல கவிதாவைச் சுற்றியே அவளது சஞ்சாரம் இருந்தது.

"என்னடி இந்தப் பொண்ணு உன்கிட்ட இவ்வளவு ஒட்டுதலா இருக்குது..?" சுந்தரம் வியந்து போனார்..

அதில் கவிதாவின் மனதில் லேசான பெருமிதம் வந்தது.. அவள் வாத்சல்யத்துடன் ஆர்த்தியை பார்த்தபடி..

"என்னென்னு எனக்கும் தெரியலைங்க.." என்றாள்..

"நம்ம சரண்யாகூட உன்னை இந்த அளவுக்கு கொண்டாடின தில்ல போ.. எனக்கே உன்மேல பொறாமையா இருக்கு.."

"கேலி பண்றீங்களா..?"

"நிஜமாததான் சொல்றேன் கவிதா.. இந்தப் பெண் ஒட்டுப் புல்லைப் போல உன்னையே ஒட்டிக்கிட்டு அலையுதே.."

ஆர்த்தி அப்படித்தான் இருந்தாள்.. வீட்டில் இருக்கும்போது கவிதாவின் அருகாமையிலேயே இருந்தாள்..

அவள் பூஜையறையில் விளக்கேற்றும் போது கூட நின்று கை குவித்து பாட்டுப் பாடினாள்.. அவள் டிவி பார்க்கும் போது ஒட்டி உட்கார்ந்து தோளில் சாய்ந்து சீரியல்களை விமர்சனம் செய்தாள்.. அவள் டைனிங் டேபிளில் பரிமாறும் போது தானும் கூட நின்று உதவி செய்தாள்..

"நீயும் இருக்கியே.. ஆர்த்தியைப் பாரு.. எவ்வளவு ஒத்தாசையா இருக்கிறா.."

சரண்யாவிடம் ஆர்த்தியை மேற்கோள் காட்டுமளவிற்கு அவள் கவிதாவுடன் பசை இல்லாமலே ஒட்டிக் கொண்டதில்..

"என்னங்க நீங்க.. எனக்கே வேட்டு வைக்கறீங்க..?" என்று கலாய்த்தாள் சரண்யா..

கவிதா கோவிலுக்குக் கிளம்பினால் கூடவே ஒட்டிக் கொள்வாள் ஆர்த்தி.. அந்த குணம் கவிதாவை ஈர்த்தது.. ஆர்த்தியின் மீது பாசம் கொள்ள வைத்தது..

"குங்குமத்தை சரியா வைச்சுக்கம்மா.."

கவிதா ஆர்த்தியின் நெற்றியிலிருந்த குங்குமத் தீற்றலை சரி செய்து விட்டாள்.. பசுவிடம் முகத்தைக் காட்டும் கன்றுக்குட்டியாய் ஆர்த்தி முகம் காட்டி நின்றதில் கவிதாவின் மனதில் பரிவு பொங்கியது..

'பாவம்.. தாயில்லாப் பெண்..'

கருணையுடன் ஆர்த்தியின் தோளை அணைத்துக் கொண்டாள்.. அவர்கள் பிரகாரத்தை வலம் வந்து

கொண்டிருந்த போது எதிரில் வந்த பெண்மணி கவிதாவிடம் நின்று பேச ஆரம்பித்து விட்டாள்..

"எப்படியிருக்க கவிதா.. பார்த்து நாளாச்சு.."

"நல்லாயிருக்கேன் அண்ணி.. நீங்க வீட்டுப் பக்கம் வந்து நாளாச்சுல்ல.. அப்புறம் பார்த்து நாளாகாம என்ன செய்யும்..?"

"எங்கே..? நாங்க வந்து போகிறதைப் போலவா நீயும் அண்ணனும் பேசி வைக்கறீங்க..? உங்க சரவணனுக்குப் பெண் கொடுக்க எங்களுக்குத் தகுதியில்லையா..?"

இப்படிக் கேட்ட பெண்மணி வைரங்களில் ஒளிர்ந்தாள்.. அவளது பணக்காரக் களையில் ஆத்தி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அவளும் பணக்கார வீட்டில் பிறந்தவள்தான்.. ஆனால், தாயில்லாமல் சிற்றன்னையின் பாரபட்சத்துடன் வளர்ந்தவள்.. இயல்பாகவே பொங்கும் தன்னிரக்கத்தில் தான் ஒரு பணக்காரி என்ற எண்ணமே அவளுக்கு வந்ததில்லை..

"அப்படின்னு யார் சொன்னது அண்ணி..? சரவணன்தான் சொந்தத்திற்குள்ளே மேரேஜ் பண்ணிக்க மாட்டேன்னு சொல்லிட்டானே.."

"சொந்தத்தை விட்டுட்டு அன்னியத்தில எந்த ரதியை எங்க மருமகன் கல்யாணம் பண்ணிக்கப் போகிறாராம்..?"

மனத்தாங்கலுடன் கேட்ட பெண்மணியின் பார்வை ஆர்த்தியின் மீது படிந்தது.. ரதியின் பேரழகோடு நின்றவளைப் பார்த்தவளின் புருவங்கள் சுருங்கின..

"இந்தப் பெண் யார் கவிதா..?"

நேரடியாகவே அவள் கேட்டு விட்டதில் சங்கடப்பட்டுப் போனாள் ஆர்த்தி.. சரவணனின் குடும்பத்தை விட்டு அவளைப் பிரித்து நிறுத்திவைத்தது அந்தக் கேள்வி.. இது போன்ற கேள்விகளை எதிர்நோக்கும்வரை அவள் தாய்ப்பறவையின் சிறகுக்கடியில் இருப்பதைப் போல பாதுகாப்பாக இருப்பாள்.. கேள்வி வந்து விட்டால் நிராதரவாக நிற்பதைப் போல தவித்துப் போவாள்..

அப்போதும் அந்தத் தவிப்பு அவள் முகத்தில் வர அதை உணர்ந்தவளாய் அவள் தோளைச் சுற்றிக் கையைப் போட்டு ஆதரவாக அணைத்து நின்றாள் கவிதா.. அந்த அன்பில் ஆர்த்தியின் மனதிலிருந்த நிராதரவான உணர்வு மறந்து விட்டது.

"சரவணனோட பிரண்டு.. குமார்ன்னு பேரு.. தங்கமான பையன்.. அப்பாவும் அவனுமா ஃபாரின் போக வேண்டியதாப் போச்சு.. அவனோட தங்கையை எங்க பொறுப்பில விட்டு விட்டுப் போயிருக்காங்க.."

இதமான வார்த்தைகள்.. ஆர்த்தியை அழைத்து வந்தது சரவணன்தான் என்பதைச் சொல்லாத வார்த்தைகள்.. ஆர்த்தியின் குடும்பமே நேரில் வந்து கவிதாவின் கை பிடித்து ஆர்த்தியின் கையை வைத்து ஒப்படைத்து விட்டுப் போனதைப் போன்ற தோற்றத்தை உருவாக்கும் வார்த்தைகள்..

தன்னிச்சையாக கவிதாவின் தோள் சாய்ந்து கொண்டாள் ஆர்த்தி.. பார்த்துக் கொண்டிருந்த

பெண்மணியின் முகம் கடுத்தது.. அதை மறைத்துக் கொண்டு.. சிரித்த முகமாய் இருக்க முயன்றபடி..

"பரவாயில்லையே.. உங்கிட்ட பெத்த பொண்ணைப் போல இந்தப் பொண்ணு ஒட்டிக்கிச்சே.. சரண்யாகூட உங்களுக்கு இன்னொரு மகளும் இருக்கான்னு சொல்லு.." என்று ஆர்த்தியை கவிதாவின் மகளாக்கினாள்..

அதற்குப் பதில் சொல்லாமல் சிரித்து வைத்தாள் கவிதா..

'இந்தச் சிரிப்புக்கு என்ன அர்த்தம்..? மகள்ன்னு ஒப்புக்கிறாளா.. இல்லையா..?' தலை காய்ந்து போனாள் அந்தப் பெண்மணி..

"வாங்க அண்ணி.. அப்படி மண்டபத்தில உட்கார்ந்து பேசலாம்.."

பிரகாரத்தை வலம் வந்து விட்டதால் உட்கார்ந்து பேச அழைத்தாள் கவிதா..

"என்னத்தைப் பேசப் போறோம்..? சம்பந்தத்தையா..?" அந்தப் பெண்மணி நொடித்தாள்..

"அதை விட்டாப் பேச வேற பேச்சா இல்லை..?"

"உனக்கு இருக்கும் ஆயிரம் பேச்சு.. எனக்கு அந்த ஒரு பேச்சுத்தான் நினைப்பில இருக்கு.."

"இருந்தாக் குற்றமில்லை.. வாங்க.."

"நீ உட்காரு கவிதா.. கோவிலுக்கு வந்து சாமியைத் தரிசனம் பண்ணி.. பிரகாரத்தையும் சுற்றிட்டு விச்ராந்தியா

உட்காரக் கிளம்பிட்ட.. நான் அப்படியா..? இப்பத்தான் கோவிலுக்குள்ள வந்திருக்கேன்.. இனிமேத்தான் சாமியைத் தரிசனம் பண்ணப் போகனும்.. எல்லாத்திலயும் நீ முதல் ஆள்தான்.."

சடைத்தபடி அந்தப் பெண் சென்று விட்டாள்.. ஆச்சரியமாக அவளைப் பார்த்த ஆர்த்தி..

"இதுக்குக் கூடவா பொறாமைப் படுவாங்க..?" என்று கவிதாவிடம் கேட்டாள்..

"சும்மா.. கேலிக்குப்பேசறாங்க.. மனதில் ஒன்றும் இருக்காது.."

பெருந்தன்மையாக சொல்லியபடி மண்டபத்தின் படியில் உட்கார்ந்த கவிதாவை ஆர்த்திக்கு பிடித்திருந்தது.. அவளின் பேச்சு.. காருண்யம்.. பாசம்.. அன்பு என்று அத்தனையும் ஒன்று சேர்ந்து அவளை ஆகர்ஷித்து அருகில் இழுத்தது.

கவிதாவின் காலடியில் அமர்ந்து அவள் மடியில் தலை சாய்த்துக் கொண்டாள் ஆர்த்தி.. சிலிர்த்துப் போனாள் கவிதா.. ஏன் இப்படிச் செய்கிறாய் என்று ஆர்த்தியை அவளால் தடுக்க முடியவில்லை.. அப்படி கவிதாவின் மடியில் தலை சாய்த்து அமர்ந்திருப்பதை ஆர்த்தி விரும்புவதை புரிந்து வைத்திருந்தாள் கவிதா.. தாயன்பைத் தேடும் ஆர்த்தியின் தவிப்பில் மனம் கரைந்தவள் இதமாக அவள் முடிகோதி விட்டாள்..

அதைத் தொலைவிலிருந்து பார்த்த அந்தப் பெண்மணியின் வயிறு எரிந்தது.. இவள் எவளா இருக்கும்.. என்று ஆர்த்தியை முறைத்துப் பார்த்தபடி சாமி கும்பிடச் சென்றாள் அவள்..

13

புரண்டு படுத்தாள் ஆர்த்தி.. ஏனோ தூக்கம் கலைந்து விழிப்பு வந்து விட்டது.. மறுபடியும் தூங்க முயன்றவளுக்குத் துக்கம் வரவில்லை.. தண்ணீர் குடிக்க வேண்டும் போல இருந்ததில் அருகில் இருந்த தண்ணீர் ஜக்கை எடுத்தாள்.. தொண்டையில் சரித்தாள்.. தண்ணீர் விழவில்லை.. என்னடா இது என்று விளக்கைப் போட்டு ஜக்கைப் பார்த்தாள்.. ஜக் காலியாக இருந்தது..

'இல்லாத தண்ணியை வா.. வா..ன்னு சொன்னா எப்படி வரும்..?'

தனக்குள் சிரித்துக் கொண்டவள் காலி ஜக்குடன் அறைக் கதவைத் திறந்து வெளியில் வந்தாள்.. குன்னூரின் குளிர் காற்று ஹீட்டர் இருந்த அறையை விட்டு வெளியில் வந்தவளின் உடலைத் தாக்கியது.. அணிந்திருந்த ஸ்வெட்டரை இறுக்கிப் பிடித்தபடி மாடிப்படிகளில் இறங்கினாள்.. சமையலறைக்குச் சென்று பொருத்தப்பட்டிருந்த சுத்திகரிப்புக் குழாயைத் திருகி

சுத்தமான தண்ணீரை ஜக்கில் பிடித்துக் குடித்தாள்.. தாகம் அடங்கியதும் ஜக் நிறைய குடிதண்ணீரைப் பிடித்துக் கொண்டவள் அப்போதுதான் ஹாலை ஒட்டியிருந்த சுந்தரத்தின் அலுவலக அறைக்குள் விளக்கு எரிவதைக் கவனித்தாள்..

'இந்த மிட்நைட்டிலே யார் வொர்க் பண்றது..? அங்கிளா.. இல்லை.. சரவணனா..?'

மனம் குறுகுறுக்க சந்தடி செய்யாமல் அறைக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள்.. அங்கே அவளுக்கு முதுகு காட்டி கம்யூட்டரின் முன்னால் உட்கார்ந்து கீ போர்டில் அடித்துக் கொண்டிந்தார் சுந்தரம்..

'அங்கிளா..?'

மணி பார்த்த ஆர்த்தி சப்தம் எழுப்பாமல் அறைக்கதவை மூடிவிட்டு சமையலறைக்குப் போனாள்.. ஃபிரிஜைத் திறந்து பால் பாக்கெட்டை எடுத்தவள் கட் பண்ணி பாத்திரத்தில் ஊற்றி 'டீ' போட்டாள்.. தயாரான 'டீ'யை கப்பில் ஊற்றி எடுத்துக் கொண்டவள் அலுவலக அறைக்குப் போனாள்.. கதவை விரலால் இரண்டு தட்டு தட்டினாள்..

"யார் அது..?" சுந்தரம் திரும்பினார்..

"நான்தான் அங்கிள்.." டீக்கப்புடன் உள்ளே போனாள் ஆர்த்தி.

"என்னம்மா..? இந்த நேரத்தில இங்கே என்ன பண்ற..?" ஆச்சரியமானார் சுந்தரம்..

"அதை நானும் கேட்கலாமில்லையா அங்கிள்..?" ஆர்த்தி 'டீ'க்கப்பை அவரிடம் நீட்டினாள்..

தூக்கம் விழிகளில் சொக்கக் களைத்துப் போயிருந்த சுந்தரத்திற்கு 'டீ'யைக் கண்டதும் தேவாமிர்தத்தைக் கண்டதைப் போல இருந்தது.. ஆவலுடன் வாங்கிக் கொண்டவர்..

"தேங்க்ஸ்ம்மா.." என்று மனப்பூர்வமாக நன்றி சொல்லிவிட்டு சூடான டீயை உறிஞ்ச ஆரம்பித்தார்..

குளிருக்கு இதமான சூடான தேநீர் தொண்டையில் இறங்கியதில் அவர் உடலில் கதகதப்பு பரவியது.. கேட்காமலே சுடச்சுட தேநீர் போட்டுக் கொண்டு வந்த ஆர்த்தியை பிரியத்துடன் பார்த்தார்..

"தூங்கலையாம்மா..?"

"தூக்கம் வரலை அங்கிள்.. தண்ணீர் குடிக்கலாம்ன்னு பார்த்தா தண்ணீரும் இல்லை.. சரி.. கிச்சனில வந்து பிடித்துக் கொண்டு போகலாம்ன்னு மாடியிறங்கி வந்தா.. உங்க ஆபிஸ் ரூமில லைட் எரிந்தது.. என்னன்னு எட்டிப் பார்த்தேன்.. நீங்க டயர்டா வொர்க் பண்ணிக்கிட்டு இருந்தீங்க.. அதான்.. டீ போட்டுக் கொண்டு வந்தேன்.."

இயல்பாக பேசியபடி கம்யூட்டரைப் பார்த்த ஆர்த்தி..

"என்ன டைப் பண்றீங்க அங்கிள்..?" என்று கேட்டாள்..

"எங்க எஸ்டேட்டோட ஆன்னுவல் ஸ்டேட் மெண்ட்ம்மா.. கான்பிடென்சியல்.. ஆடிட்டர் கொடுத்த

பேலன்ஸ் சீட்டை வெரிஃபை பண்ணி நானே ரெடி பண்ணிக்கிட்டு இருக்கேன்.."

"நான் ஹெல்ப் பண்ணவா..?"

"உனக்கேம்மா சிரமம்..?"

"இதில என்ன சிரமம் அங்கிள்..? எனக்கும் தூக்கம் வரலை.. ஏதாச்சும் வொர்க் பண்ணினா பெட்டரா ஃபீல் பண்ணுவேன்.."

அவருக்கு உதவி என்றில்லாமல் அது அவளுக்கான உதவி என்பதைப் போல அவள் சாதுர்யமாக பதில் சொன்னதை ரசித்துச் சிரித்தார் சுந்தரம்.. கம்யூட்டரை விட்டு நகர்ந்து அமர்ந்தார்.. ஆர்த்தி கம்யூட்டரின் முன்னால் ஒரு சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள்.. சுந்தரம் சொல்லச்சொல்ல படுவேகமாக டைப் பண்ண ஆரம்பித்தாள்.. இரண்டு மணி நேரம் ஓடியதும் சுந்தரத்தின் வேலை முடிந்து விட்டது..

"தேங்க்ஸ்ம்மா.. நீ வரலைன்னா இந்த வொர்க்கை இன்றைக்கே முடித்திருக்க முடியாது.." முகம் மலரச் சொன்னார் சுந்தரம்..

"தேங்க்ஸ் சொல்லி என்னை தேர்டு பெர்சனாக்கறிங்க பார்த்தீங்களா..?" வெள்ளையாக சிரித்தாள் ஆர்த்தி..

'இவள் தேர்ட் பெர்சனா..?'

இல்லையென்று தோன்றியது சுந்தரத்திற்கு.. சரண்யாவின் மீது அவருக்கு ஏற்படும் பாசம், ஆர்த்தியின் மீதும் ஏற்படுகிறதே.. அது ஏன்..?

பிரிண்ட் எடுக்கப்பட்ட ஸ்டேட்மெண்டின் பிரதிகளை நேர்த்தியுடன் அடுக்கிப் ஃபைல் பண்ணிக் கொண்டிருந்தவளைப் பார்த்தார்.. முதன் முறையாகக் கேட்டுக் கொள்கிறவளைப் போல இல்லாமல்.. ஆண்டாண்டு காலமாக அவளுடைய எஸ்டேட்டின் வரவு, செலவு கணக்குகளை அறிந்து வைத்திருந்தவளைப் போல அவர் சொன்ன விவரங்களை படு விரைவில் உட்கிரகித்துக் கொண்ட அவளின் திறமையில் அவருக்கு மதிப்பு உண்டானது..

"என்ன படிச்சிருக்கம்மா..?"

"எம்.பி.ஏ. அங்கிள்.."

இயல்பாகச் சொல்லிவிட்டு பளிச்சென்ற அவள் சிரித்த வெள்ளைச் சிரிப்பு அவரை வசீகரித்தது.. அலுவலக அறையை ஒழுங்கு பண்ணியவளின் பொறுப்புணர்வு அவரைக் கவர்ந்தது..

"போகலாமா அங்கிள்..?"

"போக வேண்டியதுதான்.. அதான் மலையைப் போல முன்னால் நின்ற வேலையைப் பனியைப் போல ஊதித் தள்ளிட்டயே.."

சிரித்தார்.. சிரித்தாள்.. அலுவலக அறையைப் பூட்டிவிட்டு ஏதோ பேசியபடி படியில் ஏறினார்கள்.. எதிரில் வந்த சரவணன் அவர்களை வியப்புடன் பார்த்தான்..

"தூங்கலையாப்பா..?"

அதே கேள்வியை ஆர்த்தியிடம் விழிகளால் அவன் கேட்டபோது ஆர்த்தியின் உடலில் சிலிர்ப்பு ஊடுறிவியது.. இமை மூடி இல்லையென்ற பதிலை அவனுக்கு அவள் தந்தபோது அவன் கண்கள் மின்னின..

"நானில்ல இதைக் கேட்கணும்.. நீ தூங்கலையா..?"

"தண்ணீர் பிடிக்க வந்தேன்ப்பா.. ஜக்கில் தண்ணீரில்ல..."

"உனக்குமா..?"

சுந்தரம் ஆர்த்தியைப் பார்த்துச் சிரிக்க அவளும் கூடச் சேர்ந்து சிரித்தாள்.. சரவணனுக்குள் மெலிதான பொறாமை உண்டானது.. அது என்ன.. அவர்கள் இரண்டுபேரும் கூட்டணி போட்டு அவனைக் கலாய்ப்பது..?

"உனக்குமான்னா..?"

அவன் ஒரு மார்க்கமாக ஆர்த்தியைப் பார்த்து வைத்தான்.. அவள் முகம் சிவந்தது.. அவன் மனதின் பொறாமை மறைந்து சில்லென்ற உணர்வு ஏற்பட்டது.. விசிலடிக்க வேண்டும் போலத் தோன்றியதை அடக்கிக் கொண்டான்..

'அப்பா முன்னால் விசிலடிச்சா அவ்வளவுதான்..'

"ஆர்த்திக்கும் தாகமெடுத்திருக்கு.. தண்ணீர் குடிக்கப் போனா ஜக்கில தண்ணியில்லையாம்.."

அதற்காகத்தான் இவள் கீழே வந்தாளா என்ற நினைவுடன் அவளைப் பார்த்தான்.. அதுவரை அவனையே

பார்த்துக் கொண்டிருந்தவள் அவசரமாக விழிகளைத் திருப்பிக் கொண்டதில் அவன் முகத்தில் மந்தஹாசம் படர்ந்தது.. இதழோரக் குறுஞ் சிரிப்புடன் அவளையே குறுகுறுவென பார்த்து வைத்தான்.. அவ்வளவுதான் ஆர்த்தியின் விரல்கள் நடுங்க ஆரம்பித்து விட்டன.. ஏற்கனெவே சிவந்திருந்த முகம் குங்குமமாய் சிவந்து விட்டது.. அவளுடைய பதட்டத்தை அவன் ரசித்தான்..

"எஸ்டேட்டோட ஆன்னுவல் ஸ்டேட்மெண்ட முடிக்கனும்னு சொன்னீங்களேப்பா.. இன்றைக்கு டயர்டா இருக்கு.. நாளைக்கு முடிச்சுரலாம்.." ஆர்த்தியை நோட்டமிட்டபடி சுந்தரத்திடம் சொன்னான்..

"கேட்டாயா ஆர்த்தி.."

திரும்பவும் அவர்கள் கூட்டணி போட்டுச் சிரித்ததில் சரவணனுக்கு எரிச்சலாகி விட்டது..

'இவ எப்படி என்னைக் கலாய்க்கலாம்..?'

ஆர்த்தியை அவன் முறைத்த முறைப்பில் அவள் கப் சிப் பென்று அடங்கிப் போனாள்.. மறுநாள் அவளைச் செமத்தியாக கவனித்து விட வேண்டுமென்ற முடிவுடன் அவன்..

"என்னப்பா..?" என்று கடுப்பாக சுந்தரத்திடம் கேட்டான்.

"ஸ்டேட்மெண்டை. முடிச்சாச்சு..?"

"தனியாவே முடிச்சுட்டிங்களா..?"

"ஊஹீம்.. தண்ணிர் குடிக்க வந்த ஆர்த்தி ஆபிஸ் ரூமில லைட் எரியறதைப் பார்த்துட்டு எட்டிப் பார்த்திருக்கா.. நான் வொர்க் பண்ணிக்கிட்டு இருக்கிறதைப் பார்த்ததும் சூடா டீ போட்டுக் கொண்டு வந்து கொடுத்திட்டு டைப் பண்ண ஆரம்பிச்சுட்டா.. டூ அவர்ஸில வொர்க் கம்ளீட் ஆகிருச்சுன்னா பார்த்துக்கயேன்.. சும்மா சொல்லக் கூடாது.. ஷி இஸ் வெரி ஸ்மார்ட் அண்ட் கிளவர்.."

சுந்தரம் வெகுவாக பாராட்டிவிட்டு படியேற.. வேறு வழியில்லாமல் ஆர்த்தியும் நகர்ந்தாள்.. அறைக்குள் போவதற்கு முன்னால் திரும்பிப் பார்த்தாள்.. மாடிப்படியில் நின்றிருந்த சரவணன் அவளையே விழுங்குவதைப் போலப் பார்த்துக் கொண்டிருந்தான்.. அவளது பார்வையைச் சந்தித்ததும் அதை எதிர்பார்த்திருந்தவனைப் போல அவன் கண்கள் பளபளத்தன.. அகப்பட்டுக் கொண்ட உணர்வுடன் அறைக்குள் புகுந்து கதவைத் தாழிட்டுக் கொண்ட ஆர்த்தியின் மனம் பொங்கித் ததும்பியது.. கட்டிலுக்குப் போகாமல் கதவின் மேல் சாய்ந்து கண்மூடி நின்றாள் அவள்..

"மெத்தை மேல் கண்கள் மூடவும் இல்லை..
உன் மடி சேர்ந்தால் கனவுகள் கொள்ளை.."

தேயிலைச் செடிகளின் மீது முகம் புதைத்து கைகளைவிரித்து அவற்றின் மீது படர்ந்து பாடியவளுக்கு முதல்நாள் இரவு நினைவுக்கு வந்தது.. ஏன் அவளுக்குத் தூக்கம் பிடிக்காமல் போனது..? சரவணனைப் பற்றிய இன்ப நினைவுகள் ஏன் அவளின் தூக்கத்தைத் தின்று இம்சை செய்தன..?

காலையில் எழுந்ததும் தன்னந்தனியாக உலாவ வந்து விட்டாள்.. கெட்டியான பட்டுச்சேலை குளிரைத் தடுத்து அவளைக் காத்தது.. அதன்மேல் அவள் போட்டிருந்த ஸ்வெட்டர் கதகதப்பைக் கூட்டியது.. பனி படர்ந்த மேகம் மலை முகட்டின் மீது அமர்ந்து மறைத்து நகர்ந்ததை வேடிக்கை பார்த்தவளுக்கு இயற்கையின் அழகைப் பிடித்திருந்தது.. காணக் காணத் தெவிட்டாத அழகு..!

மலைப்பாதையோரம் அடர்ந்திருந்த காட்டுப் பூக்களின் அழகு மனதை ரம்யமாக்கியது.. சுதந்திரமான எதுவுமே அழகுதான் என்று நினைத்துக் கொண்டாள் ஆர்த்தி.. அவளுக்குக் கிடைக்காத சுதந்திரம்..! அவள் அனுபவிக்கத் துடித்த சுதந்திரம்..! இப்போது புதிதாக கிடைத்துள்ள சுதந்திரம்..!

அதை அள்ளி அனுபவிக்க அவள் மனம் துள்ளியது.

“பூக்களைப் பிரித்துப் புத்தகம் படிப்பேன்..
புல்வெளி கண்டால் முயல்போல் குதிப்பேன்..
நான்மட்டும் இரவில் தனிமையில் நடப்பேன்..
நடைபாதைக் கடையில் தேனீர் குடிப்பேன்..

வாழ்க்கையின் ஒருபாதி நானிங்கு ரசித்தேன்..
வாழ்க்கையின் மறுபாதி நான் என்று ரசிப்பேன்..?
காற்றில் வரும் மேகம் போலே
நான் எங்கும் மிதப்பேன்..
மார்கழிப்பூவே..! மார்கழிப் பூவே..!
உன்மடிமேலே ஓரிடம் வேண்டும்.."

அவள் பாடுவதைக் கேட்டபடி தேயிலையைக் கிள்ளிக் கொண்டிருந்த பெண்கள் சிநேகிதமாக சிரித்தார்கள்.. தினமும் அவர்களைப் பார்க்கும் தோழமையுடன் கையாட்டினாள் ஆர்த்தி.. புதிதாகப் பிறந்ததைப் போல் அவளுக்கு உற்சாகமாக இருந்தது.. சுத்தமான மலைக்காற்று அவள் முகத்தில் மோதியதில் இன்பமாக உணர்ந்தாள்.. இதுபோன்ற வாழ்வை வாழக்கூடும் என்று அவள் நினைத்தும் பார்த்ததில்லை.. நினையாத கனவு ஒன்று கை கூடியிருந்ததில் அவள் திக்கு முக்காடிப் போயிருந்தாள்..

"காவேரிக்கரையில் நடந்ததுமில்லை..
கடற்கரை மணலில் கால் வைத்ததில்லை..
சுதந்திர வானில் பறந்ததுமில்லை..
சுடச்சுட மழையில் நனைந்ததுமில்லை..
சாலையில் நானாகப் போனதுமில்லை..
சமயத்தில் நானாக ஆனதுமில்லை..
ஏழைமகள் காணும் இன்பம்
நான் காணவில்லை.."

உணர்ந்து பாடிக் கொண்டிருந்தவளைப் பார்த்தபடி ஜீப்பை விட்டு இறங்கி நடந்து வந்தான் அவன்.. இரை

தேடும் கழுகின் பார்வையைப் போல அவன் பார்வை இருந்தது.. உற்சாகமாக தங்களுக்குள் பேசிச் சிரித்துப் பாடியபடி தேயிலைத் துளிர்களைக் கிள்ளிக் கொண்டிருந்த பெண்கள் அனைவரும் அவனைக் கண்டதும் ஒன்று பட்டவர்களாய் அமைதியாகிப் போனார்கள்.. வயதுப் பெண்கள் தங்களின் தலை மீதிருந்த கோணிப்பை முக்காட்டுக்குள் முழுவதுமாக மறைந்து கொள்ள அவர்களை அடை காப்பதைப் போல அணி வகுத்து வேலி போட்டார்கள் முதிய பெண்கள்..

"ஸ்ஸ்ஸ்..."

தன் போக்கில் பாடிக் கொண்டிருந்த ஆர்த்தியின் கவனத்தைக் கவர அவர்கள் செய்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.. அவன் ஆர்த்தியை அணுகி விட்டான்..

"மார்கழிப் பூவே..!"

பாடியபடி நிமிர்ந்தவளின் எதிரே வந்து நின்றவனின் பார்வை அவளை மேய்ந்தது.. அவளது பாடல் நின்று விட்டது.. உடல் முழுவதும் ஊர்ந்த அவனது பார்வை கம்பளிப் புழுக்கள் மொய்ப் பதைப் போன்ற அறுவெறுப்பான சங்கடத்தை அவளுக்குத் தந்தது..

'யார் இவன்..?'

முகம் சுளித்த அவள் பார்வையில் சட்டென்று முகம் மாறி கண்ணியவான் போல முகத்தை வைத்துக் கொண்ட அவன்..

"மார்கழிப் பூவே, மார்கழிப் பூவைப் பற்றி பாடுகிறதே.." என்றான்..

'இதுக்கு நான் அடடேன்னு சொல்லி மூணு புள்ளிகளை வைச்சு ஆச்சரியக்குறி போடணுமாக்கும்..?' வெறுப்புடன் விலகி நடக்கப் போனாள் ஆர்த்தி..

"ஹாய்.. ஐயாம் மனோகரன்.. மனோகர்ன்னு கூப்பிடுவாங்க.. நீங்களும் அப்படியே கூப்பிடலாம்.." அவன் கைநீட்டினான்..

அந்த அசாத்திய துணிவில் ஆர்த்திக்கு வியப்பு வரவில்லை.. வெறுப்புத்தான் வந்தது.. முன்பின் தெரியாத பெண்ணிடம் இதுபோலப் பேசினால் அவளது கவனத்தை கவர முடியுமென்று அவன் அறிந்து வைத்திருப்பதை அவள் உணர்ந்தாள்.. இது போன்ற அணுகு முறைகளுக்கு அவன் பழக்கப்பட்டவன் என்பதை அவனது வேட்டையாடும் விழிகள் கூறின..

'முயல் பிடிக்கிற நாயின் முகரையைப் பார்த்துக் கண்டு பிடிக்க முடியாதா..?'

நீட்டிய அவனது கையை உதாசீனப் படுத்தி விட்டு ஆர்த்தி நகர முற்பட்டதில் தேயிலை பறித்துக் கொண்டிருந்த பெண்களின் விழிகளில் மெச்சுதல் வந்தது.. தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டார்கள் அவர்கள்.. அதைக் கவனித்தும் கவனிக்காதவனைப் போல நீட்டிய கையை மடக்கிக் கொண்டவனின் முகத்தில் இறுக்கம் வந்து மறைந்தது.

"உங்க அழகான பெயரைச் சொல்லவில்லையே.."

அழகான ஆங்கிலத்தில் வினவினான் அவன்.. இது வேறு விதமான அணுகுமுறை என்று நினைத்துக்

கொண்டாள் ஆர்த்தி.. ஆங்கிலம் பேசும் பொறுக்கிகளை பெண்களுக்கு பிடிக்குமென்று நினைத்துக் கொண்டிருக்கிறான் என்பது தொடர்ந்து அவன் பேசிய சரமாரியான ஆங்கிலத்திலிருந்து விளங்கியது..

'போடா.. டேய்..!'

தனித்து அவனைப் புலம்ப விட்டு நடக்க ஆரம்பித்தாள் ஆர்த்தி.. கூடவே அவன் நடந்து வருவான் என்று அவள் எதிர்பார்க்காததினால்.

"குன்னூரை உங்களுக்குப் பிடிச்சிருக்கா..?" என்று காதோரமாக அவன் குரல் ஒலித்ததில் திடுக்கிட்டுப் போனாள்..

'இவனும் என்கூட வர்றானா..?'

ஆர்த்தி நின்று விட்டாள்.. தேயிலை பறிக்கும் பெண்களைத் திரும்பிப் பார்த்தாள்.. அவர்களின் விழிகளில் தெரிந்த எச்சரிக்கைக் குறிப்பில் அவனை முறைத்தாள்.. அவன் பேச்சுக்குப் பதில் பேச்சைப் பேச அவளுக்கு விருப்பமில்லை.. அது அவனைத் திட்டும் திட்டாக இருந்தாலும் அவள் வாயிலிருந்து வார்த்தைகள் வந்து விட்டால் அவனுடன் அவளைப் பேச வைக்க முயற்சியில் அவன் வெற்றி பெற்றவனாகி விடுவான்.. அது கூடாது என்பதினால் மேற்கொண்டு என்ன செய்வது என்று யோசித்தாள் ஆர்த்தி..

வீட்டுக்குத் திரும்பிப் போகலாம் என்றால் அவன் கூட நடந்து தொலைக்கிறான்.. அங்கேயே நின்றாலும் பே

முனைவான்.. பேசாமல் தேயிலை பறிக்கும் பெண்களுடன் சங்கமித்து விடலாம் என்று தேயிலைப் பாத்திகளுக்குள் நடக்கப் போனாள் ஆர்த்தி..

"நான் தூங்கிக்கிட்டு இருந்தா என்னை எழுப்பாம தனியா வாக் வந்துருவியா..?"

சரவணனின் குரலில் ஆனந்தமாக திரும்பிப் பார்த்தாள்.. மனோகரனையே முறைத்தபடி ஆர்த்தியின் பக்கமாக வந்து கொண்டிருந்தான் சரவணன்..

'இனி பயமில்லை..'

ஆர்த்தியின் முகத்தில் விரவிய நிம்மதியில் சரவணனின் புருவங்கள் சுருங்கின.. ஆர்த்தியை மனோகரன் தொந்தரவு செய்திருப்பதை உணர்ந்து கொண்டான் அவன்..

"தனியா வராதேன்னு சொல்லியிருக்கேனா இல்லையா..?"

கடுமையான முகத்துடன் அவன் கேட்ட கேள்வியையே கோபமாக திருப்பிக் கேட்கவும் ஆர்த்தி பயந்து போனாள்..

"தெரிந்த ஊர்தானேன்னு.." என்று மென்று விழுங்கினாள்..

"தெரிந்த ஊரா..? இங்கேன்னு இல்லை... எல்லா ஊர்களிலேயும் நல்லவர்களும் இருப்பாங்க.. பொல்லாதவங்களும் இருப்பாங்க.. அதைத் தெரிந்து நடந்துக்க.."

"ம்ம்ம்..."

"வா.. என்கூட.."

"ம்ம்ம்.."

ஆர்த்தியின் கையை இறுக்கிப் பிடித்தபடி சரவணன் நடக்க.. அச்சம் குறைந்தவளாக கூட நடக்கலானாள் அவள்.. அதற்கு வழியில்லாமல் வழி மறித்து நின்ற மனோகரன்..

"என்ன சரவணா..! பெண்ணிடம் போய் உன் வீரத்தைக் காட்டற.. உன் வீட்டுக்கு வந்திருக்கிற விருந்தாளின்னா உனக்கு அடங்கி இருக்கணும்னு சட்டம் ஏதும் இருக்கா..?" என்று புருவங்களை உயர்த்தி இறக்கினான்..

"என் வீட்டுக்கு வந்திருக்கிற விருந்தாளியா..? யாரைச் சொல்ற..?" அவனைவிட அதிகமாக புருவங்களை உயர்த்தி இறக்கி அமர்த்தலாக வினவினான் சரவணன்..

"வேற யாரு.. நீ கைபிடியாய் பிடித்து இழுத்துக்கிட்டுப் போகிறயே.. இவங்களைத்தான் சொல்றேன்.."

படுதைரியமாகச் சொன்ன மனோகரன் அதோடு நிறுத்தியிருக் கலாம்.. திமிரெடுத்தவனாக மேலும் வாய் விட்டான்..

"பாருடா.. வீட்டுக்கு வந்திருக்கிற விருந் தாளின்னா கையைப் பிடித்து இழுத்துக்கிட்டுப் போகலாம் போல.. என் வீட்டுக்கெல்லாம் இப்படி விருந்தாளி வர மாட்டேங்குதே..

வர்ற விருந்தாளி கள்லாம் ஒன்று வத்தலும் தொத்தலுமா வருதுங்க.. இல்லேன்னா கிழடு கட்டைகளா வந்து சேருதுங்க.. ம்ஹீம்.. எதுக்கும் யோகம் இருக்கனும் போல.. நீ மச்சக்காரன் சரவணா..”

விழிகளில் கேலியை நிரப்பி ஆர்த்தியின் கையைப் பிடித்திருந்த சரவணனின் கையை ஜாடையாக பார்த்தபடி மனோகரன் பேசிய விதத்தில் உடல் கூசிப் போனாள் ஆர்த்தி..

‘என்னவெல்லாம் பேசறான்..’

கையை அவள் உறுவ யத்தனிக்க சரவணனின் பிடி இறுகி விடுவேனா என்று சவால் விட்டது.

“நான் மச்சக்காரன் மட்டுமில்ல மனோகரா.. கராத்தேயிலே பிளாக் பெல்ட் வாங்கின யுத்தக்காரனும்தான்.. இந்த ஊரிலேயே நான் விலா எழும்பை முறிச்சவனுக நிறைய பேரு இருக்கிறானுகளே.. நீயும் அதில ஒருத்தன்தானே.. வாங்கின அடி மறந்து போச்சா..?”

சரவணன் கேட்ட கேள்வியில் மனோகரனின் முகம் கருத்து விட்டது.. இப்படிக் கேட்டு விட்டானே என்றுகூட அவன் கடுப்பாகவில்லை.. ஒரு அழகான பெண்ணின் முன்னால் கேட்டு விட்டானே என்றுதான் காண்டாகிப் போனான்.

‘என்னது..??! இவன் சரவணன்கிட்ட அடி வாங்கினவனா..?’

ஆர்த்தி வேறு விழி விரிய மனோகரனை நோக்கி சோதித்து வைத்தாள்.. ஒரு இளம் வயதுப் பெண் அவனது

வீரதிர பராக்கிரமங்களைக் கேட்டு விழி விரிய நோக்கினால் அவன் மகிழ்ந்து போகலாம்.. வேறு ஒருவனிடம் அடி வாங்கினான் என்பதனைக் கேட்டு விழி விரித்தால் அவன் நொந்து நூடுல்ஸாக ஆகிவிட மாட்டானா..?

அதுவரை மறந்து போயிருந்த செல்போனை எடுத்துக் காதுக்குக் கொடுத்த மனோகரன்..

"ஹலோ.. ஹலோ.. இங்கே டவர் கிடைக்கலை.. கொஞ்சம் பொறுங்க.. தள்ளி வந்து பேசறேன்.." என்று வாய்க்கு வந்ததை உளறியபடி வேகமாக ஜீப்பைப் பார்த்துப் போய் விட்டான்..

"ஒருவழியாத் தொலைந்தான்.."

வெறுப்புடன் சொன்ன ஆர்த்தி பதில் வராமல் போனதில் சரவணனை ஏறிட்டுப் பார்த்தாள்.. அவன் புருவங்கள் முடிச்சிட யோசனையுடன் மனோகரன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான்..

'கோபமாய் இருக்கிறானோ..'

அவனுடன் பேசத் தயங்கினாள் ஆர்த்தி.. இன்னமும் அவனது கைபிடியில்தான் அவளது கை இருந்தது.. மனோகரனின் பார்வையில் உறுவிக் கொள்ள முனைந்தவள் இப்போது அதைப் பற்றிய நினைவே இல்லாதாவளைப் போலப் பேசாமல் இருந்தாள்.

சரவணன் நடக்க ஆரம்பித்தான்.. கூட நடந்த ஆர்த்தி அவன் முகத்தைப் பார்ப்பதும்.. அந்த இறுக்கத்தில்

பயந்துபோய் தேயிலைப் பாத்திகளைப் பார்ப்பதுமாக இருந்தாள்.. திடிரென்று..

"அழகாப் பாடறியே.." என்று சொல்லி வைத்தான் சரவணன்..

"நானா..?" ஆர்த்தி தடுமாறினாள்..

"பின்னே..? நானா..?" அவன் உல்லாசமாக சிரித்தான்..

'அப்பாடி.. கோபம் போயிருச்சு போல..' ஆர்த்திக்கு நிம்மதியாக இருந்தது.. அவனது முக இறுக்கத்தில் அவளுக்கு ஏன் அச்சம் வர வேண்டும் என்று அவளுக்கே புரியவில்லை.. அவன் கோபத்தை விட்டு விட்டதில் ஏன் அவள் நிம்மதியடைகிறாள் என்றும் அவளுக்கு புரிந்து தொலைக்கவில்லை.

"மார்கழிப்பூவே..! அருமையான பாட்டு..!" ரசித்துச் சிலாகித்தான் சரவணன்..

அவள் பாடுவதை அவன் கேட்டானா..? அவளுக்கு வெட்கமாகி விட்டது.

"ச்சும்மா.. ஏதோ வாய்க்கு வந்ததைப் பாடினேன்.." முணுமுணுத்தாள்..

"வாய்க்கு வந்ததைப் பாடியதுக்கே இப்படி மயக்கம் வருதுன்னா.. நீ உணர்ந்து பாடினா எப்படியெல்லாம் ஆவேனோ.."

அவள் சிறக்கம் வருவதைப் போல பாவனை செய்து சிரித்தான்.. கூடச் சேர்ந்து சிரித்த ஆர்த்திக்கு அந்தக் காலைப் பொழுதை பிடித்திருந்தது.. அவனையும்தான்...

அவனுடன் பேசியபடி நடப்பதைவிட சுகமான ஒன்று இந்த உலகத்தில் இருக்கக்கூடுமா என்று யோசித்தாள் ஆர்த்தி.. இப்போதெல்லாம் அவன் அவளை வெகு இயல்பாக வா, போ என்றுதான் அழைக்கிறான். அதைவிட இயல்பாக அவளும் அதை ஏற்றுக் கொண்டாள்..

"கேலி பண்றிங்களா..?"

"உண்மையைச் சொன்னா அதைக் கேலின்னு சொல்லுவியா..? உன்னோட அங்கிள் சொன்னா மட்டும் அது பாராட்டு.. அங்கிளோட மகன் சொன்னா கேலியா..?"

"அங்கிள் பெரியவரு.."

"நான் யாராம்..? குட்டிப் பையனா..?"

"உங்களைப் போய் குட்டிப் பையன்னு.. சொல்லுவாங்களா..?"

"நீ சொன்னாலும் சொல்லுவ.. ஆமாம்.. நேத்து என்ன அப்பாவோட ஆபிஸ் ஆன்னுவல் ஸ்டேட்மெண்டை முடிச்சுக் கொடுத்திருக்க..?"

"அடிச்சுக் கொடுத்திருக்கேன்னு சொன்னா பொருத்தமா யிருக்கும்.. ஏன்னா.. முடிச்சு வைத்திருந்த ஸ்டேட்மெண்டை டைப்படிச்சு மட்டும்தான் கொடுத்தேன்.."

"அது உனக்குத் தெரியுது.. உன் அங்கிளுக்குத் தெரியலையே.. ஆன்னுவல் ஸ்டேட்மெண்டை ரெடி பண்ணிக் கொடுத்தவன் நான்.. என்னைப் புகழ்ந்து ஒரு வார்த்தை வரலை.. உன்னையில்ல ஒஹோன்னு புகழ்ந்து தள்ளராரு.."

ஆர்த்தியின் முகம் சிவந்து விட்டது.. அதை ரசனையுடன் பார்த்த சரவணனின் பார்வையில் அதிகமாக முகம் சிவந்தவள்.. உதட்டைக் கடித்தபடி மௌனமாக நடந்தாள்.. அவளது கையைப் பிடித்திருந்தவனின் விரல்கள் அவளது விரல்களை லேசாக அழுத்திக் கொடுத்ததில் அவளுக்குள் நூதனமான ஓர் மாற்றம் நிகழ்ந்தது.. தாள முடியாத தவிப்பில் ஆழ்ந்தாள்.

"அங்கிள்தான் அப்படின்னா.. உன் ஆண்ட்டி உனக்குத் தொட்டில் கட்டித் தாலாட்டுப் பாடிருவாங்க போல இருக்கே.. அவங்களுக்கு நீதான் செல்லமாமில்ல.. சரண்யா கம்ப்ளெயிண்ட் பண்றா.."

"பொய்.."

"எது பொய்..? என் அம்மா உன்னைக் கொஞ்சறது பொய்யா..?"

"சரண்யா கம்ப்ளெயிண்ட் பண்றாங்கிறது பொய்.. அவ அப்படிச் செய்ய மாட்டா.."

"பாருடா.. நம்பிக்கையெல்லாம் பலமா இருக்கு.. என்னைத் தவிர மத்த அத்தனை பேர் மேலேயும் நம்பிக்கை வைக்கிற போல.."

"உங்க மேலயும்தான் நம்பிக்கை வைச்சிருக்கேன்.."

"இதை நான் நம்பணுமா..?"

"நம்பாமலா உங்க பின்னாலே வந்திருக்கேன்..?"

"என்ன சொன்னே..?"

அவனது கண்கள் ஒளிர்ந்ததில் அப்படி என்னத்தைச் சொல்லி விட்டோம் என்று குழம்பிப் போனாள் ஆர்த்தி.. அவன் முகம் பார்த்தவளின் அறியாமை அவனை வசீகரித்தது.. தேயிலைப் பாத்திகளின் மத்தியில் ஓர் தேவதையைப் போல நின்றிருந்தவளின் அழகு அவனைக் காந்தமென இழுத்தது..

"இப்படித் தனியா வரலாமா..?"

மென்மையாக கேட்டான்.. உரிமையுடன் அவன் கேட்டவிதம் அவளைக் கவர்ந்தது.

"எப்பவும் வாக் போகிற பாதைதானேன்னு வந்திட்டேன்.. இங்கேயும் ஒரு ரோக் இருப்பான்னு கனவா கண்டேன்..?"

"போகுது போ.. அந்த மட்டிலும் அவன் ரோக்குன்னாவது உன் புத்திக்கு உறைச்சதே.."

"என்னை என்ன மரமண்டைன்னு நினைத்துட்டிங்களா..?"

"அதுக்கும் மேலே நினைக்கிறேன்.. என் கோபத்தைக் கிளறாதே.."

'திரும்பவும் ஆரம்பிச்சிட்டானா..?'

ஆர்த்தி முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு வாய்க்குள் முணுமுணுத்தபடி வந்தாள்.. சரவணனுக்கு சிரிப்பு வந்து விட்டது..

"என்ன..? சத்தம் வராம என்னைத் திட்டித் தீர்க்கிறயா..?" என்று கேட்டான்.

"உங்களைத் திட்டிட்டாலும்.."

"இப்பத் திட்டலை..?"

"திட்டலை.."

"பொய்.."

"மெய்.."

"அடேங்கப்பா.. நீ பலே ஆள்தான்.."

"என்னைச் சொல்கிறது இருக்கட்டும்.. யார் அவன்..?"

"எவன்..?"

"அவன்தான்.. அந்த மனோகரன்.."

"பெயரெல்லாம் நினைவில இருக்கு போல.."

கண்கள் இடுங்க சரவணன் சொன்ன சொல்லில் முகம் வாடிப் போனாள் ஆர்த்தி.. இது ஒரு குற்றமா என்றிருந்தது அவளுக்கு..

"அவன்தான் பெயரைச் சொன்னான்.."

"சொன்னா..? நீ கேட்டுக்குவியா..?"

"நான் கேட்கலை.. காதில விழுந்தது.. இப்படிப் பேச்சு வாங்க வேண்டி வரும்ன்னு தெரிந்திருந்தா என் காது ரெண்டிலேயும் பஞ்சை அடைச்சிருப்பேன்.. நேரம்.."

"ஹா.. ஹா.."

'ஒருவழியாச் சிரிச்சுட்டான்..'

அமைதியடைந்தாள் ஆர்த்தி.. அவன் சிரித்தால் மனம் மகிழ்வதையும் கோபம் கொண்டால் சங்கடம் அடைவதையும் யோசித்துப் பார்த்தவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.. அவன் மீதான அவளது உணர்வுகளுக்குப் பெயர் என்ன..?

அவளது விரல்களை வருடிக் கொடுத்த சரவணன் அவற்றை இறுக்கிப் பிடித்து அவள் கையை உயர்த்தி அதில் முத்தம் பதித்தான்.

"என்.. என்.. என்.. என்ன இது..?" திணறி விட்டாள் ஆர்த்தி..

"ஐ லவ் யு.." அவளது விழிகளுக்குள் ஊடுறிவிப் பார்த்தவன் நிதானமாகச் சொன்னான்..

'காதலிக்கிறானா..? என்னையா..?'

ஆர்த்தியின் காலடியில் பூமி நடுங்குவதைப் போல இருந்தது.. பெரும் பிரளயம் ஒன்றை உணர்ந்தவளைப் போல அவள் விதிர்த்து நின்றாள்..

அவன் மீதான அவளது உணர்வுகளுக்குப் பெயர் காதலா..? அவள் வாழ்வில் காதல் என்ற உன்னதமான உணர்விற்கு இடமுண்டா..?

16

அழகான அந்த இளங்காலையில்.. குன்னூரின் மலைப்பிரதேசச் சூழலில்.. குளிர்காற்று உடல் தழுவும் வேளையில்.. காதுகளில் விழுந்த காதல் வார்த்தைகளில் மகிழ்ந்து போகாமல் கலங்கிப் போனாள் ஆர்த்தி..

"என்ன..?"

அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த சரவணனின் முகம் மாறியது.. புருவங்கள் முடிச்சிட்டன.. அவன் மீதான அவளது ரகசியப் பார்வைகளை அறிந்தவன் அவன்.. அந்தப் பார்வை சொல்லிய சேதி பொய்யா..? பார்வை மட்டுமே போதுமென்று அவள் நினைக்கிறாளா..?

"நான் தப்பா ஏதும் சொல்லிட்டேனா..?"

"ப்ளீஸ்.."

அவள் கெஞ்சுதலாகச் சொன்னாள்.. சரவணன் அவள் முகத்தையே ஊன்றிப் பார்த்தான்.. அதில் தெரிந்த கலக்கத்தில் அவன் முகம் இறுகியது.

"நீ வேற யாரையும் காதலிக்கிறயா..?"

நிதானமாக அவன் கேட்டதில் அவள் மனம் அதிர்ந்தது.. அவன் முகத்தைப் பார்க்க முடியாமல் முகம்

திருப்பிக் கொண்டவளின் மனம் பதறியது.. இந்தக் கேள்விக்கு அவள் என்ன பதிலைச் சொல்லுவாள்..?

"அவனைத் தேடித்தான் வீட்டை விட்டு ஓடி வந்தியா..?"

சரவணன் வேண்டுமென்றே கேட்டதில் அவள் மனம் வலித்தது.

'எப்படிக் கேட்கிறான்..?' கலங்கிய கண்களை அவனிடம் காட்டாமல் மறைத்துக் கொண்டாள்.

"அவன் இருக்கிற இடத்துக்கு உன் வீட்டார் தேடி வந்திருவாங்கன்னுதான் என்கூட வர ஒப்புக்கிட்டயா..?"

துருவித்துருவி வந்த கேள்விகளில் துவண்டு போனாள் ஆர்த்தி.. குறிபார்த்து எய்யப்படும் அம்புகள் இதயத்தைத் துளைத்ததில் ரணவலி உண்டானது.. அதைத் தாங்க முடியாமல் துடித்துப் போனாள்.

"ஐ ஆம் ஸாரி.."

'இது எதுக்கு..?'

"உன் மனசு தெரியாம காதலைச் சொல்லிட்டேன்.."

'என் மனசில என்ன இருக்குன்னு இப்ப மட்டும் தெரிஞ்சுக்கிட்டயா..? அது தெரியாம பேசாதே..'

"உன் மனசில வேற ஒருத்தன் இருக்கான் என்கிறது எனக்குத் தெரியாமப் போயிருச்சு.."

'நீ கண்டயா..?'

"கவலைப்படாதே.."

'கவலைப்படாம எப்படிடா இருக்க முடியும்..? நான் பிறந்ததே கவலைப்படன்னு ஆகிப் போயிருச்சே..'

"உன் காதலை நான் சேர்த்து வைக்கிறேன்.."

'இருந்தாத்தானே சேர்த்து வைப்ப..?'

ஆர்த்தியால் தாள முடியவில்லை.. அவள் மடமடவென்று அவனைக் கடந்து நடந்து விட்டாள்.. அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த சரவணனின் பார்வையில் சினமிருந்தது.

குன்னூரின் குளிர்காற்றால் சரவணனின் மனதிலிருந்த வெம்மையைக் குளிர வைக்க முடியவில்லை.. அவன் காதல் சொல்லியும் அதந்கான பதிலைச் சொல்லாமல் நடந்து விட்ட ஆர்த்தியின் செய்கையில் அவன் கொதித்துப் போயிருந்தான்.. அவனுக்கும் அவளுக்குமான பிரத்யேகப் பார்வைகளைத் தேடிப் பிடித்து நினைத்துப் பார்த்தான்.. அவற்றில் பொய்யில்லையே.. இருந்தும் ஏன் அவள் சரவணனைத் தவிர்க்கிறாள்..?

அவனைக் கடந்து போன காரின் ஹாரன் சப்தத்தில் நிமிர்ந்தான்.. சுந்தரம் எட்டிப் பார்த்து கையசைத்தார்..

"நான் எஸ்டேட்டுக்கும் போகிறேன் சரவணா.."

"இதோ.. நானும் ஹோட்டலுக்குக் கிளம்பிடறேன்ப்பா.."

"பை.. ஈவினிங் பார்க்கலாம்.."

"ஓகேப்பா.."

கார் போய் விட்டது.. ஊட்டிக்குக் கிளம்ப வேண்டுமே என்று நடையை எட்டிப் போட்டான்.. வீட்டு வாசலில்

நின்றிருந்த ஆர்த்தி மயிலாவிடம் பேசுவதைப் போல காம்பவுண்டின் கேட்டையே பார்த்துக் கொண்டிருந்தாள்.. அவன் வரவை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறாள் என்று புரிந்து போக.. அவன் அவளையே இமைக்காமல் முறைத்துப் பார்த்தான்.. அவசரமாக பார்வையை விலக்கிக் கொண்டவள்..

"சொல்லு.. சொல்லு.." என்று மயிலாவிடம் பேச்சை வளர்த்தாள்..

"காட்டுக்குள்ளப் போய்ப் பார்க்கனும்மா.. அப்பத்தான் முழுசாத் தெரிஞ்சுக்க முடியும்.. சொல்றதைக் கேட்டு என்னத்தைத் தெரிஞ்சுக்கப் போறிங்க.." என்றாள் மயிலா..

அவள் பேசுவதைக் கவனிக்காமல் சரவணன் போன திசையைக் கவனித்துக் கொண்டிருந்தாள் ஆர்த்தி.. வீட்டின் படிகளில் ஏறியவன் உள்ளே நுழைவதற்கு முன்னால் மின்வெட்டும் நேரத்தில் அவளைத் திரும்பிப் பார்த்தான்.. ஆர்த்திக்கு தூக்கிவாரிப் போட்டது.. அகப்பட்டுக் கொண்ட உணர்வுடன் மயிலாவுடன் பேசுவதைப் போல அவனுக்கு புறமுதுகு காட்டினாள்.

சரவணனின் புருவங்கள் சுருங்கின.. யோசனையுடன் அவளைப் பார்த்து விட்டு வீட்டுக்குள் போய் விட்டான்.. சற்றுப் பொறுத்துத் திரும்பிப பார்த்து அவன் இல்லையென்பதை உறுதிபடுத்திக் கொண்ட ஆர்த்தி அவனது முறைப்பை நினைத்தபடி சோர்வாக வீட்டுக்குள் போனாள்..

"ஹாய் ஆர்த்தி..! எங்கே போயிருந்தீங்க..?"

ஹாலின் சோபாவில் சுருண்டிருந்த சரண்யா கேட்டாள்..

"நீ இப்படியே சோம்பலா வீட்டுக்குள்ள குளிர் காய்ஞ்சா அவ தனியா வாக் போகாம என்ன பண்ணுவா..?" மகனுக்கு சூடாக காபியைக் கொண்டு வந்து கொடுத்தபடி கேட்டாள் கவிதா..

"சேர்ந்து வாக் போகிறது கூடப் பிராப்ளம்தானம்மா.. எதுக்கும் இவங்களை வீட்டுக்குப் பக்கத்திலேயே வாக் போகச் சொல்லுங்க.." என்றான் சரவணன்..

"ஏன் சரண்.. என்ன ஆச்சு..?"

"அந்த ராஸ்கல் மனோகரன் இருக்கானில்ல.."

சரவணன் என்னவோ சாதாரணமாகத்தான் சொன்னான்.. ஆனால் மனோகரனின் பெயரைக் கேட்டதும் கவிதாவும், சரண்யாவும் ஒரே குரலில்..

"என்னது..?" என்று கேட்டு வைத்தார்கள்..

"ஆமாம்மா.. நான் போனப்ப அந்த நாய் ஆர்த்தியிடம் வம்பு பண்ணிக்கிட்டு இருந்தான்.."

"கடவுளே..! ஏம்மா ஆர்த்தி..! வீட்டிலே இத்தனைபேர் இருக்கிறோமே.. அறியாத ஊரில தனியா வாக் போகலாமா..?"

"நல்லாக் கேளுங்க.. நான் கேட்டாத்தான் பதில் வராது.. உங்களுக்காவது பதில் கிடைக்குதான்னு பார்க்கலாம்.."

ஆர்த்தியையே உறுத்துப் பார்த்தபடி சொன்னான் சரவணன்.. லேசாக விழிகளையுயர்த்தி அவனைப் பார்த்த ஆர்த்தியின் பார்வை அவன் பார்வையைச் சந்தித்துத் தாழ்ந்தது.. அவன் என்ன சொல்கிறான் என்பதைப் புரிந்து கொண்டவளாக அவள் உதட்டைக் கடித்தாள்.. அவள் புரிந்து கொள்வாள் என்பதைப் புரிந்து வைத்திருந்த சரவணன் அவளை ஆழ்ந்து பார்த்தான்.. தாழ்ந்திருந்த அவள் விழிகள் உயர்ந்து அவனைப் பார்க்கவில்லையென்பதில் அவனுக்கு கோபம் வந்தது.

'ஆட்டம் காட்டறா..' பல்லைக் கடித்தான்..

"சரண்யா தூங்கிக்கிட்டு இருந்தாங்க அ'ண்ட்டி.." மெல்லிய குரலில் கவிதாவுக்கு பதில் சொன்னாள் ஆர்த்தி..

"பரவாயில்லையே.. உங்க பேச்சை மதிச்சுப் பதில் சொல்லிட்டாங்களே.. எங்கே.. என் பேச்சை மதிக்காததைப் போல உங்க பேச்சையும் மதிக்க மாட்டாங்களோன்னு நினைச்சேன்.."

சரவணனின் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை.. அவனுடைய குத்தல் பேச்சுக்கு கைமேல் பலனாக ஆர்த்தி நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.. ஊடுறுவும் அவன் பார்வையின் வேகத்தைத் தாள மாட்டாமல் மறுபடியும் தலை கவிழ்ந்தாள்.

'இதை ஒன்னைக் கண்டு வைச்சிருக்கா..' சரவணன் ஆர்த்தியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அதை உணர்ந்தவளாக இமைகளை உயர்த்த முடியாமல் அவள் தவித்த தவிப்பில் அவனுக்குள் தாபம் பெருகியது.. அதை அவள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதில் கோபமும் பெருகியது.

"தூங்கினா என்ன..? எழுந்தவுடனே வாக் போயிருக்கலாமில்ல..? இல்லே.. எழுப்பிக் கூப்பிட்டுக்கிட்டுப் போயிருக்கலாமில்ல..?"

"இல்ல சரண்யா.. தூக்கத்திலே இருக்கிறவங்களை டிஸ்டர்ப் பண்ண வேணாமேன்னு.."

"நல்ல விசயம்தான்.. அதுக்காக தனியா வாக் போயி அந்த தடிமாடுகிட்ட மாட்டிக்கலாமா..? அவன் முகரையைத் தூரத்தில பார்த்தாலே குமட்டும்.. நாலு நாள் வாந்தியெடுக்கனும்.. அண்ணன் சொல்கிறதைப் பார்த்தா நீங்க குளோஸ் அப்பில வாட்ச் பண்ணிட்டிங்க போல இருக்கே.. வாமிட் வந்தா பாத்ரூமுக்கு ஓடியே போயிருங்க.."

"சும்மாயிருடி.. ஆர்த்தி.."

"ஆண்ட்டி..?"

"அந்த மனோகரன் நல்லவன் இல்லைம்மா.. நம்ம எஸ்டேட்டுக்குப் பக்கத்து எஸ்டேட்க்காரன்தான்.. ஊருக்குள்ளே வீடிருந்தாலும் இவன் எஸ்டேட்டிலேயேதான் இருப்பான்.."

"அப்பத்தானே இஷ்டத்துக்கு ஆட்டம் போடலாம்.. அந்த ஆட்டத்தை ஊருக்குள்ளே ஆடினா அடிச்சுத் துரத்திர மாட்டாங்களா..?"

"ஸ்ஸ்ஸ்.. சரண்யா..! அடுத்தவங்க வம்பு நமக்கு எதுக்கு..? துஷ்டரைக் கண்டா தூர விலகிப் போயிரணும்.."

"நாம விலகிரலாம்மா.. நம்ம வீட்டுக்கு விருந்தாளியா வந்தவுங்களுக்கு அவன் துஷ்டன்னு எப்படித் தெரியும்..? எடுத்துச் சொன்னாத்தானே தூர விலகுவாங்க..? இந்த லட்சணத்தில இவனோட அம்மா நம்ம வீட்டில சம்பந்தம் வைத்துக்கனும்னு ஒற்றைக்காலில நிற்கிறாங்க.. கொடுமைடா சாமி.."

சரண்யாவின் சலிப்பு எதையோ உணர்த்த ஆர்த்தி கவிதாவை ஏறிட்டுப்பார்த்தாள்.. அவள் தலையை அசைத்தாள்..

"ஆமாம்மா.. நாம கோவிலில பார்த்தோமில்ல.. அந்த அண்ணிதான் மனோகரனைப் பெற்றவங்க.. அவனோட தங்கை மாதவியைத்தான் சரவணனுக்குக் கொடுக்கனும்னு விருப்பப் படறாங்க.. முதலில் பெண் கொடுத்து பெண் எடுக்கனும்னுதான் பேச்சை ஆரம்பிச்சாங்க.. சரவணனோட அப்பா கோபப்பட்டுட்டார்.. என்ன தைரியமிருந்தா மனோகரனுக்கு சரண்யாவைக் கேட்பீங்கன்னு ஆடித் தீர்த்துட்டார்.. போதாக்குறைக்கு சரண்யா ஒருதடவை அந்த மனோகரனை அடிச்சு வைச்சுட்டா.."

கவிதா விவரிக்க.. விவரிக்க.. ஆர்த்தியின் மனதில் ஏதேதோ எண்ணங்களும் பயங்களும் வந்து சூழ்ந்தன..

17

கோவிலில் பார்த்த அந்தப் பெண்மணியின் முகத்தில் தெரிந்த சாகசம் கலந்த கோபத்தை ஆர்த்தி மறக்கவேயில்லை.. அவளுடைய சித்தி சொப்னாவின் முகத்தில் எப்படிப்பட்ட கோவமும், கொடூரமும் வந்து போகுமோ.. அதே கோபமும் கொடூரமும் அந்தப் பெண்மணியிடமும் வந்து போயின.. அவளைப் பார்த்தால் ஆர்த்தியின் சித்தியைப் பார்க்கவே வேண்டியதில்லை என்பதைப் போன்ற குணாதிய ஒற்றுமையில் ஆர்த்தியின் முதுகுத் தண்டு சில்லிட்டது.. இப்போதும் அவளின் நினைவுக்கு வந்து நடுக்கத்தைத் தந்தது.

"மனோகரனை சரண்யா அடிச்சுட்டாங்களா..?"

"ஆமாம்மா.. உன்னைப் போலதான்.. தனியா வாக் போகிறேன்னு தேயிலைத் தோட்டம் பக்கம் போயிருக்கா.. இந்த மனோகரன்தான் அவனோட எஸ்டேட்டில மட்டும் இருக்காம எல்லா இடத்திலயும் ஜீப்பில சுத்திக்கிட்டு இருப்பானே.."

"அப்பத்தானே தேயிலை பறிக்க வர்ற பொண்ணுகள நோட்டம் போடலாம்.. ரோக்..!"

"ம்ப்ச்.. அவனைப் பத்திப் பேசாதே சரண்யா.."

"நானாம்மா பேசினேன்..? அந்த நாய்தான் வம்புக்கு வந்தான்.."

"சரண்யாவோட அப்பா அவனுக்கு சரண்யாவை கல்யாணம் பண்ணிக் கொடுக்க மாட்டேன்னு சொன்னதில கோபப் பட்டிருக்கான்.. ஏன் எனக்கென்ன குறைச்சல்ன்னு சரண்யாவை வழிமறிச்சு கேட்டிருக்கான்.."

"அதுக்கு நீயே குறைச்சல்தான்டான்னு சொன்னேன்.."

சோபாவில் சாய்ந்து கால்களை ஆட்டியபடி சரண்யா சொல்லிய விதத்தை ரசித்தாள் ஆர்த்தி.. அவளுக்கு சிரிப்பு வந்தது.. இதுபோன்ற தைரியமும், தெனாவெட்டும் ஏன் ஆர்த்தியிடம் இல்லை..? கவிதாவைப் போன்ற தாயின் அரவணைப்பும், சுந்தரத்தைப் போன்ற தகப்பனின் பாதுகாப்பும், சரவணனைப் போன்ற அண்ணனின் கோபமான காவலும், அரணும் அவளுக்கு இல்லையென்பதாலா..?

தன்னிரக்கத்தில் ஆர்த்தியின் மனம் கனத்தது.. ஒருவுகையில் இந்த உணர்வு சரண்யாவின் மீதான பொறாமையல்லவா என்று அவளது மனம் இடித்துரைத்ததில் அவசரமாக அந்த உணர்விலிருந்து மீண்டாள்..

"இவ அப்படிச் சொன்னதும் அந்த மனோகரன் கோபமா கிட்டான்.."

"நியாயமா நான்தான் அவன்மேல் கோபப்படனும்மா.. அவனுக்கு என்மேல கோபம் வருகிறது பாருங்களேன்.."

"இவளை நினைச்சாத்தான் எனக்கு கவலையாயிருக்கு ஆர்த்தி.. அவனே பெண் கொடுக்கலைன்னு கொதிச்சுப்

போயி வந்திருக்கான்.. அவன்கிட்ட வாய் கொடுக்காம எதைப் பேசறதா இருந்தாலும் என் பேரண்ட்ஸ்கிட்டயும், அண்ணன்கிட்டயும் பேசுங்கன்னு சொல்லிட்டு இவ வீட்டுக்கு வந்திருக்கனுமா இல்லையா..? அதை விட்டுட்டு நீயே குறைச்சல்ன்னு அவன்கிட்டச் சொல்லி சீண்டி விடனுமா..?"

"சும்மா இருக்கிற பெண்சிங்கத்த சொடக்கு போட்டு அவன் கூப்பிடுவான்.. பதிலுக்கு அந்தச் சொறி நாயை, போ நாயேன்னு நான் விரட்டி விட்டாக் குற்றமா ஆர்த்தி..?"

இதற்கு என்ன நியாயம் பிளப்பாள் ஆர்த்தி..? அவள் பதில் சொல்ல முடியாமல் கவிதாவைப் பார்க்க கவிதா மகளின் தலையில் செல்லமாக ஒரு குட்டு வைத்தாள்..

"முயல்குட்டி போல இருந்துக்கிட்டு இது பெண் சிங்கமாம்.. வாயைப் பாரேன்.. அவனே சொறி நாய்ன்னு தெரியுதில்ல.. விலகி வர வேண்டியதுதானே..? தேவையில்லாம அவன் பேசினா காதில போட்டுக்காம விட்டிற வேண்டியதுதானே..? பதிலுக்கு நீயே குறைன்னு இவசொன்னதும் அவன் கையைப் பிடிச்சிட்டான்.."

"என்னது..??"

திடுக்கிட்டுப் போனாள் ஆர்த்தி.. சரண்யாவின் கையை மனோகரன் பிடித்து இழுத்தானா..? என்ன ஒரு தைரியம்..!

"அவனை சும்மாவா விட்டிங்க ஆண்ட்டி..?"

ஆர்த்தியின் கோபத்தில் பிரியம் கொண்டாள் கவிதா.. அவளின் கன்னம் தொட்டு வருடியவள்..

"சும்மா விடுவோமா ஆர்த்தி..? சரவணன் அவனைப் புரட்டி எடுத்தான்.. அடிச்சு நொறுக்கிட்டான்.. அதுக்கு முதல்ல அவன் கையைப் பிடிச்ச அடுத்த செகண்டிலேயே சரண்யா அவன் கன்னத்தில அறைஞ்சிட்டா.."

"சரியான சோதாப்பயல்..! நான் அறைஞ்ச அறையத் தாங்க முடியாம என் கையைப் பிடிக்கிறதை விட்டுட்டு அவன் கன்னத்தைப் பிடிச்சுக்கிட்டு அப்படியே உட்கார்ந்துட்டான்.. நான் சாவகாசமா வீட்டுக்கு வந்து தகவல் சொல்லி அண்ணன் கோபமா கிளம்பிப் போகிறவரைக்கும் ஓடிப் போகிற நினைப்பில்லாம அங்கேயே உட்கார்ந்திருக்கான்.."

"சரவணன் போன வேகத்தில பின்னிப் பெடலெடுத்திட்டான்.."

"இதில ஒரு பியூட்டி என்ன தெரியுமா ஆர்த்தி..? அவனை அடிச்சதைக் கூட அவனால தாங்கிக்க முடிஞ்சதாம்.. அந்த அடியை தேயிலை பறிக்கிற லேடிஸ் முன்னாலே அடிச்சோம்ல.. அதைத்தான் அவனால தாங்கிக்க முடியலையாம்.. தண்ணியைப் போட்டுட்டு அவனோட எஸ்டேட்டில புலம்பின புலம்பலை அங்கேயிருந்த அத்தனை பேரும் கேட்டுட்டு எங்ககிட்ட வந்து சொல்லிட்டுப் போனாங்க.."

"சரவணனோட அப்பா துப்பாக்கியைத் தூக்கிக்கிட்டேப் போயிட்டார்.. மனோகரனைப் பெத்தவங்க காலிலே விழாத

குறையாய் கெஞ்சினதில 'இந்த ஒரு தடவை விட்டுட்டுப் போறேன்.. இன்னொரு தடவை இதுபோல நடந்ததாக் கேள்விப்பட்டேன்னா சுட்டுப் பொசுக்கிருவேன்..'னு சொல்லி வைத்துட்டு வந்தார்.."

"அதுக்கப்புறம் என்னைக் கண்டா அவன்தான் விலகி ஓடுவான்.. எப்புடி..?..! துஷ்டனையே தூர விலகி ஓட வைச்சிட்டேனில்ல.."

சரண்யா கண்சிமிட்டினாள்.. ஆர்த்தி சிரித்தாள்..

"இவ இருக்காளே.." கவிதா மகளைக் கடிந்து கொள்வதைப் போல சிலாகித்தாள்..

"இதுக்கு மேலேயும் அவங்க வீட்டில அண்ணனுக்குப் பெண் கொடுக்கனும்னு ஆசைப்படறாங்க பாருங்க.. இந்த அசாத்திய மனோதைரியம் யாருக்கு வரும்..? சொல்லுங்க.."

சரண்யாவின் கேள்வியில் ஆர்த்தியின் முகம் வாடியது.. சோர்வுடன் பெருமூச்சு விட்டாள்.. வெறுமையாக பார்த்தவளின் பார்வை.. அவளையே பார்த்துக் கொண்டிருந்த சரவணனின் பார்வையைச் சந்தித்ததும் திடுக்கிட்டுப் பின் வாங்கியது.

'இவன் என்னையே பார்த்துக்கிட்டு இருக்கானே..'

அவள் முகத்தின் உணர்வுகளை அவன் அவதானித்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வில் அவள் இயல்பாக முகத்தை வைத்துக் கொள்ளப் பிரயத்தனப்பட்டாள்..

நொடிப்பொழுதில் உணர்வுகள் துடைக்கப்பட்ட நிச்சலனமான முகத்துடன் அவள் அவனை ஏறிட்டதில் பல்லைக் கடித்தபடி அவளை உறுத்துப் பார்த்தான் சரவணன்..

"விடு சரண்யா.. பெண்ணைப் பெத்தவங்க ஆசைப்படறாங்க.."

"பெண்ணா அது..? அது மனோகரனுக்கும் மேலேயில்ல இருக்குது.. அதுக்கு என் அண்ணன் வேண்டுமா..?"

பேச்சு போகும் திசையைத் தாங்கிக் கொள்ள முடியாதவளாக ஆர்த்தி எழுந்து விட்டாள்.. மகளைக் கடிந்து கொண்டிருந்த கவிதா..

"என்னம்மா..?" என்று வினவினாள்.

"லேசாய் தலையை வலிக்கிறதைப் போல இருக்கு ஆண்ட்டி.." சோர்வுடன் சொன்னாள் ஆர்த்தி..

"மயிலா.. ஆர்த்திக்கு காபி கொண்டுவா... இப்படி உட்காரும்மா.. காபி குடிச்சுட்டு ரூமுக்குப் போய் ரெஸ்ட் எடு.."

பரிவுடன் கைபிடித்து அருகில் அமர வைத்துக் கொண்ட கவிதாவின் பிரியத்தைத் தட்ட முடியாமல் அவள் பக்கத்தில் உட்கார்ந்தாள் ஆர்த்தி... அவளையே சரவணன் முறைத்துக் கொண்டிருக்கிறான் என்ற உள்ளுணர்வில் அவளால் இயல்பாக உட்கார

முடியவில்லை.. அதைத் தலைவலியின் தாக்கம் என்று எடுத்துக் கொண்ட கவிதா..

"பாவம்.. ரொம்பவும் தலைவலி போல.." என்று கவலைப் பட்டாள்..

மயிலா கொண்டு வந்த காபிக் கப்பை வாங்கிக் கொண்ட ஆர்த்தி சர்வ ஜாக்கிரதையாக, சரவணனின் முகத்தைப் பார்க்காமல் தலையைக் குனிந்தபடி காபியைக் குடிக்க ஆரம்பித்தாள்..

"இனிமே தனியா வால்க் போகாதேம்மா.. சரண்யா இல்லைன்னா சரவணன்கூடப் போ.. அந்த மனோகரன் கண்ணில பட்டுட்ட.. கவலையா இருக்கு.. எங்க வீட்டுப் பெண்ங்கிறதினால இனிமே அவன் வாலாட்ட மாட்டான்தான்.. பயப்படுவான்தான்.. ஆனாலும் என் மனசுக்கு பதட்டமா இருக்கு.."

கவிதாவின் கவலையில் கரைந்து போனாள் ஆர்த்தி.. அவளைப் பற்றிக் கவலைபடவும் ஒருதாய் இருக்கிறாளா..?

"இல்லை ஆண்ட்டி.. இனிமே தனியா வால்க் போக மாட்டேன்.."

வாக்குறுதி போல ஆர்த்தி சொன்னாள்.. அன்றைய சமையலுக்கான மெனுவை அஞ்சலையிடம் சொல்வதற்காக கவிதா போய்விட.. சரண்யா டிவியில் ஆழ்ந்து விட்டாள்.. துளைக்கும் சரவணனின் பார்வையிலிருந்து தப்பிப்பதற்காக ஆர்த்தி மாடிப்படியேறினாள்.. தொடர்ந்த அழுத்தமான காலடியோசையில் அவளது இதயம் நடுங்கியது.

'சரவணன்தான் வர்றான்..'

ஆர்த்தியின் கண்களில் எவரோ இரும்புக் குண்டைக் கட்டி விட்டதைப் போல அவை கனத்தன.. எட்டு எடுத்து வைக்க முடியாமல் தடுமாறினாள் ஆர்த்தி.. ஒருவழியாக அவள் மாடியேறி அவள் அறையை அடைந்த போது குறுக்கே வந்து வழி மறித்தது சரவணனின் கரம்..!

"தப்பிச்சுட்டதா நினைச்சுக்காதே.."

'யார் தப்பிக்க நினைக்கிறது..? உன்னிடமிருந்து நானா..?'

"எனக்குப் பதில் கிடைக்காத வரைக்கும் நான் விட மாட்டேன்.."

'விடாதே.. இறுக்கிப் பிடிச்சுக்க.. எனக்கும் அதுதான் வேணும்.. ஆனா.. நானாய் உன்னை வந்து பிடிச்சுக்கணும்னு மட்டும் நினைக்காதே.. எதிர்பார்க்காதே.. என்னால் அது முடியாது..'

சரவணன் போய் விட்டான்.. அறைக் கதவைத் திறந்து கட்டிலில் சரிந்த ஆர்த்தியின் உடல் அழுகையில் குழுங்கியது.. ஏன் என்னைப் படைத்தாய் கடவுளே என்று அந்தக் கடவுளிடம் கேட்டு மனதுக்குள் அவள் குமுறினாள்.. இப்படி ஒரு பிறப்பை ஏன் கொடுத்தாயென்று கதறினாள்.

18

படைக்கும் போதே தலையில் விதியை எழுதி விடும் பிரம்மன் அவள் தலையின் விதியை ஏன் இப்படி எழுதினான்..?

கைக்கு எட்டும் தூரத்தில் தேவாமிர்தம் இருக்கிறது.. தன்னைக் குடிக்க வரும்படி அழைக்கவும் செய்கிறது.. அதை அணுக முடியாத இரும்புவேலியை ஏன் விதி அவளுக்குப் போட்டது..?

வாழ்க்கை என்பது வாழ்வதற்காகத்தானே..? அந்த வாழ்வை அவளது விருப்பப்படி வாழ முடியாமல் தளைகள் ஏன் அவளை பிணைத்து வைத்துள்ளன..?

காலம் என்பது கருணை செய்வதுதானே..? அந்தக் காலம் ஏன் அவளுக்கு கருணை காட்ட மறுக்கிறது..? வலியவர் வாழ எளியவர் தாழ என்று என்றும் இருப்பதுதான் தர்மமா..? அந்த நியதியை உடைக்கும் காலம் ஏன் அமைதி காக்கிறது..?

அழுது அழுது ஓய்ந்தபின் ஆர்த்தியின் மனம் சோர்வுடன் கூடிய அமைதியை அடைந்தது.. கிட்டாதாயின் வெட்டென மறக்க வேண்டும்தான்.. இங்கே கிட்டுவதை அவள் வெட்டென மறக்க வேண்டுமே..

அதற்கு என்ன வழியென்பதை யோசித்தாள் ஆர்த்தி.. தெளிவடைந்திருந்த மனம் அதற்கான வழியைச் சொல்லியது.. காலைடிபன் முடிந்ததும் சரவணன் ஊட்டிக்குக் கிளம்பி விட்டான்.. பொழுது போகாமல் போரடிப்பதாக சரண்யா புகார் கூறியதால் அவளும், ஆர்த்தியும் சினிமாவுக்குச் சென்று வர கவிதா சம்மதித்தாள்.. ஆர்த்திக்கும் அந்த மாறுதல் தேவைப் பட்டதால் அவள் மறுக்காமல் சரண்யாவுடன் சினிமா பார்க்கப் போனாள்..

"சினிமான்னா எனக்கு நியூஸ் போடறதில இருந்து பார்த்துரனும்.. பாதியிலே பார்க்கிறது படமா..?" என்ற சரண்யா சொன்னதைப் போலவே ஆரம்பத்திலிருந்து கடைசிவரை படத்தை ரசித்துப் பார்த்தாள்..

டைட்டில் கார்டில் போடப்படும் பெயர்களை விமர்சிப்பதில் ஆரம்பித்து.. படத்தின் காட்சிகளில் ஒன்றி.. அது அப்படி, இது இப்படி என்று பேசியபடி சரண்யா படம் பார்த்ததில் ஈர்க்கப் பட்டாள் ஆர்த்தி.. அந்தப் படத்தை விட.. சரண்யா படம் பார்த்த விதத்தை அவளுக்குப் பிடித்திருந்தது..

சிலர் அப்படித்தான்.. அவர்கள் இருக்கும் இடத்தை உயிர்ப்பாக வைத்திருப்பார்கள்.. அப்படிப்பட்டவர்களின் தோழமை என்பது வரம்.. அந்த வரம் வாய்க்கப் பெற்றதில் சிலிர்த்துப் போனாள் ஆர்த்தி.

'இது நிலைத்தால் நன்றாக இருக்கும்..' அவள் மனம் ஏக்கம் கொண்டது.. நிலைக்குமா என்ற கேள்வியுடன் படத்தில் ஆழ்ந்து போனாள் ஆர்த்தி..

திரும்பி வரும் போது கொரியர் பண்ண வேண்டுமென்று அவள் சொன்னதால் கொரியர் அலுவலகத்தின் முன்னால் கார் நின்றது.. ஆர்த்தியுடன் சரண்யாவும் இறங்கினாள்..

"நீங்க காரிலேயே இருங்க சரண்யா.. உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்..?" ஆர்த்தி தடுக்கப் பார்த்தாள்..

"உங்களைத் தனியா அனுப்பினாத்தான் சிரமம்.. ஆள் பார்க்க அழகா இருக்கீங்க.. நீங்க பாட்டுக்கு உள்ளே போய்.. அங்கே தேவையில்லாம பிரச்னை வந்ததுன்னா உங்க அண்ணனுக்கு யார் பதில் சொல்றது..?"

'என் அண்ணனா..?'

யார் அவன் என்று கேட்க வந்த வார்த்தைகளை தொண்டைக் குழியிலேயே நிறுத்தி வைத்துக் கொண்டாள் ஆர்த்தி.. சரவணனின் நண்பனின் தங்கை என்ற அடையாளத்துடன்தான் அவள் அங்கு இருக்கிறாள் என்பது அப்போதுதான் அவளுக்கு நினைவிற்கே வந்தது..

'அண்ணனின் பெயர் என்ன..?'

சட்டென அவளுக்கு நினைவு வரவில்லை.. அதையும் சரண்யாவே சொன்னாள்..

"குமார் என் அண்ணனைக் கூட விட்டு விடுவார்.. என்னைத்தான் பிடிச்சுக்குவார்.."

சரண்யாவின் கண்கள் கனவில் மிதந்தன.. குமார் வந்து அவளைப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்ற அவளது ஆவலை அவள் விழிகள் பிரதிபலித்தன..

"என்ன சரண்யா.. உன்னை நம்பித்தானே என் தங்கையை அனுப்பி வைச்சேன்.. நீ இப்படி பொறுப்பில்லாம இருக்கலா மான்னு கேட்பார். அப்படி ஒரு கேள்வியை உங்க அண்ணன் என்னைப் பார்த்து கேட்க விட்டு விடுவதா..?"

குமாரை விட்டு விடப் போவதில்லை என்ற உறுதியுடன் சரண்யா பேசியதில் வேறு வழியில்லாமல் அவளையும் கூட அழைத்துக் கொண்டு கொரியர் அலுவலகத்திற்குள் போனாள் ஆர்த்தி..

"டில்லிக்கு அனுப்பறிங்களா..?"

"ம்ம்ம்.."

அங்கே யார் இருக்கிறார்கள்.. எதற்காக இந்தத் தபாலை அனுப்புகிறீர்கள் என்று எந்த விதமான கேள்வியையும் சரண்யா கேட்கவில்லை என்பதில் நிம்மதியான ஆர்த்தி தபாலை அனுப்பியதற்கான ரசீதை வாங்கிக் கொண்டாள்.. அவர்கள் வீட்டுக்குத் திரும்பினார்கள்.. மதிய உணவுக்குப் பின்னர் வீடே தூக்கத்தில் ஆழ்ந்து விட்டது.. மாலையில் முகம் கழுவி தலைவாரிய ஆர்த்தி.. லேசான ஒப்பனைக்குப் பின்னால் அறையை விட்டு வெளியே வந்தாள்.. தூங்கி எழுந்ததில் அவளுக்குப் புத்துணர்வாக இருந்தது.. லேசாக பாடக்கூடத் தோன்றியது..

"காதல் எந்தன் மீதில் என்றால்
காதில் இனிக்கிறது - தாலி
கட்டிக் கொள்ளத் தட்டிக் கழித்தால்
கவலைப் படுகிறது..
மனது கவலைப்படுகிறது.."

"நான் ஒன்னும் தட்டிக் கழிக்கிற ஆளில்லையே.."

அவள் பாட்டுக்கு இசைப்பாட்டு வராமல் இசைக்கேள்வி வந்ததில் தூக்கிவாரிப் போட்டவளாக என்னங்கடா இது என்று திரும்பிப் பார்த்தாள் ஆர்த்தி.. தன் அறை வாசலில் நின்று கொண்டிருந்த சரவணின் பார்வை அவளது பார்வையைச் சந்தித்ததும் ஆழ்ந்து பார்த்து ஒரு ஆக்டோபஸ் போல அவளை வளைத்து இழுத்தது..

'இவன் வந்துட்டானா..?'

ஆர்த்தியின் மனதில் நடுக்கம் கலந்த பரவசம் வந்தது.. துன்பம் கலந்த இன்பம் தோன்றியது.. சுகமான அந்த இம்சையை அவளது மனம் விரும்பியதுதான் ஆச்சர்யம்..

"என்ன..? பேச்சைக் காணோம்.."

அவன் புருவங்கள் உயர்ந்து இறங்கியதில் கிளர்ந்தாள் ஆர்த்தி.. அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனின் கம்பீரமான தோற்றம் அவளை ஈர்த்தது.. அனைத்தையும் மறந்து அவன் மார்பில் சாய்ந்து அவனைத் தழுவிக் கொள்ள வேண்டும் போல இருந்ததில் திடுக்கிட்டுப் போனாள் ஆர்த்தி.

'என்ன இது..?'

தன் மனதை அடக்க முயன்றாள்.. அவளது மனப் போராட்டத்தை அறிந்தவனைப் போல குறுஞ்சிரிப்புடன் அவள் பக்கத்தில் வந்தான் சரவணன்..

"நீ இன்னைக்கு 'ஊம்'ன்னு ஒரு வார்த்தை சொல்லு.. உடனே தாலியைக் கட்டிடறேன்.."

அவன் பேச்சில் நிமிர்ந்து அவன் முகத்தையே பார்த்தாள் ஆர்த்தி.. அவளது கண்கள் கலங்கியதில்..

"போச்சுடா.." என்றான் சரவணன்..

"மனோகரனை மாதிரியான ரோக் பெண் கேட்டதுக்கே என் தங்கை கண் கலங்கலை.. கோபப்பட்டா.. கன்னத்தில அறைஞ்சா.. நீ என்னடான்னா கண்ணில தண்ணி விடற..? என்ன..? அந்த மனோகரனை விட நான் மோசமான ஆளா..?"

கண்கள் இடுங்க அவன் கேட்டதில் துடித்துப் போனாள் ஆர்த்தி.. அந்தத் துடிப்பை அவளது விழிகள் வெளிப்படுத்தியதில் திருப்தியாக அவளைப் பார்த்த சரவணன்..

"டில்லியில யாரிருக்காங்க..?" என்று விசாரித்தான்.

'இவனுக்கு எப்படித் தெரியும்..?' ஆர்த்திக்கு தூக்கிவாரிப் போட்டது.

"சரண்யா சொன்னா.. சொல்லனும்னு சொல்லலை.. கொரியர் ஆபிஸ் பக்கமா ஒரு வேலையா வந்திருந்தேன்.. நீயும் சரண்யாவும் கொரியர் ஆபிசுக்குள்ள போகிறதைப் பார்த்தேன்.. இப்ப வந்ததும் ஹாலிலே சரண்யாவைப் பார்த்தேன்.. மதியத்தில கொரியர் ஆபிசில என்ன

வேலைன்னு கேட்டேன்.. ஆர்த்திக்கு கொரியர் அனுப்ப வேண்டியிருந்ததுன்னு சொன்னா.. எந்த ஊருக்குன்னு கேட்டேன்.. டில்லிக்குன்னு சொன்னா.. இதை மறைக்கனும்ங்கிற இன்டென்சி அவளுக்குக் கிடையாது பாரு.. ஸோ.. உண்மையைச் சொல்லிட்டா.."

சரவணனின் பார்வை உனக்கு அந்த நோக்கம் உண்டென்று குற்றம் சாட்டியது.. குற்ற உணர்வுடன் உதட்டைக் கடித்துக் கொண்டாள் ஆர்த்தி..

"அண்ணனோட பொறுப்பில் இருக்கிறவன்னு சரண்யா நினைக்கிறா.. விவரத்தைச் சொல்லிட்டா.. உனக்குத்தான் அந்த நினைவே இல்லையே.. என் பொறுப்பில இருந்து விடுபட்டு ஓடத்தான துடிக்கிற..?"

'நானா..?'

அடிபட்ட பார்வை பார்த்தாள் ஆர்த்தி.. சரவணனின் இடுங்கிய கண்கள் அதை கண்டு கொண்டாலும் அவன் பேச்சை நிறுத்தவில்லை.

"டில்லியில இருக்கிறது யாரு..?"

"அது பெர்சனல்.."

உதடுகள் துடிக்க எங்கோ பார்த்தபடி சொல்லிய ஆர்த்தியை உறுத்துப் பார்த்தவனின் விழிகளில் சினம் கொப்பளித்தது.. இரண்டே எட்டில் அவளை நெருங்கியவனின் வலது கை அவளது தாடையைப் பிடித்து இறுக்கியது.. வலியில் முகம் சுளித்தாள் ஆர்த்தி.. அதை லட்சியம் செய்யாமல்.

"பெர்சனல்..?" என்று அதட்டினான் சரவணன்..

அவள் பதில் பேசாமல் பிடிவாதமாக நின்றதில் அவளைத் தள்ளி விட்டு அறைக்குள் போய் விட்டான்.. ஆர்த்தியின் விழிகளில் கண்ணீர் பெருகியது..

19

தோட்டத்தின் பெஞ்சில் சூத்துக்காலிட்டு அமர்ந்து முழங்கால்களைக் கைகளால் வளைத்துக்கட்டி அதில் முகவாயைப் பதித்து வெறித்துக் கொண்டிருந்தாள் ஆர்த்தி.. மனதில் விசனம் நிரம்பி யிருந்தது.. யாராலும் இட்டு நிரப்ப முடியாத பள்ளம் அவள் மனதில் விழுந்திருந்தது.. இட்டு நிரப்ப ஒருவன் துடிக்கிறான்.. அதை ஏற்க அவளால் முடியவில்லை.. ஏன் என்பதை அறிந்து வைத்திருந்தவள் மௌனக் கண்ணீரை உகுத்துக் கொண்டிருந்தாள்..

யாரோ அவளருகில் வந்து நிற்பதைப் போல உள்ளுணர்வு சொல்லியதில் நிமிர்ந்து பார்த்தாள்.. துளைக்கும் பார்வையுடன் சரவணன் நின்று கொண்டிருந்தான்.. அவசரமாக எழுந்து கொள்ள முயன்றவளின் தோள்களில் அவன் கைகள் அழுத்தமாக பதிந்தன.. ஆர்த்தி நடுங்கிப் போனாள்.. தோளை அழுத்திய

அவன் கரங்களின் பிடி இரும்புப் பிடியாக இருந்ததில் அவளால் திமிர முடியவில்லை.

"உட்கார் உன்னிடம் பேசனும்.."

அவன் அதட்டினான்.. என்ன பேசப் போகிறான் என்று மனதில் பதட்டம் கொண்டாள் ஆர்த்தி.. எது பேசினாலும் அது அவன் மனதிற்கும், அவள் மனதிற்கும் துன்பத்தைத்தான் விளைவிக்கப் போகிறது என்றாகி விட்டபின்பு அந்தப் பேச்சை பேசா விட்டால் தான் என்ன..?

"என்ன..? பதிலைக் காணோம்.. என்கிட்டப் பேசப் பிடிக்கலையா..?"

ஊசிமுனையாய் குத்திய அவன் கேள்விக்குப் பதிலைச் சொல்ல அவளால் முடியவில்லை.. அவனுடன் பேச அவளுக்குப் பிடித்திருக் கிறது என்பதை எப்படி அவனுக்குப் புரிய வைப்பாள்..? அதைவாய் விட்டுச் சொன்னால் அவன் அதையே ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொண்டு அவன் காதலை வற்புறுத்த மாட்டானா..?

"நீ பேசினாலும் பேசலைன்னாலும் எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை.. நான் பேசறதை நீ கேட்டாப் போதும்.."

அவன் பக்கத்தில் உட்கார்ந்தான்.. முழங்கால்களைத் தொங்க விட்டுத் தள்ளி அமர்ந்தாள் ஆர்த்தி.. சரவணன் முறைத்தான்..

"தொட்டா ஒட்டிக்குமா..? இதுக்கு முன்னாலே நான் உன்னைத் தொட்டுப் பேசினதே இல்லையா..?"

அப்போதைய சூழ்நிலை வேறு.. இப்போதைய சூழ்நிலை வேறு.. அதைச் சொல்ல முடியாமல் மௌனித்தாள் ஆர்த்தி.. அதையும் அவனே சொன்னான்..

"இப்போ நான் 'ஐ லவ் யு' சொல்லிட்டேன்.. அதுதானே உன் பிரச்னை..?"

'ஆமாம்' மனதிற்குள் சொல்லிக் கொண்டாள் ஆர்த்தி..

அவன் காதல் சொல்லாமல் இருந்தபோது அவனுடன் பேசிப் பழக அவளுக்குப் பிடித்திருந்தது.. ஏன்.. அவனே சொன்னதைப் போல ரகசியப் பார்வைகளால் அவனைப் பார்வையிடவும் பிடித்திருந்தது..

இப்போது அவனைக் கண்டாலே பதறுகிறாள்.. அவன் பக்கம் வந்தால் நடுங்குகிறாள்..

"ஏன் ஆர்த்தி..?"

இதமான அவனது வினாவில் உடல் தூக்கிப் போட அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.. அவளது கண்களில் தெரிந்த தவிப்பில் அவனது புருவங்கள் சுருங்கின..

"ஏன்..?" மறுபடியும் கேட்டான்..

என்னவென்று சொல்வாள்..? அவள் சிக்கியிருக்கும் புதைகுழியின் சுழலைப்பற்றி எப்படிச் சொல்வாள்..? அவளால் சொல்ல முடியுமா..?

தன்னிரகத்தில் அழுதுவிட்டாள் ஆர்த்தி..

"என் காதலை ஏத்துக்கிறது இத்தனைக் கொடுமையான விசயமா..?"

"ப்ளீஸ்.. வார்த்தைகளால் என்னைக் கொல்லாதீங்க.."

"கொல்கிறது நீயா.. இல்லை நானா..?"

"உங்களுக்கு அருமையான பெண் கிடைப்பாள்.."

"நீ அருமையான பெண்ணில்லையா..?"

இதழ்கள் துடிக்க இலக்கின்றி வெறித்தவளின் மனதில் என்னதான் இருக்கிறது என்று சரவணனுக்குப் புரியவில்லை.. அவளும் அதைச் சொல்ல மறுத்ததில் அவனுக்குத் தலைவே தனையாக இருந்தது.

"ஆர்த்தி.."

"ம்ம்ம்.."

"என்னைப் பார்.."

அவள் நிமிர்ந்து அவனைப் பார்க்க முயன்றாள்.. ஆழ்ந்து பார்த்த அவனது பார்வையை ஓர் வினாடிக்கு மேல் அவளால் சந்திக்க முடியவில்லை.. பார்வையைத் தழைத்துக் கொண்டாள்..

"என்னைப் பாருன்னு சொன்னேன்.."

"முடியலை.."

"என்னது..?"

"என்னால் உங்களைப் பார்க்க முடியலை.."

"ஏன்..?"

"தெரியலை.."

சரவணன் அவளையே பார்த்தான்.. அவன் பார்வையை உணர்ந்தவளின் முகச் சிகப்பில் மென்மையானான்..

"இதிலிருந்தே உன் மனது உனக்குப் புரியலையா ஆர்த்தி..?"

மிருதுவாக வினவினான்.. சட்டென்று அவன் முகத்தைப் பார்த்து விலகிய ஆர்த்தியின் பார்வையில் இருந்த தாபத்தில் அவள் கையைப் பற்றினான்.. அவள் எழுந்து விட்டாள்..

"ஆர்த்தி.."

சரவணனின் கண்டிப்பான குரல் அவளை தடுத்து நிறுத்தியது.. அவனும் எழுந்தான் அவள் பக்கத்தில் போனான்.. நகர முயன்றவளை நகர விடாமல் கைபிடித்து நிறுத்தியவன் அவள் முகத்தை நிமிர்த்தி விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான்.. அதில் தெரிந்த கலக்கத்தில் அவன் மனம் அசைந்தது.

ஆழ்கடலில் அலைக்கழிக்கப்படும் துரும்பின் துயரத்தை அவளது பார்வை பிரதிபலித்தது..

"உன் மனசில ஏதோ இருக்கு.. என்னன்னு சொல்ல மாட்டியா..?"

கனிவான அவனது கேள்வியில் அவள் கண்ணீருடன் விழிகளை மூடிக் கொண்டாள்..

"ப்ளீஸ்.." என்று விலக முயன்றாள்..

"ஓகே.. சொல்ல வேணாம்.. அமைதியா இரு.."

சரவணன் ஆறுதலாக அவளது கன்னம் தட்டியதில் நெகிழ்ந்து போனாள் ஆர்த்தி.. எப்படியென்று அவள் உணரும் முன்னரே சரவணனின் மார்பில் சாய்ந்து விட்டாள்..

அதற்காகவே காத்திருந்ததைப் போல அவனது கரங்கள் அவளைச் சுற்றி வளைத்து அணைத்துக் கொண்டன.. இறுக்கமான அவனது அணைப்பில் புதைந்திருந்தவளின் மனதிலிருந்த கலக்கம் விலகியோடி விட்டது.

நொடிகள் நிமிடங்களாகி நகர்ந்து கொண்டிருந்தன.. அவளும் விலகவில்லை.. அவனும் அணைப்பைத் தளர்த்தவில்லை.. ஒருவரிடம் ஒருவர் அடைக்கலமாகி விட்டதைப் போல ஒருடல் ஈருயிராக நின்று கொண்டிருந்தவர்களின் மீது இருள் போர்வையாக விழுந்து மறைத்தது.. அவர்களுக்கான தனிமையை தோட்டத்தின் செடி மறைவு ஏற்படுத்திக் கொடுத்தது..

குன்னூரின் குளிர் ஊசி முனைகளாக உடலைக் குத்த ஆரம்பித்த போதுதான் ஸ்வெட்டர் போடாமல் வந்து விட்டதை உணர்ந்தாள் ஆர்த்தி.. அணிந்திருந்த சேலையைப் போர்த்தி குளிரிலிருந்து தப்பித்துக கொண்டிருந்தவள் அதையும் தாண்டிய குளிரின் தாக்கத்தை உணர்ந்தாள்.. அவளது உடலின் நடுக்கத்தில் குளிரை உணர்ந்த சரவணன் அவன் தோளில் கிடந்த சால்வையை விரித்து அவளுக்கும் சேர்த்துப் போர்த்தி விட்டு நெருக்கத்தை அதிகப் படுத்தினான்.. அவன் உடல் சூட்டில் குளிர் காய்ந்த ஆர்த்தி ஒன்றிக் கொள்ள அவளைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டான்..

"ஆர்த்தி.."

"ம்ம்ம்.."

"எதையும் யோசிக்காதே.."

"ம்ம்ம்.."

"உனக்கு நானிருக்கேன்.. அதை மட்டும் நினைவில் வை.. மற்ற நினைவுகளை துரத்தியடி.."

"ம்ம்ம்.."

"உன்னிடம் எதையும் நான் கேட்க மாட்டேன்.."

"ம்ம்ம்.."

"என் 'ஐ லவ் யு'க்கு பதில் என்னன்னு கூடக் கேட்க மாட்டேன்.. உனக்கு நான்..! இதை நீ உணர்ந்துக்கிட்டாப் போதும்.."

"ம்ம்ம்.."

அவன் எதைச் சொன்னாலும் முணுமுணுப்பைத் தவிர வேறு எதையும் சொல்ல முடியாமல் பலவீனமாகியிருந்தாள் ஆர்த்தி.. அவனுள் புதைந்து நின்றவளை ஆரத் தழுவி அவள் கழுத்தில் முகம் புதைத்தான் சரவணன்.. சூடான அவன் மூச்சுக்காற்று குளிரை விரட்டியடித்தது.. ஆர்த்தி கிறங்கினாள்.. அவனது வெப்ப உதடுகளின் முத்தங்களின் ஸ்பரிசத்தில் நிலை குலைந்தாள்.. அவனது கைகள் படிந்த இடுப்புப் பிரதேசம் கனல் மூட்டியதில் தொலைய ஆரம்பித்தாள்.

சரவணன் பெஞ்சில் உட்கார்ந்து அவன் மடியில் அவளை இழுத்துக் கொண்டான்.. துளைக்கும் குளிர்.. நடுங்க வைக்கும் குளிர்காற்று.. காக்கும் அரணாக அவன்.. தடுக்கும் வேலியாக அவன் கரங்களின் வெப்பம்..

ஒரே சால்வைக்குள் ஒன்றிக் கொண்டாள் ஆர்த்தி.. அவனுடலின் வெப்பத்தில் குளிரைத் துரத்தி அவனிடம் அடைக்கலமானாள்.. அவளது கன்னத்தில் படிந்த முத்தத்தின் வெப்பத்தில் கணகணப்பை உணர்ந்தாள்.. உராயும் அவனது மீசையின் முடிகள் அவளை ஏதோ ஓர் நதியில் நீராட இழுத்துச் சென்றன.. அந்த நதி கதகதப்பாக இருந்தது.. சுகானுபவத்தைத் தந்தது.. அவளது இதழோடு இதழ் சேர்த்த அவனது முத்தத்தில் மூச்சடக்கி அவள் அமிழ்ந்தாள்.. அவன்மீது சரிந்தாள்.. புதைந்தாள்.. அவனுடைய கைகள் அவள் உடலில் படிந்ததில கண்மூடிக் கிறங்கினாள்..

அவனது முரட்டுக் கரங்களின் தேடுதலை அவள் அனுமதித்ததில் அவள் மீதான அவனது கோபம் பறந்து போயிருந்தது.. அவன்மீது ஒட்டியிருந்த அவளது தேகத்தின் ஸ்பரிசம் பஞ்சை நினைவுறுத்தியது.. சரவணன் லாவகமாக அவளைக் கையாண்டான்.. அவனது ஆண்மை நிறைந்த தொடுகைகளில் கிளர்ச்சியுற்றாள் ஆர்த்தி.. அவனுக்கும் அவளுக்கும் இடையில் முளைத்திருந்த மனஸ்தாங்கல் இருக்குமிடம் தெரியாமல் மறைந்து விட்டது.

வெகு நேரத்திற்குப் பின்னால் அவளை விடுவித்த சரவணன் கலைந்திருந்த அவளது முடியைக் கோதிவிட்டு அவள் நெற்றியில் முத்தம் பதித்தான்.. சால்வையை அவள் தோள்களைச் சுற்றிப் போர்த்தி விட்டான்.. அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி வீட்டை நோக்கி நடந்தாள் ஆர்த்தி..

20

அன்றைய இரவில் சரவணன் போர்த்தி விட்ட சால்வையை இறுக்கிப் பிடித்து அதன் வாசனையை நுகர்ந்தபடி தூக்கமின்றி புரண்டு புரண்டு படுத்தாள் ஆர்த்தி.. தோட்டத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளை அவளது மனம் திரும்பத் திரும்ப அசைபோட்டு அந்நிகழ்வு களிலேயே நிலைத்து நின்றது.

இரவு முழுவதும் தூக்கமின்றி சுகமான நினைவுகளின் அயர்வினில் சிக்கித் தவித்தவள் விடியும் போது சால்வையில் முகம் பதித்துத் தூங்கிப் போனாள்..

காலைக் காப்பிக்குப் பின்னால் தோட்டத்தில் உலாவப் போன சரவணன் ஆர்த்தி வருவாளென்று எதிர்பார்த்தான்.. அவளைக் காணாததில் அவன் மனம் சஞ்சலப்பட்டது..

'நேத்திக்கு நடந்ததில கோபப்பட்டிருப்பாளோ..'

இல்லையென்று அவன் மனம் அடித்துச் சொன்னது.. அவளை விட்டுப் போக மனமில்லாமல் திரும்பித் திரும்பி அவனைப் பார்த்தபடி அவள் வீட்டுக்குப் போனதை நினைத்துப் பார்த்தவனின் முகத்தில் மந்தஹாசம் வந்தது.

'அப்படியெல்லாம் இருக்காது..'

குளித்துக் கிளம்பி டைனிங் ஹாலுக்கு வந்தான்.. அப்போதும் ஆர்த்தி கீழே இறங்கி வரவில்லை..

"ஆர்த்தி எங்கே சரண்யா..?" தங்கையிடம் கேட்டான்..

"என்னன்னு தெரியலைண்ணா.. மயிலா காபி கொண்டு போனப்ப ரொம்ப நேரம் கழிச்சுத்தான் கதவைத் திறந்தாங்களாம்.. கண் சிவந்திருந்ததாம்.. என்னன்னு கேட்டதுக்கு லேசா ஃபீவர்ன்னு சொன்னாங்களாம்.. அதுதான் இட்லியை எடுத்து வைத்துக்கிட்டு இருக்கேன்.."

"எதுக்கு..?"

"அவங்க ரூமிலேயே டிபனைக் கொடுத்து டேப்லெட்டை விழுங்க வைக்கலாம்ன்னுதான்.. நம்மை நம்பி குமார் அவரோட தங்கையை அனுப்பி வைத்திருக்கார்.. நாமதானே கவனிச்சுக்கனும்..?"

"ஆமாமாம்.. பட்.. இட்லியை இங்கேயே வை.. நான் போய் என்னன்னு பார்த்துடடு இங்கேயே கூப்பிட்டுக்கிட்டு வர்றேன்.. ரூமிலேயே அடைஞ்சிருந்தா ஃபீவர் அதிகமாத்தான் ஆகும்.."

"நீ சொல்கிறதும் கரெக்ட்தான்.."

சரண்யாவை நிறுத்தி விட்டு ஆர்த்தியைத் தேடிப் போனான் சரவணன்.. அவளது அறைக் கதவைத் தட்டியவனுக்கு கவலையாக இருந்தது.

'காய்ச்சலோட என் கொஞ்சலை அனுமதித்தாளா..? ஏன்..? என் கோபத்துக்குப் பயந்தாளா..?'

கதவைத் திறந்த ஆர்த்தி வீங்கிய இமைகளும், சிவந்த கண்களுமாக இருந்தாள்.. அவனைக் கண்டதும் அந்தக் கோலத்துடன் அவன் முன்னால் நிற்கிறாளே என்று தடுமாறிப் போனாள்..

"என்ன ஆர்த்தி..? உனக்கு உடம்பு சரியில்லையா..?"

கவலையுடன் அவள் நெற்றியில் கை வைத்துப் பார்த்தான் சரவணன்.. சில்லென்று இருந்த நெற்றி.. அவனது சூடான கரம் படிந்ததில் சிலிர்த்துப் போன ஆர்த்தி அவசரமாக சுற்று முற்றும் பார்த்தாள்..

"யாராவது பார்த்துடப் போறாங்க.."

"பார்த்தா என்ன..?"

இலகுவாக கேட்டபடி உள்ளே வந்தான் சரவணன்.. சங்கடத்துடன் கண்ணாடியை ஒர்முறை பார்த்துக் கொண்டாள் ஆர்த்தி..

'கண்றாவியா இருக்கேன்..'

முகம் கழுவி பவுடர் பூசிக் கொண்டால் தேவலை போல இருந்தது.. அதை எப்படி அவனிடம் சொல்வது..? அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனைப் பார்க்க முடியாமல் அவள் விழிகள் அலைபாய்ந்தன..

"ஃபீவர்ன்னு சொன்னயாம்..?"

"ம்ம்ம்.."

"ஏன் அப்படிச் சொன்ன..?"

"முகம் வீங்கி கண் சிவந்திருக்குன்னு மயிலா சொன்னா.."

"அதனால அப்படிச் சொன்னியா..?"

"ம்ம்ம்.."

"சரியாப் போச்சு போ.. கீழே சரண்யா உன்னை நோயாளியாக்கிக்கிட்டு இருக்கா.. டேப்லெட் ரெடியா இருக்கு.. விட்டா உன்னை ஹாஸ்பிடலுக்கு அள்ளிப் போட்டுக்கிட்டுப் போயிருவாங்க போல இருக்கு.."

"ஐயய்யோ.."

"ஏன் முகம் வீங்கி கண் சிவந்திருக்கு..?"

சரவணன் கேட்டு விட்டான்.. என்ன சொல்வது என்று திணறினாள் ஆர்த்தி.. எப்படிச் சொல்வது..?

"அது.. அது.. வந்து.." தடுமாறினாள்..

"என்ன..? சொல்லு.." அவன் விடாமல் வற்புறுத்தினான்..

"நைட் முழுதும் தூக்கம் வரலை.. விடியறப்போ தூக்கம் வந்து அமுக்கிருச்சு.. அதான்.." சொல்லி விட்டாள்..

சரவணனின் கண்களில் வந்த மின்னலில் அவள் முகம் சிவந்து போனது.. ஒப்பனையில்லாமல் அப்போதுதான் தூக்கத்திலிருந்து விழித்து எழுந்திருந்த அவளின் முகத்தைத் தின்று விடுவதைப் போலப் பார்த்து வைத்தான் சரவணன்.. அவள் மனதைப் புரிந்து கொண்ட அந்தப் பார்வையில் அவள் தலை குனிந்தாள்..

"ஆர்த்தி.."

"ம்ம்ம்.."

"ஐ லவ் யு.."

அவள் விழிகளை உயர்த்தி அவன் முகம் பார்த்தாள்.. அந்தத் தோற்றத்திலும் அவள்மீது அவன் மையல் கொள்கிறான் என்றால் அவனது காதலின் ஆழம் எத்தகையதாக இருக்க வேண்டும்..

"பதில் சொல்ல மாட்டியா..?"

"குளிக்கப் போகனும்.."

அவளையே இமைக்காமல் பார்த்தான்.. சோர்ந்த முகத்துடன் இருந்தவளின் மீது அவனுக்கு கோபம் வரவில்லை.. வார்த்தை களால் உணர்த்தாததை செய்கையில் அவள் உணர்த்தி விட்ட பின்பு அவளிடம் கோபம் கொள்ள அவனால் முடியவில்லை..

"பேச்சை மாத்தற..?"

அப்படியெல்லாம் இல்லையென்று அவள் சொல்லவில்லை.. மௌனமாக இருந்தாள்..

"ஓகே.." அவன் தோள்களைக் குலுக்கினான்..

அதில் வசீகரிக்கப்பட்டவளின் ஆவலான பார்வையில் அவன் பார்வை கட்டுண்டது.. உன்னைக் கண்டு கொண்டேன் என்ற மின்னல் அவன் கண்களில் வந்தது.. அவள் முகம் சிவந்ததை ரசனையுடன் பார்த்தான்..

"நீ சொன்னால்தான் காதலா..? நேற்றைய சந்திப்புக்குப் பின்னாலயும் அப்படி நினைச்சா என்னைப் போல முட்டாள் எவனும் இருக்க மாட்டான்.."

"ம்ப்ச்.."

"என்ன 'ம்ப்ச்..'? ம்ம்ம்..?"

"உங்களை முட்டாள்ன்னு சொல்லிக்க வேணாம்.."

ஆர்த்தியின் சிணுங்கல் அவன் மனதை கொள்ளை கொண்டது.. முதல்நாளின் நினைவில் வேட்கையுடன் அவளருகில் போனான்..

"இன்னும் முகம் கூடக் கழுவலை.."

அவள் நழுவப்பார்த்தாள்.. அவன் விடவில்லை.. அவன் கைகளுக்குள் சிறைபட்டவளைக் கட்டியணைத்து முத்தம் கொடுத்தவனின் மீது அவளுக்கு காதல், காதலாக வந்தது..

"தள்ளிப் போங்க.. நான் குளிச்சுட்டு வர்றேன்.."

அவன் மார்பில் கை வைத்துத் தள்ளி விட்டு குளியலறைக்குள் புகுந்து கதவை அடைத்துக் கொண்டவளின் மனது நிறைந்திருந்தது.. பூட்டிய கதவைப் பார்த்த சரவணனின் மனம் அதைவிட அதிகமாக நிறைவடைந்திருந்தது. டைனிங் ஹாலுக்குப் போனான்.. சரண்யா காத்திருந்தாள்..

"நூற்றி ஒன்னா.. நூற்றி இரண்டா..?" என்று கேட்டாள்..

"எதைச் சொல்கிற..?" குழம்பிப் போனான் சரவணன்..

"டெம்பரேச்சரைக் கேட்கிறேன் அண்ணா.. ஆர்த்திக்கு ஃபீவராச்சே.."

"அதுவா.."

சரவணனுக்கு சிரிப்பு வந்தது.. மறைத்துக் கொண்டான்.. சரண்யா புத்திசாலி.. லேசாக ஒரு நுனி கிடைத்து விட்டாலும் அடி ஆழம்வரை சென்று உண்மையைத் தோண்டி எடுத்து விடுவாள்..

அதனால் இயல்பாக முகத்தை வைத்துக் கொண்டு..

"நீ வேற.. ஆர்த்திக்கொன்னும் காய்ச்சலில்ல.. பத்து ஜஸ்கிரிமை ஒட்டு மொத்தமா விழுங்கிறவளைப் போல இருக்கா.." என்றான்.

"அப்புறம் மயிலா ஏன் அப்படிச் சொன்னா..?"

"ஃபீவரிஷா இருக்குன்னு சொன்னாளாம்.. இவ ஃபீவர்ன்னு புரிஞ்சுக்கிட்டா போல இருக்கு.."

"அப்படித்தான் இருக்கும்.."

ஆர்த்திக்கு காய்ச்சலில்லை என்பதில் நிம்மதியான சரண்யா இடுப்பில் கை வைத்து சரவணனை ஊன்றிப் பார்த்தாள்..

'இவ ஏன் இப்படிப் பார்க்கிறா..?' சுதாரித்தான் சரவணன்..

"ஆர்த்தி இங்கே வந்த புதிசில அவங்க.. இவங்கன்னு பேசுவ.. இப்ப அவ, இவங்கிற.. என்ன விசயம்..?"

சரவணன் சிரித்துவிட்டான்.. அதில் தெரிந்த செய்தியில்..

"அண்ணா..!" என்றாள் சரண்யா..

"இன்னும் ஒன்னும் முடிவாகலை.. நீபாட்டுக்கு அம்மா, அப்பாகிட்டப் போட்டுக் கொடுத்திராதே.."

"இது ரொம்ப நல்ல விசயமாச்சே.. நான் ஏன் போட்டுக் கொடுக்கப் போகிறேன்..? விசயம் எவ்வளவு தூரத்தில இருக்கு..?"

"ஐ லவ் யு சொன்னேன்.. பதில் சொல்ல மாட்டேங்கிறா.."

"காத்திரு.. காதலில காத்திருக்கனும்.."

ஆழ்ந்த குரலில் சொன்ன சரண்யாவின் விழிகள் எங்கோ சஞ்சரித்ததில் சரவணனின் புருவங்கள் முடிச்சிட்டன.. அதைப்பற்றி அவன் யோசிப்பதற்குள் சுந்தரம் வந்து விட்டார்.. அவர்கள் சாப்பிட ஆரம்பிக்கும்போது ஆர்த்தியும் வந்துவிட.. பேச்சு திசைமாறியது..

"வீட்டுக்குள்ளேயே அடைஞ்சிருக்காம ஊட்டிப்பக்கம் போய்ச் சுற்றிப் பார்த்துட்டு வாம்மா.. சரண்யா இருக்கா.. சரவணன் கூப்பிட்டுக்கிட்டுப் போவான்.."

சுந்தரத்தின் பரிந்துரை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப் பட்டது. மும்பையில் ஒரு வேலையிருப்பதாகக் கூறிய சரவணன் திரும்பி வந்த பின்னால் ஆர்த்திக்கு ஊட்டியைச் சுற்றிக் காட்டுவதாக வாக்களித்தான்..

21

"என்னவோ போங்க.. எங்க ஊரை நீங்கதான் மெச்சிக்கணும்.."

அலுத்துக் கொண்டாள் சரண்யா.. ஸ்வெட்டரைத் தாண்டி ஊடுறுவிய குளிரை ரசித்த ஆர்த்தி உள்ளங்கைகளை ஒன்று சேர்த்து தேய்த்துக் கன்னத்தில் வைத்தாள்.. கதகதப்பாக இருந்தது.. தொலைவில் வந்த ஜீப்பைக் கண்டவள் கலவரமாகிப் போனாள்..

"சரண்யா.. அந்த மனோகரனோட ஜீப் வருது.."

"வந்தா வரட்டுமே.."

அலட்சியமாகச் சொன்ன சரண்யாவை ஆச்சரியத்துடன் பார்த்தாள் ஆர்த்தி.. சரவணனின் ஒட்டு மொத்த தெனாவெட்டும் சரண்யாவிடம் இருந்தது.. அது ஆர்த்தியை ஈர்த்தது..

"பயமாயில்லையா..?"

"அவன்தான் நம்மைக் கண்டு பயப்படணும்.."

"உங்களைக் கண்டுன்னு சொல்லுங்க.."

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே ஜீப் அவர்களை சமீபித்து விட்டது.. பந்தாவாக பிலிம் காட்ட

முயன்றபடி ஜிப்பிலிருந்து குதித்த மனோகரன் மலைப்பாதையில் சறுக்கி விழத் தெரிந்து மயிரிழையில் தப்பித்துக் கால்களை ஊன்றி நின்றான்..

"தேவையா இவனுக்கு..?"

ஆர்த்தியிடம் கேட்டாள் சரண்யா.. செமத்தியான அவளது குசும்புப் பேச்சில் ஆர்த்திக்கு சிரிப்பு வந்து தொலைத்தது.. மனோகரனைப் பார்த்தாள்.. அவன் சரண்யாவின் கேள்விக்கும் அவனுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்பதைப் போல எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான்..

"இவனும் ஹீரோவாகிடனும்னுதான் மெனக்கெடறான்.. விதி செய்கிற சதியில காமெடியனாகிடறான்.."

சரண்யா தெரிவித்த அபிப்ராயத்திற்கு என்ன பதிலை நல்குவது என்று புரியாமல் திருதிருத்தாள் ஆர்த்தி.. அபிப்ராயத்திற்கு உரியவனே அதை எவரையோ சொல்வதைப் போல எடுத்துக் கொண்டு விண்ணையும், மண்ணையும் பார்க்கும் போது அவள் என்னவென்று பதில் சொல்வாள்..?

மனோகரன் துடைத்தெரிவதில் கை தேர்ந்தவனாக இருந்தான்.. அவனைப் பற்றிய மிக உயர்ந்த அபிப்ராயத்தைத் தெரிவித்த சரண்யாவைப் பார்த்து..

"ஹி.. ஹி.." என்று இளித்து வைத்தான்..

"இதைப் பாருங்க ஆர்த்தி.. இஞ்சி தின்ற குரங்கைப் போல இளிக்கிறான்.. வாங்கின அடி பத்தாது போல இருக்குது.."

சரண்யா கைகளைத் தேய்த்துக் கொள்ள மனோகரன் எட்டி நின்று கொண்டான்..

"முன் ஜாக்கிரதை.." முணுமுணுத்தாள் சரண்யா..

"சரண்யா.." மனோகரன் வெட்கமில்லாமல் அழைத்தான்.

"என்ன..?" அடித்து விடுபவளைப் போல கேட்டாள் சரண்யா.

"இது யாரு..?" ஆர்த்தியைக் காட்டிக் கேட்டான்..

"எது..?" வேண்டுமென்றே சுற்று முற்றும் பார்த்து வைத்தாள் சரண்யா..

"இவங்களைச் சொன்னேன்.." கடுப்புடன் திருத்தமாகச் சொன்னான் மனோகரன்..

"இதை முதலிலேயே சொல்கிறது..? ஒழுங்காப் பேசி பழக்கமில்லைன்னா வாயையே திறக்கக் கூடாது.. இவங்க யாருன்னு நீங்க ஏன் தெரிஞ்சுக்கனும்..?"

"நம்ம ஊருக்கு வந்திருக்காங்க.."

"ஊஹூம்.. எங்க வீட்டுக்கு வந்திருக்காங்க.."

"இருக்கட்டுமே.. உன் வீடு என்ன எனக்கு அன்னியமா, அசலா...?"

"இந்த ஒன்னுக்குள்ளே ஒன்னுங்கிற கதையெல்லாம் இங்கே வேணாம்.. வாங்கின அடி பத்தாதா..?"

அவன் சரண்யாவிடம் அடி வாங்கிய நிகழ்வை ஆர்த்தியின் முன்னால் அவள் நினைவு படுத்தியதில்

சரவணனுக்கு கொஞ்சம் கூட உடன்பாடில்லை.. அதை அவளிடம் சொல்ல முடியுமா..? கண்டு கொள்ளாமல் இருப்பதுதான் சாலச்சிறந்தது என்ற அனுபவ பாடத்தில் அவன் பல்லைக் காட்டினான்..

"மறுபடியும் இளிப்பா..?" அலுப்புடன் சொன்னாள் சரண்யா..

"அதில்லை சரண்யா.. இவங்களுக்கு என்னை இன்ட்ரொடியூஸ் பண்ணி வைக்கலாமில்ல..?"

"ஐயா ஏற்கனெவே இன்ட்ரொடியூஸ் ஆகிட்டிங்களாமே.. என் பெயர் மனோகரன்னு சொன்னீங்களாம்.. வழியைக்கூட மறிச்சீங் களாமே..? குன்னூரின் மரியாதை உங்களைப் போல ஆள்களாலே கொடி கட்டிப் பறக்குது.."

"சும்மா பேசலாம்ன்னு நிற்கச் சொன்னேன் சரண்யா.. பயந்துட்டாங்க போல.."

"இனிமே பயப்பட மாட்டாங்க.. உங்களைப் பத்தின அத்தனை புள்ளி விவரங்களையும் துல்லியமாக சொல்லி வைச்சிருக்கேன்.. என்னைவிட ஒருபடி மேலே போயி என்னன்னு கேட்டிருவாங்க.."

சரண்யாவின் குத்தலான பேச்சில் மனோகரனின் முகம் கருத்தது.. அதற்குள் ஜீப்பிலிருந்து இறங்கி வந்த மனோகரனுடைய அம்மா சரண்யாவை முறைத்தபடி..

"என்னப்பா பேசிக்கிட்டு இருக்க..?" என்று மகனிடம் விசாரித்தாள்..

"நலம் விசாரிச்சார் ஆண்ட்டி.. நீங்க எங்கே இந்தப பக்கம்..?"

சரண்யாவின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் துளைப்பதைப் போல ஆர்த்தியை அந்தப் பெண்மணி பார்த்த பார்வையில் ஆர்த்தியின் உடல் வெடவெடத்தது.. நிஷ்ரேம் ததும்பிய அந்தப் பார்வையின் குரூரம் அச்சு அசல் சொப்னாவைப் போலவே இருந்ததில்

'சித்தியைப் பார்க்கிறதைப் போலவே இருக்கே..' என்று ஆர்த்தி பயந்து போனாள்..

"இந்தப் பொண்ணு எப்ப ஊருக்குப் போகும்..?"

நாகரிகமில்லாமல் மனோகரனின் அம்மா கேட்ட விதத்தில் குன்றிப் போனாள் ஆர்த்தி.. அதுவரை சரவணனின் வீட்டில் ஒருத்தியாக உணர்ந்து கொண்டிருந்தவளை அந்தக் குடும்பத்திலிருந்து பிடுங்கி வெளியே நிறுத்தி வைத்தது அந்தக் கேள்வி..

"எப்பயும் போக மாட்டாங்க.."

அழுத்தமாகச் சொன்னாள் சரண்யா.. வெடி வைத்த கல்குவாரி போல பொறுமிக் கொண்டிருந்த ஆர்த்தியின் மனது சடுதியில் மாறியது.. குளிர்மழை மனதிற்குள் பெய்வதைப் போல உணர்ந்தாள் அவள்..

"பாவம்.. தாயில்லாப் பொண்ணு.. அடைக்கலம்ன்னு வந்திருக்குது.. இரக்கத்தில பேசற போல.. ஆனாலும் இப்படிப் பேசக் கூடாதும்மா.. கல்யாண வயசில இருக்கிற

பொண்ணு அடுத்தவங்க வீட்டில ஒருநாள் கூடத் தங்கக் கூடாது.. இந்தப் பெண்ணின் வீட்டில அந்த வளமையெல்லாம் கிடையாது போல.. இத்தனை நாளாய் உங்க வீட்டில இருக்க விட்டதே அதிகப்படி.. நாங்கள்ளாம் எங்க பிள்ளைகளை இப்படி விடமாட்டேம்.."

தோல்வியை எளிதில் ஒப்புக் கொள்ளாத மனோகரனின் அம்மா பேசிய பேச்சில் தொய்ந்து போனாள் ஆர்த்தி.. நாசுக்கும், நாகரிகமும் கிலோ என்ன விலையென்று கேட்கும் அந்தப் பெண்மணி ஒரு முடிவோடுதான் வந்திருக்கிறாள் என்பதை குரூரம் பொங்கி வழியும் அவளது குரூரப் பார்வையே கட்டியம் சொன்னது.

'என்ன பேசுகிறோம்.. இதனால எதிராளியின் மனசு எந்த அளவுக்கு ரணமாகும்ன்னு தெரிஞ்சேதான் இந்தம்மா பேசுது.'

நிம்மதிக்கு உத்திரவாதமில்லாத அந்தச் சூழல் சுமையாக ஆர்த்தியின் தலைமீது ஏறி அவளை பூமிக்குள் புதையுண்டு போகச் சொன்னது.

அந்தப் பெண்மணியின் பேச்சை அலட்டிக் கொள்ளாமல் எதிர் கொண்டது சரண்யா மட்டும்தான்.. ஆர்த்திதான் பேச்சைத் தொலைத்துக் கானகத்தில் வழி தப்பி விட்டக் குழந்தையைப் போல மலங்க.. மலங்க.. விழித்துக் கொண்டு நின்றாளே..

"ஆமாமாம்.. உங்க பிள்ளைகளை எப்படி விட்டிருக்கீங்கன்னு இந்தக் குன்னூரே பார்த்துக்

கிட்டுத்தானே இருக்கு.. அதுக்குக் கண்கண்ட சாட்சியா உங்க பிள்ளை கண் முன்னாலே நிற்கிறாரே.. இவருக்கு எத்தனை பிள்ளைகளோ.. கணக்கெடுப்பு நடத்தினா இன்னைக்கு முழுவதும் நடத்திக்கிட்டே இருக்கலாம்.. எண்ண முடியாது.. நீங்க மத்தவங்க வீட்டு வளமையைப் பத்திப் பேச வந்துட்டிங்க.."

"சரண்யா.."

மனோகரனின் அம்மா அலறினாள்.. அவளது குரல் மலை முகட்டுகளில் பட்டு எதிரொலித்ததில் தேயிலை பறித்துக் கொண்டிருந்த பெண்கள் திரும்பிப் பார்த்தார்கள்..

"உஸ்ஸ்.." வாயில் விரலை வைத்து அவளை அடக்கினாள் சரண்யா..

"உங்களுக்கெல்லாம் இத்தனை கோபம் வரக்கூடாது.. உள்ளதைச் சொன்னதுக்கே டென்சன் எகிறுதே.. தேவையில்லாம நீங்க பேசறதில எனக்கு எத்தனை டென்சன் எகிறும்.. இப்ப என்ன..? இவங்க அடுத்த வீட்டுப் பெண்.. எங்க வீட்டில அதிக நாள் தங்கிட்டாங்க.. இதுதானே உங்க பிரச்னை..? இவங்களை எங்க குடும்பத்துக்குப் பிடிச்சிருக்கு.. எங்க சரவணன் அண்ணாவுக்கு இவங்களைத்தான் மேரேஜ் பண்ணி வைக்கிறதா இருக்கோம்.. போதுமா..? இனி வாயைத் திறப்பிங்களா..? வாங்க ஆர்த்தி நாம போகலாம்.. இவங்ககூட இவ்வளவு பேசினதே அதிகம்.."

சரண்யா ஆர்த்தியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் விட்டாள்.. மனோகரனின் அம்மா நெஞ்சைப்

பிடித்தபடி நின்று விட்டாள்.. அவள் எது நடக்கக் கூடாது என்று நினைத்தாளோ அதுவே நடந்து விடும்போல இருந்ததில் அவளது ரத்தக் கொதிப்பு எகிறியது..

"என்னடா மனோகரா இவ இப்படிச் சொல்லிட்டுப் போறா.. கடைசியில சுந்தரம் அண்ணன் வீட்டில பொண்ணைக் கூடக் கொடுக்க முடியாது போல இருக்கே.."

அவள் கவலை அவளுக்கு..

"அதானே.. இம்புட்டு அழகான பொண்ணை அந்த சரவணன் கல்யாணம் பண்ணிக்கிறதா..? என்னைப் பார்த்தா இவங்களுக்கு மாப்பிள்ளையாத் தோணலையா..? இவங்ககிட்ட மட்டும்தான் எஸ்டேட் இருக்கா..? என்கிட்டயும்தான் இருக்கு.."

மனோகரன் கொதித்தான்.. அவன் கவலை அவனுக்கு..

'எப்படியாவது இதை நிறுத்திரணும்..'

இந்த ஒன்றில் மட்டும் தாயின் சிந்தனையும் மகனின் சிந்தனையும் ஒன்றுபோல இருந்தது..

ஒன்று பட்டால் வாழ்வுண்டென்று யார் சொன்னது.?

மனோகரனும் அவனுடைய அம்மாவும் சதியோசனைகளுடன் ஜீப்பில் ஏறிப் போய் விட்டார்கள்.. வீட்டை நோக்கிப் போய் கொண்டிருந்த ஆர்த்தியும், சரண்யாவும் வேறு வேறு யோசனை களுடன் இருந்தார்கள்..

'இந்த வீட்டை விட்டுப் போய் விட வேண்டும்..' கனத்த மனதுடன் ஆர்த்தி நினைத்தாள்..

'இவங்களைப் பத்தி அம்மா அப்பாவிடம் பேசி மேரேஜை நிச்சயம் பண்ணிரனும்..' சரண்யா தீர்மானமாக இருந்தாள்..

மௌனமான யோசனைகளுடன் வீட்டை நெருங்கிய போது சரண்யா குதூகலித்தாள்..

"ஆர்த்தி..! உங்க வீட்டுக்கார் நிற்குது.."

'என்னது..?..!'

ஆர்த்தி வெலவெலத்து விட்டாள்.. அவளது கால்களுக்கு அடியில் பூமி சரிவதைப் போல இருந்தது.

22

மனதில் எவரோ மத்தளம் வாசித்தார்கள்.. அதில் கிடுகிடுத்தது பேதையின் உள்ளம்.. நடுநடுக்கத்துடன் காரைப் பார்த்தாள்.. முகம் மலர்ந்தது.. அது அவள் வீட்டுக் காரல்ல.. துளிர்த்த வியர்வைத் துளிகளை கைக்குட்டையால் துடைத்துப் பிழிந்தபடி..

'அப்பாடி..' என்று ஆசுவாசப் பெருமூச்சு விட்டாள்..

அவள் வீட்டில் கார் இருந்ததுதான்.. அது பளபளவென மின்னிக் கொண்டிருக்கும் வெளிநாட்டுக் காரல்ல.

"என்ன ஆர்த்தி மலைச்சுப் போய் நின்னுட்டிங்க..

உங்க வீட்டுக் காரை உங்களுக்கே அடையாளம் தெரியலையா..?"

சரண்யா சுட்டிக் காட்டிய வெளிநாட்டுக்காரை உற்று உற்றுப் பார்த்து வைத்தாள் ஆர்த்தி.. அது எவருடைய காராக இருக்கும் என்று அவளுக்குக் கொஞ்சம்கூட விளங்கவில்லை..

"சரியாப் போச்சு போங்க.. எங்க வீட்டுக்கு வந்ததில உங்க காரைக் கூட மறந்துட்டிங்களா..?" கிண்டல் செய்தாள் சரண்யா..

"திடிர்ன்னு பார்த்தேனா.. அதான்.." சமாளிக்க முயன்றாள் ஆர்த்தி..

"காரைத்தான் அடையாளம் தெரியலை.. அதோ.. அங்கே நிற்கிற உங்க அண்ணனையாவது அடையாளம் தெரியுதா..?" அடுத்த வெடி குண்டைத் தூக்கிப் போட்டாள் சரண்யா..

"அண்ணனா..?" ஆர்த்திக்கு தலை சுற்றியது.

சரண்யா காட்டிய திசையில் பார்த்தாள்.. தோட்டத்தில் ஒரு வாலிபன் நின்றிருந்தான்.. ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்த வனின் நெற்றியில் சிந்தனைக் கீற்றுகள்..

"உங்களோட ஜெராக்ஸ் மாதிரியே ஆகாயத்தை ஆராய்ச்சி பண்ணிக்கிட்டு இருக்காரு பார்த்தீங்களா..? அப்படி அண்ணனும் தங்கையும் என்னதான் வானிலை ஆராய்ச்சி பண்றீங்களோ..." குறும்பாக சிரித்தாள் சரண்யா..

ஆர்த்திக்கு தலை முடியைப் பிய்த்துக் கொள்ளலாம் போல இருந்தது. அங்கே என்னதான் நடக்கிறது என்று புரியாமல் திகைத்தாள்.

"வாம்மா ஆர்த்தி.. உன் அண்ணன் வந்திருக்கான் பார்த்தியா.."

வீட்டுக்குள்ளிருந்து மயிலா பின்தொடர வந்த கவிதா சொன்னாள்.. மயிலாவின் கையில் டிபன் தட்டு இருந்தது..

"உனக்கும் சரண்யாவுக்கும் டைனிங் டேபிளில் எடுத்து வைச்சிருக்கேன்.. குமார் எப்ப இங்கே வந்தாலும் தோட்டத்திலேயே தான் குடியிருப்பான்.." முறுவலித்தவள்..

"நீயும் உன் அண்ணன்கூட டிபன் சாப்பிடறயா..? மயிலாவிடம் கொடுத்தனுப்பவா..?" என்று கேட்டாள்..

"ஏம்மா இந்த ஓரவஞ்சனை..? இவங்க மட்டும்தான் தோட்டத்திலே டிபன் சாப்பிடனுமா..? நானும் கூட்டுச் சேர்ந்துக்கிட்டா ஆகாதா..?" உண்மையான கோபத்துடன் சண்டைக்கு வந்தாள் சரண்யா..

"நீயும் ஆர்த்தியும் ஒன்றாடி..? இவ குமாரின் தங்கை.. கூடப் பிறந்தவங்க பேசறதுக்கு நிறைய சங்கதி இருக்கும்.. நீ அப்படியா..?" கவிதா கடிந்து கொண்டாள்..

"குமார் அப்படிச் சொன்னாரா..? சொல்லுங்க குமார்.. நீங்க அப்படிச் சொன்னீங்களா..?"

சரண்யா குமாரிடம் நியாயம் கேட்க அவன் ஆர்த்தியையே பார்த்துக் கொண்டிருந்தான்.. அவளது

இதயத்தின் ஆழத்தில் என்ன இருக்கிறது என்று தூண்டித் துருவியது அந்தப் பார்வை.. அவன் என்ன சொல்லி விடுவானோ என்று ஆர்த்தி நடுங்கினாள்.. அவனிடம் பார்வையால் கூட இறைஞ்ச முடியவில்லை.. முன்பின் தெரியாதவனின் பெயரை உபயோகித்து அவனுடைய தங்கையாக அந்த வீட்டில் விருந்தாடியது எவ்வளவு பெரிய தவறென்று அவளது மனச்சாட்சி உறுத்தியது.

"அப்படிச் சொல்வேனா சரண்யா..?"

ஆர்த்தியையே பார்த்தபடி இதமான குரலில் வினவினான் குமார்.. சரண்யாவின் முகம் மலர்ந்து விட்டது..

"அதுதானே.."

"ஆனால் சரண்யா.. ஆர்த்தியிடம் பேசறதுக்குன்னு சில விசயங்கள் இருக்கு.. அதைப் பேசி முடிச்சதும் நீங்க வந்து ஜாயின் பண்ணிக்கலாம்.. அதுக்கு மட்டும் டைம் கொடுக்க முடியுமா..? பத்தே நிமிசம் தான்.."

பணிவாக குமார் பேசிய விதத்தில் தலையை ஆட்டிவிட்டு முகத்தை சுணங்க வைத்துக் கொண்டு சரண்யா போய் விட்டாள்..

"இன்னும் சின்னக் குழந்தைதான்.."

மகளைப் பார்த்துத் தலையை ஆட்டி விட்டு கவிதா சொன்னாள்.. ஆமாம் என்பதைப் போல குமார் சிரித்தான்.. அண்ணனும், தங்கையும் (?) தனியாக பேசட்டும் என்று கவிதாவும் போய்விட தனித்து குமாரின் முன்னால் நின்ற

ஆர்த்தியின் காலிரண்டும் வெடவெடத்தன.. அவளால் குமாரின் முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை..

"லாஸ்ட் டைம் சரவணன் சென்னைக்கு வந்து ரிட்டர்ன் ஆனப்ப அவனை டிரெயினில் ஏற்றிவிட நான் வந்தேன்.. அப்ப அவன் ஜர்ன் பண்ண கம்பார்ட்மெண்டில் உங்களைப் பார்த்த ஞாபகம்.. நீங்க எப்படி இங்கே என் தங்கையாய் மாறியிருக்கீங்க..?"

எதுவுமே நடக்காததைப் போல வெகு சாதாரணமாக கேள்வி கேட்டவனை வியப்புடன் பார்த்தாள் ஆர்த்தி.. அவனுக்கு கோபம் வரவில்லையா..?

அறிமுகமில்லாத யாரோ ஒரு பெண் அவனுடைய தங்கையென்று சொல்லிக்கொண்டு நண்பனின் வீட்டில் தங்கியிருக் கிறாள்.. அவளைக் காட்டிக் கொடுக்காமல் வெகு கண்ணியமாக விவரம் கேட்டவனின் குணாதிசியத்தில் ஈர்க்கப்பட்டவளுக்கு அவனிடமிருந்து எதையும் மறைக்க வேண்டும் என்று தோன்றவில்லை.

அனைத்து விவரங்களையும் ஒப்பித்து விட்டாள் ஆர்த்தி.. அவள் மனதிலிருந்த பாரம் சிறிது குறைந்ததைப் போல இருந்தது.

"சரவணனோட அப்பாவும், அம்மாவும் தாயில்லாத பெண்ங்கிறதில இரக்கம் காட்டினாங்க.. சரண்யாவுக்கோ நீங்க ரொம்ப ஸ்பெசல்.. உங்களோட தங்கைன்னு சொன்னவுடனே எந்தக் கேள்வியும் கேட்காம என்கிட்ட ஓட்டிக்கிட்டாங்க.." என்றாள் ஆர்த்தி..

"சரண்யா புத்திசாலியாச்சே..."

"எல்லாப் புத்திசாலியும் இடறி விழற இடம் ஒன்னு இருக்கு.. அதுதான் காதல்..!" புன்னகைத்தாள் ஆர்த்தி..

"காதலா..?"

"ம்ம்ம்.. சரண்யா உங்களைக் காதலிக்கிறாங்க.."

"உங்களுக்கு எப்படித் தெரியும்..? அவங்க சொன்னாங்களா..?"

"ம்ம்ம்.. நீங்க அவங்களை அட்ராக்ட் பண்ணியிருக்கீங்க.."

"என்னங்க இது..? நான் குன்னூருக்கு வந்தா சரவணனின் தங்கை இருக்கிற திசைப்பக்கம் கூடத் திரும்ப மாட்டேனே.."

"அந்தக் குணம்தான் அவங்களை இம்ப்ரெஸ் பண்ணியிருக்கு.."

"நிஜமாகவா..?"

ஆவலுடன் கேட்டான் குமார்.. அவனையும் ஒரு பெண் காதலிக்கிறாள் என்பதில் போதையுண்டானது..

"ஆக்சுவலா ஆர்த்தி.. எனக்கு இங்கே நடந்த குளறுபடி யெதுவும் தெரியாது.. இந்த சரவணனாவது போன் பண்ணி இப்படி விசயம்டா.. ஆர்த்தியை உன் தங்கைன்னு சொல்லி என் வீட்டில் தங்க வைத்திருக்கிறேன்னு சொல்லியிருக்கனும்.. அவனும் சொல்லலை.. நான் யதார்த்தமா எப்போதும் வருகிறதைப் போல குன்னூருக்கு

வந்தேன்.. வந்து பார்த்தா எப்படா ஃபாரின்ல இருந்து வந்தேன்னு சரவணனோட அம்மா கேட்கிறாங்க.."

"கடவுளே..! அதுக்குப் பதில் சொல்லனுமே.."

"எதையோ பொத்தாம் பொதுவில சொல்லி வைச்சிருக்கேன்.. சரவணன் வந்ததும் கலந்து பேசிட்டு எதையாவது சொல்லி சமாளிக்கிறேன்.."

"ஐ ஆம் ஸாரி.."

வருத்தத்துடன் சொன்னாள் ஆர்த்தி.. அவளால் மற்றவர்களுக்கு எத்தனை சிரமம்..! இப்படி எத்தனை காலம்தான் ஓடி ஒளிவாள்..? குமாரும் அதைத்தான் கேட்டான்..

"பட் ஆர்த்தி.. எல்லா பிராப்ளத்திற்கும் சொலுசன் வந்துதான் ஆகனும்.. நீங்க எத்தனை நாள் என் தங்கைங்கிற பெயரில இங்கே ஒளிந்திருக்க முடியும்..? உண்மை ஒருநாள் வெளியில் வந்துராதா..?"

"அதை நான் யோசிக்கலை.."

நலிந்த குரலில் சொல்லிய அந்தப் பெண்ணின் துயம் குமாரை பாதித்தது.. அவன் ஈரமனம் கொண்டவன்..

"டோன்ட் ஒர்ரி ஆர்த்தி.. நீங்களும் எனக்கு தங்கைதான்.. இதுக்கொரு முடிவு வரும்.. காத்திருப்போம்.." என்று தேறுதல் சொன்னான்..

அதற்குள் சரண்யா அங்கு வந்து விட்டாள்.. குமாரும் ஆர்த்தியும் பேச்சை மாற்றி பொதுவாக பேச ஆரம்பித்தார்கள்..

சரண்யாவும் அந்தப் பேச்சில் கலந்து கொண்டாள்.. குமாரின் பார்வை அவள்மீது சொந்தத்துடன் படிந்ததில் அவளது கண்கள் மின்னின..

"இன்றைக்குத்தான் உங்க அண்ணா என் முகம் பார்த்துப் பேசியிருக்கார் ஆர்த்தி.." குமாரை விழுங்குவதைப் போலப் பார்த்தபடி ஜொள்ளினாள்..

"முகம் பார்த்தா இப்படியொரு தேவதை பூமியிலே இருக்காங்களான்னு மயக்கம் போட்டு விழுந்து விடுவேன்னுகிற பயம்தான்.." கிடைத்த வாய்ப்பைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான் குமார்..

"அடேங்கப்பா..! நீங்க இந்த அளவுக்கு பேசுவீங்களா..?"

"இதுக்கு மேலேயும் பேசுவேன்.."

"உங்களை உம்மணாம் மூஞ்சின்னுல்ல நினைச்சிருந்தேன்.."

"நான் உங்களை ஊமைன்னு நினைச்சிருந்தேன்.."

"கெட்டிக்காரர்தான் போட்டுத் தாக்கறிங்க.."

"அங்கேயிருந்து கத்துக்கிட்டதுதான்.."

ஆர்த்தியை மையமாக வைத்துப் பேசிக் கொண்டிருந்தவர்கள் அவளைக் கழட்டி விட்டுவிட்டு தங்களுக்குள் உரையாட ஆரம்பிக்க.. நல்லவர்களுக்கு அழகு சொல்லாமல் விலகிச் செல்வது என்று வீட்டுக்குள் போய் விட்டாள் ஆர்த்தி.. சற்றுப் பொறுத்து சரவணனின்

கார் வரும் சப்தம் கேட்டது.. நகம் கடித்தபடி காத்திருந்தாள் ஆர்த்தி.. புள்ளி மான் போல துள்ளிக் கொண்டு வந்த சரண்யா ஆர்த்தியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு..

"தேங்க்யு ஆர்த்தி.. உங்க அண்ணன் ஐ லவ் யு சொல்லிட்டார்.." என்று பரவசப் பட்டாள்..

"படா பாஸ்ட்தான்.. என்ன அதுக்குள்ள வந்துட்டிங்க..?"

"என்னோட அண்ணன் வந்தாச்சு.. உங்க அண்ணனும் என் அண்ணனும் பொர்சனலா பேச ஆரம்பிச்சாங்க.. நா ன் வர வேண்டியதாகிருச்சு.."

நண்பர்கள் இருவரும் தற்போது முளைத்திருக்கும் சிக்கலுக்கு ஒரு வழி கண்டு பிடிப்பார்கள் என்று நிம்மதியடைந்தாள் ஆர்த்தி.. அவள் நினைத்தது நடந்தது.. இரவு உணவின் போது குமார் சுந்தரத்திற்கும் கவிதாவிற்கும் நன்றி சொல்லிவிட்டு..

"ஜஸ்ட் டூ மன்த்ஸ்தான் ஆண்ட்டி.. எங்க ஃபாரின் வொர்க் முடிஞ்சிரும்.. ரிட்டர்ன் ஆகிருவோம்.. ஷாப்பிங் மாலில முக்கியமான காண்ட்ராக்ட் ஒன்னுல சைன் பண்ண வேண்டியிருந்தது.. அதான் நான் மட்டும் வந்தேன்.. ஆர்த்தியைப் பார்த்தாச்சு.. நாளைக்கே சென்னைக்கு கிளம்பனும்.. நாளைக்கு மறுநாள் ஃபாரின் போயாகனும்.. இரண்டு மாதம் கழித்து அப்பாவும் நானும் இந்தியாவுக்கு வந்ததும் ஆர்த்தியைக் கூப்பிட்டுக்கிறோம்.. அதுவரைக்கும்

ஆர்த்தி உங்க பாதுகாப்பில் இருக்கட்டும்..” என்று கேட்டுக் கொண்டான்..

“நீ இதைச் சொல்லனுமா குமார்..?” என்று ஒரு மனதாக சுந்தரமும், கவிதாவும் சொல்லி விட்டார்கள்..

“உண்மையிலேயே எனக்கொரு அண்ணன் இருந்து ஹெல்ப் பண்ணினதைப் போலவே இருக்கு.. நம்பவே முடியலை..”

நெகிழ்ச்சியுடன் சொன்னாள் ஆர்த்தி.. இமைகளை மூடித் திறந்து அவள் சொன்னதற்கு ஒப்புதலை அளித்த சரவணன் பெடலை அழுத்தி போட்டின் திசையை மாற்றினான்.. பச்சை நிறம் போலத் தெரிந்த ஏரியின் நீரைக் கைகளால் அளைந்த ஆர்த்தியின் மனதில் துள்ளல் உண்டானது.. எவ்விதத் தளைகளுமற்ற பறவையைப் போல சிரித்து மகிழ்ந்தாள் அவள்.

அவளின் மகிழ்வை நெகிழ்வுடன் பார்த்தான் சரவணன்.. இந்தத் துள்ளலும் துடிப்பும்தான் இவளது இயல்பு என்று நினைத்துக் கொண்டான் இத்தனை தினங்களாக அவை எங்கே ஒளிந்திருந்தன..?

"இரண்டு மாதத்திற்குக் கவலையில்லை.. அதற்குப் பிறகு..?"

அவள் முகத்தில் பழைய கவலை திரும்பிவிட்டது.. இவளால் இதை மறக்க முடியாது.. மறக்கச் சொல்லவும் முடியாது என்ற நினைவுடன்..

"யோசிக்கலாம்.." என்றான் சரவணன்.

"உங்களுக்குத்தான் தொல்லை.."

"அடிவாங்கப் போற.. நீ எனக்குத் தொல்லையா..?"

உரிமையுடன் சரவணன் அதட்டியதில் ஓர் பாதுகாப்புணர்வை உணர்ந்தாள் ஆர்த்தி.. அவள் அவனுடையவள் என்ற ரீதியில் அவன் அதட்டிய விதம் அவளுக்குப் பிடித்திருந்தது.. மனக் கவலையை மறந்து முகம் சிவந்தாள்.. அவன் கண்களைச் சிமிட்டினான்.. அவர்கள் தாழ்ந்தகுரலில் ரகசியக் கதைகளைப் பேசத் துவங்கினார்கள்.. நேரம் போவதே தெரியாமல் சுற்றி விட்டுக் கரைக்குத் திரும்பிய போது..

"இன்னைக்கு நைட் தோட்டத்துப் பக்கம் வா.." என்றான் சரவணன்..

"எதுக்கு..?" அப்பாவியாய் கேட்டு வைத்தாள் ஆர்த்தி..

"எதுக்குன்னு சொல்லித்தான் தெரியனுமா..?" ஆழ்ந்து பார்த்தான் சரவணன்..

"நீங்க இருக்கீங்களே.." நீரை அள்ளி அவன் முகத்தில் அடித்தாள் அவள்..

கரையில் ஏறிய பின்னால் இயல்பாக அவன் கை கோர்த்தான்.. மெல்ல அவளது விரல்களை விட்டு விட்டு தோளுக்கு இடம் மாறியது அவனது கை.. அவனது அணைப்பில் அடங்கி இணைந்து நடந்தவளுக்கு உலகமே அவள் வசத்தில் இருப்பதைப் போல சந்தோசமாக இருந்தது.

"சந்தடி சாக்கில சரண்யாவோட காதலையும் சக்சஸ் பண்ணிட்ட.."

"குமார் அவங்களுக்கு மேட்ச்தானே..?"

"ஹண்ட்ரெட் பெர்சென்ட் மேட்ச்.. நானே அவனைப் பத்தி வீட்டில பேசனும்னு நினைச்சுக்கிட்டு இருந்தேன்.."

"பக்கா ஜெண்டில்மேன்..! சரண்யாவின் அருமை புரிஞ்சு அவங்களைக் கண்ணுக்குள்ள வைச்சுப் பார்த்துக்குவார்.."

"சரியாச் சொன்ன.. ஒரு அண்ணியாய் உன் நாத்தனாருக்கு செய்ய வேண்டிய கடமையைச் செய்துட்ட.."

சரவணன் பாராட்டினான்.. ஆர்த்திக்கு உற்சாகம் உண்டானது.. தன்னை சரண்யாவின் அண்ணியாக நினைத்துக் கொண்டாள்.. அந்த நினைவே இனித்தது.

"ஹார்ஸ் ரைடிங் போகலாமா.?"

சாலையில் கடந்து சென்ற குதிரைகளைப் பார்த்தபடி வினவினான் சரவணன்.. ஆர்த்தியிடமிருந்து பதில் வராததில் அவளைப் பார்த்தான்.. அவள் முகம் வெளுத்திருந்தது.. புருவங்களை உயர்த்தினான்..

"ஒன்றுமில்லை.." என்றாள் அவள்..

அவளுக்காக கார் கதவைத் திறந்த போது அவள் அவசரமாக ஏறிக் கொண்டதைப் போல இருந்தது அவனுக்கு.. எதையோ தேடுவதைப் போல குனிந்து கொண்டாள்.. இவளுக்கு என்ன ஆனது என்ற நினைவுடன் காரைக் கிளப்பினான்.. அடுத்து எங்கே போகலாம் என்று கேட்டபோது வீட்டிற்குப் போகலாம் என்று சொல்லி விட்டாள்.. அவள் முகத்தில் துளிர்த்திருந்த வியர்வைத் துளிகளில் சரவணனும் வற்புறுத்தாமல் குன்னூரை நோக்கிக் காரைச் செழுத்தினான்.. பயந்திருக்கிறாள் என்று புரிந்தது.. எதனால் என்றுதான் புரியவில்லை..

'நைட்டில தோட்டத்துப் பக்கம் வருவாள்ல.. அப்பக் கேட்டுக்கலாம்..'

முன்னிரவில் தோட்டத்தில் காத்திருந்தான்.. ஆர்த்தி வரவில்லை..

நெடுநேரம் காத்திருந்து விட்டுச் சினத்துடன் வீட்டுக்குள் போன போது கவிதா அவனைத் தேடிக் கொண்டிருந்தாள்..

"இந்தக் குளிரில வாசல்பக்கம் ஏன் போன..?" என்று கடிந்து கொண்டாள்..

"நான் என்ன பப்பாவா..?" ஆர்த்தியின் மீதிருந்த கோபத்தில் கவிதாவிடம் எரிந்து விழுந்தான் அவன்..

"பப்பாவா இருந்தா முதுகில நாலு போடு போட்டு வழிக்குக் கொண்டு வரலாம்.. தோளுக்கு மேலே வளர்ந்த

பையன என்ன செஞ்சு வழிக்கு கொண்டு வர்றது..?" அவன் கோபத்தை அலட்சியப் படுத்தினாள் கவிதா..

டைனிங் டேபிளில் யாருமில்லை.. அவனுக்கு தட்டை வைத்துப் பரிமாறிய கவிதாவிடம் அலட்சியம் போலக் காட்டியபடி அவன் விட்டேற்றியாக விவரம் கேட்டபோது அவனைத் தவிர வீட்டிலிருக்கும் அனைவரும் சாப்பிட்டு விட்டதாகச் சொன்னாள்..

'ஆர்த்தியுமா..?' அவன் மனம் அதிர்ந்தது..

அவளுக்காக குன்னூரின் பனிக் காற்றில் குளிரைப் பொறுத்தபடி அவன் காத்துக் கொண்டிருக்க அவள் அவனைப் பற்றிய நினைவேயில்லாமல் சாப்பிட்டு விட்டுப் போயிருக்கிறாள்.. என்பதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை..

மறுநாள் மழை பெய்ததில் அவன் ஊட்டிக்குப் போகாமல் வீட்டிலேயே தங்கி விட்டான்.. சுந்தரம் மட்டும் எஸ்டேட்டுக்குப் போயிருந்தார்.. பொழுது போகாமல் விளையாடிக் கொண்டிருந்த சரண்யா திடிரென்று..

"நீ பாடுண்ணா.." என்றாள்..

சட்டென்று விழியுயர்த்திப் பார்த்த ஆர்த்தியின் பார்வையை குற்றம் சாட்டும் பார்வையுடன் சந்தித்தான் சரவணன்.. அவனது முறைப்பைத் தாக்குப் பிடிக்க முடியாமல் அவள் விழி தாழ்த்திக் கொண்டாள்..

"தீர்த்தக் கரைதனிலே தெற்கு மூலையில்
செண்பகத் தோட்டத்திலே..
பார்த்திருந்தால் வருவேன் - வெந்நிலாவில்
பாங்கியோடென்று சொன்னாய்..
வார்த்தை தவறி விட்டாய் - அடி கண்ணம்மா
மார்பு துடிக்குதடி - பார்த்த
இடத்திலெல்லாம்
உன்னைப் போல பாவை தெரியுதடி..
மோனத் திருக்குதடி - இந்த வையகம்
முழுவதும் காதலிலே - நான் ஒருவன்மட்டும்
பிரிவென்னும் நரகத்தில் உழலுவதோ..?"

சரவணன் பாடப்பாட ஆர்த்தியின் விழிகளில் கண்ணீர் வழிய ஆரம்பித்தது.. அவனது குரலில் இருந்த வசீகரம் அவளை கட்டி இழுத்தது.. பாடலை ரசித்துக் கொண்டிருந்த சரண்யா ஆர்த்தியைக் கவனிக்கவில்லை.. ஆர்த்தியையே ஆழ்ந்து பார்த்தபடி பாடிக் கொண்டிருந்த சரவணன் அவளைத் தவிர எதையும் கவனிக்கவில்லை..

அழுகையை அடக்க முடியாமல் ஆர்த்தி ஓடிவிட்டாள்.. அவள் பின்னாலே போகத் துடித்த மனதை கட்டுப் படுத்திக் கொண்டான் சரவணன்.. அன்று முழுவதும் அவன் வீட்டில்தான் இருந்தான்.. ஆர்த்தி தட்டுப்படவில்லை.. எப்போது சாப்பிட்டாள், எப்போது அறையில் அடைந்து கொண்டாள் என்று சரவணன் உணரும் முன்னரே மின்னலைப் போல வந்து சென்று விட்டாள்..

"அவங்களுக்கு தலைவலி அண்ணா.." என்றாள் சரண்யா..

மூடியிருந்த அவள் அறைக் கதவைத் தட்டப் போன போது சுந்தரம் வந்துவிட சரவணன் தன் முயற்சியைக் கைவிட்டு அறைக்குள் போய் விட்டான்.. மறுநாள் காலையில் கவிதா பதட்டமாக வந்து அவனை எழுப்பினாள்..

"சரவணா.. யாரோ ஒரு லேடி.. சொப்னான்னு பெயர் சொல்கிறாங்க.. ஆர்த்தியைத் தேடி வந்திருக்காங்க.."

சரவணனுக்குத் தூக்கம் பறந்து விட்டது.. அவசரமாக போர்வையை உதறிவிட்டு எழுந்தவன்..

"ஆர்த்தி எங்கேம்மா..?" என்றாள்..

"அதையேண்டா கேட்கிற.." கவிதா புலம்பியதில் அவனுக்கு பகீர் என்றாகி விட்டது..

"என்னாச்சும்மா..?"

"ஆர்த்தி அவ ரூமில இல்லைடா.. இத்தனை நாளாய் இங்கே தங்க இடம் கொடுத்ததுக்கு நன்றின்னு கடிதம் எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறா.. அவ குமாரோட தங்கை இல்லையாமே.. நீயும் குமாரும் கூட்டுச்சதி பண்ணி எங்களை ஏமாத்தியிருக்கீங்க.. என்னதான் நடக்குதுடா..? யாருடா அந்தச் சொப்னா..?"

"ஆர்த்தியோட சித்திம்மா.."

சரவணன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே சுந்தரமும் சரண்யாவும் சரவணனைத் தேடி வந்து

விட்டார்கள்.. சுந்தரத்தின் கூர்மையான பார்வையில் உதட்டைக் கடித்த சரவணன்..

"ஐ ஆம் ஸாரிப்பா.." என்றான்..

"ஆர்த்தியின் வயதில உனக்கு ஓர் தங்கை இருக்கா சரவணா.. அடுத்தவங்க வீட்டுப் பெண்ணை பொய் சொல்லி நம்ம வீட்டில தங்க வைக்கலாமா..? குமாரும் இதுக்கு உடந்தையா..?"

"வேணும்னே எதையும் செய்யலைப்பா.."

"அந்தப் பெண் யாருடா..? அவளை எங்கே மீட் பண்ணின..?"

சரவணன் சொன்னான்.. மூவரும் கேட்டுக் கொண்டார்கள்.. சுந்தரத்தின் முகத்தில் கவலை வந்தது..

"பாவம்ப்பா.. அண்ணன் உதவி செய்ததில தப்பில்லைன்னு தான் எனக்குத் தோணுது.." பரிந்து பேசினாள் சரண்யா..

"ஆமாங்க.. தாயில்லாப் பொண்ணு.." மனம் கசிந்தாள் கவிதா..

"ஆர்த்தி நல்ல பெண்ங்கிறதில எனக்கு மாற்றுக் கருத்தில்ல.. ஆனா.. அவளுக்குப் பிடிக்காத கல்யாணத்தை தடுக்க யாருமே நினைக்கலியே.. அது ஏன்ப்பா..? ஆர்த்தியோட அப்பாகூட மௌனமா இருக்காரே..?"

"அதுதான் தெரியலைப்பா.."

"எது எப்படியிருந்தாலும் வீடு தேடி வந்திருக்கிற ஆர்த்தியின் சித்திக்கு நாம்தான் பதில் சொல்லியாகனும்..

கவிதா ஆர்த்தி எழுதி வைச்சுட்டுப் போயிருக்கிற லெட்டரை எடு.. எதுக்கும் எஸ்.பிக்கு ஒரு போனைப் போட்டு விவரம் சொல்லிரு சரவணா.." சுந்தரம் வேகமாக செயல்பாட்டார்..

சரவணன் செல்போனை எடுத்து எஸ்.பியை அழைத்து விவரம் சொன்னான்.. ஏதேனும் உதவி தேவைப் படுகிறதா என்று அவர் கேட்டார்.. அப்போதைக்கு ஏதுமில்லை என்று கூறிவிட்டு செல்போனை அணைத்து விட்டு மாடிப்படியில் இறங்கினான்.. ஹாலில் உட்கார்ந்திருந்த அந்த சொப்னா நாலைந்து தடியன்களுடன் வந்திருந்தாள்.. சரவணனிடம் சண்டைக்கு வந்தாள்..

"என் மகளுக்கு கல்யாணம் நிச்சயம் பண்ணியிருக்கோம்.. ஊருக்குள்ள பெரிய குடும்பம்.. இப்படி இழுத்துக்கிட்டு வந்துட்டியே.. எங்க மானம் மரியாதை என்னவாகிறது..?"

"ஹலோ..! நானொன்னும் உங்க ஹஸ்பெண்டோட மகளை இழுத்துக்கிட்டு வரலை.. அவளா விருப்பப் பட்டுத்தான் என்னுடன் வந்தா.. அதுக்கான ஆதாரம் என்னிடம் இருக்கு.. போலிஸில் காட்டனும்னாலும் காட்டுவேன்.."

"போலிஸா..?" சொப்னா அடங்கிப் போனாள்..

"போலிஸேதான்.." அழுத்தம் திருத்தமாக சொன்னான் சரவணன்..

"இதைப் பாரு தம்பி.. உன்கூட பஞ்சாயத்துப் பண்ண எனக்கு நேரமில்லை.. எங்க வீட்டுப் பெண்ணை அனுப்பு..

நான் போய்கிட்டே இருக்கேன்.. உனக்கும் எனக்கும் வேற பேச்சில்லை.. எங்கே அவ..?"

"அவ இங்கே இல்லை.. லெட்டர் எழுதி வைச்சுட்டுப் போயிட்டா.."

"கதை அளக்கிறயா..? என்னை நம்பச் சொல்கிறயா..? யார்கிட்ட கதை விடற..? என்ன..? காதலா..?" கண்கள் இடுங்கக் கேட்டாள் சொப்னா..

"ஏய்ய்..! பெண்ணாச்சேன்னு பார்க்கிறேன்.. பார்த்துப் பேசு.."

"நிறுத்துப்பா.. ஊரே ஒன்றுகூடி பூட்டியிருந்த ரூமைத் திறந்து என் தம்பியையும் ஆர்த்தியையும் பஞ்சாயத்தில நிறுத்துச்சு.. அதுகளுக்கு கல்யாணம் பண்ணி வைக்கனும்னு பஞ்சாயத்தில தீர்ப்பாகிருச்சு.. இப்படிப்பட்டவளை நீ காதலிக்கிறயா..? வெளியே சொல்லிராதே.."

24

அக்கினிக் கங்குகள் காதில் விழுந்தால் எப்படியிருக்கும்..? அதுபோல உணர்ந்தான் சரவணன்.. சுந்தரமும் கவிதாவும் முகம் சுளித்தார்கள்.. மாடியிலிருந்து எட்டிப் பார்த்து ஹாலில் நடப்பதை கவனித்துக் கொண்டிருந்த சரண்யா காதுகளைப் பொத்திக் கொண்டாள்..

"வெளியில் போ.." சரவணன் கர்ஜித்தான்.

"இங்கே பாரு.." சொப்னா சட்டம் பேச முயன்றாள்..

சரவணன் பாதுகாப்புக்காக வைத்திருக்கும் துப்பாக்கியை கையில் எடுத்து விட்டான்.. வெலவெலத்துப் போனவளாக அவள் ஓடிவிட்டாள்..

"என்னடா கொடுமை இது..?" சுந்தரம் தலையைப் பிடித்தாள்.

"நான் கிளம்பறேம்ப்பா.." சரவணன் டிராவல் ஏஜன்ஸியை செல்போனில் கூப்பிட்டான்..

"எங்கேடா..?" சுந்தரம் வினவினார்..

"டில்லிக்கு.. அவ அங்கேதான் போயிருப்பா.. டில்லிக்கு அவ அனுப்பின கொரியரோட அட்ரஸை அவகிட்ட இருந்த கொரியர் ரசீதிலிருந்து நோட் பண்ணி வைச்சிருக்கேன்..." அவர் முகம் பார்க்காமல் சொன்னான் சரவணன்..

"இந்த ரிஸ்க் தேயா சரவணா..?" சுந்தரம் முகம் மாறினார்..

"எனக்குத் தேவைப்பா.." அழுத்தம் திருத்தமாக அறிவித்தான் சரவணன்..

"சரவணா.." சுந்தரம் அதிர்ந்தார்..

"அவமேல தப்பிருக்காதுன்னு என் மனசுக்குத் தோணுதுப்பா.. அவளைத் தேடிப் பிடிச்சு விவரம் கேட்டு அவ பிரச்னையைத் தீர்த்து வைச்சுட்டுக் கூப்பிட்டுக்கிட்டு வருவேன்.." பிடிவாதமாக பேசினான் சரவணன்..

"நம்ம வீட்டுக்கா..?" யோசித்தார் சுந்தரம்..

"ஆமாம்ப்பா.." அதே அழுத்தத்துடன் பதிலளித்தான் சரவணன்..

சுந்தரம் பேசாமல் இருந்தார்.. கவிதாவின் முகத்தைப் பார்த்தார்..

"இங்கே இருந்தவரைக்கும் குற்றம் குறைக்கு இடம் கொடுக்காம நடந்துக்கிட்டா.. எனக்கென்னவோ அவமேல தப்பிருக்கும்ன்னு தோணலைங்க.." என்றாள் கவிதா..

"சிக்கல் இருக்கே கவிதா.." சுந்தரம் தாடையைத் தடவினார்..

"சரவணன் தீர்க்கட்டும்.." என்று சொல்லி விட்டாள் கவிதா..

"அந்த அவசியம்தான் என்ன கவிதா..? நம்ம சரவணனுக்கு மனைவியா வர அந்தப் பெண்ணுக்கு தகுதியிருக்கா..?" தயங்கினார் சுந்தரம்..

"ஏன்ப்பா இல்லை.. உங்களுக்கு டீ போட்டுக் குடுத்து ஆபிஸ் வொர்க்கில ஹெல்ப் பண்ணி, அம்மாவுக்கு ஒத்தாசை செய்து கோவிலுக்குக்கூடப் போய் வந்து, என்கூட பிரண்ட்லியாப் பேசிப் பழகின்னு ஒரு நல்ல மருமகளா இந்த வீட்டில இருந்தவங்கப்பா அவங்க.. ஆத்தி அண்ணனுக்கு பெஸ்ட் சாய்ஸ்.." சரண்யா சரவணனுக்கு ஆதரவாக பேசினாள்..

"வீடே ஒன்ற..ய் கூடியாச்சு.. நான் மட்டும் ஏன் மறுக்கனும்..?"

சுந்தரமும் சம்மதித்து விட சரவணன் டில்லிக்குக் கிளம்பினான்.. ஸ்டார் ஹோட்டல் ஒன்றில் ரூம் போட்டு தங்கியவன் குளித்து சாப்பிட்டு கொரியர் ரசீதில் இருந்த முகவரியைத் தேடிக் கண்டு பிடித்துக் கிளம்பினான்.. டில்லி முழுவதும் சுற்றியவன் ஒருவழியாக அந்த முகவரியை கண்டுபிடித்துவிட்டான்.. அந்த பிளாட்டின் வாசலில் இருந்த காலிங் பெல்லை அடித்து விட்டுக் காத்திருந்தான்.. வாசலில் இருந்த காலிங் பெல்லை அடித்து விட்டுக் காத்திருந்தான்.. கதவைத் திறந்த இளம் பெண்..

"கோன் ஹை..?" என்றாள்..

"ஆர்த்தியின் ஹஸ்பெண்ட்.." என்றான் சரவணன்..

"க்யா..?" என்றாள்.. அவள் ஆச்சரியமாக..

நீபாட்டுக்கு 'கியா கியா' என்று கத்திக் கொண்டிரு என்று தடாலடியாக உள்ளே புகுந்தான் சரவணன்.. ஹாலில் இருந்த சோபாவில் சுருண்டிருந்த ஆர்த்தி அவனைக் கண்டதும் பதறிப் போனவளாக எழுந்து நின்றாள்..

"நீங்க எப்படி இங்கே..?"

கேட்டு முடிப்பதற்குள் அறையை வாங்கினாள்.. கன்னத்தை பிடித்தபடி நின்று விட்டாள்.. காதுகளில் 'ஙொய்' என்ற வண்டின் ரீங்காரம் கேட்டது.. சரவணன் உறுமிக் கொண்டிருந்தான்..

"காதலுக்கு அடிப்படை நம்பிக்கைதாண்டி.. அந்த நம்பிக்கை ஏண்டி உன்கிட்ட இல்லாம போயிருச்சு..? ஏன் என்னை விட்டு ஓடி வந்த..?"

"சரவணன்.." விம்மினாள் ஆர்த்தி..

"உன் சித்தி வந்திருந்தா.. என்னென்னவோ சொன்னா.. அத்தனையையும் அம்மா, அப்பா, சரண்யான்னு வீட்டில இருந்தவங்க எல்லாம் கேட்டுட்டாங்க.. ஏதோ நடந்திருக்குன்னு நினைச்சேன்.. இப்படின்னு நினைக்கலை.. என்னிடம் சொல்லித் தொலைச்சிருந்தா யாருக்கும் தெரியாம சரி பண்ணியிருப்பேனேடி.." பல்லைக் கடித்தான் சரவணன்..

"எல்லோருக்கும் தெரிஞ்சு போச்சா..?"

குன்றிப் போனாள் ஆர்த்தி.. ஏதேனும் விசம் கிடைத்தால் குடித்து விடும் முடிவில் அவளிருப்பதை அவள் முகம் உணர்த்தியதில் மற்றுமொரு அறையை விட்டான் சரவணன்..

"சாகிறதுதான் முடிவா..? கோழையா நீ..?" உறுமினான்..

"என்னன்னு சொல்லுவேன் சரவணன்.. என்னோட ரூமில தூங்கினதுதான் எனக்குத் தெரியும்.. திடீர்ன்னு பார்த்தா ரூம் கதவை வெளியில இருந்து திறக்கிறாங்க.. யார்ன்னு பார்த்தா ஊரே அங்கே கூடி நிற்குது.. நடுவில அப்பா. என்னன்னு பார்த்தா என் கட்டில்ல அந்தப் பாவி தூங்கிக்கிட்டு இருக்கான்.." முகத்தை மூடிக் கொண்டாள் ஆர்த்தி..

"அவன் எப்படி உள்ளே வந்தான்..?" சரவணன் விசாரித்தான்..

"நான் தூங்கப் போனப்ப கதவை உள்பக்கமா லாக் பண்ணிட்டுத்தான் தூங்கினேன்.. பட்.. காலையில ஊர்க்காரங்க கதவைத் திறந்தப்ப வெளியில இருந்து ஈஸியாத் திறக்கிறாங்க.. உள்ளே லாக் பண்ணினது திறந்திருக்கு.. அந்த நாய் முதலிலேயே ரூமுக்குள்ள போய் ஒளிஞ்சிருந்திருக்கான்.." ஆர்த்தி விவரித்தாள்..

"ஓ..! உனக்கு எதுவும் மயக்கமா இருந்ததா..?"

யோசனையுடன் கேட்டான் சரவணன்.. தூக்கமாத்திரை கொடுத்திருக்கலாம் என்ற எண்ணம் அவனுக்கு..

"ஊஹூம்.. ரொம்ப நேரம் தூக்கம் வராம புரண்டு புரண்டு படுத்துக்கிட்டு இருந்தேன்.. விடிஞ்சப்பதான் கண்ணசந்தேன்.. அப்பத்தான் அந்த நாய் ஒளிஞ்சிருந்த இடத்தை விட்டு வெளியில வந்து லாக் பண்ணின கதவைத் திறந்து விட்டிருக்கனும்.." என்றாள் ஆர்த்தி..

"இதை நீ ஊராரிடம் சொல்லலையா..?" சரவணன் கேட்டான்..

"சொன்னேனே.. நான் சொன்னதை நல்லவங்க நம்பினாங்க.. சித்தியோட பணத்துக்கு விலை போனவங்க பொய்யின்னு சொன்னாங்க.. அப்பாவை பஞ்சாயத்தில நிப்பாட்டிட்டாங்க.. தீர்ப்பு சொல்ல வேண்டிய என் அப்பா தலை குனிஞ்சு நின்னாரு.. சித்திக்கு சாதகமான ஆளுக பஞ்சாயத்தை கையில எடுத்துக் கிட்டாங்க.. தீர்ப்பை அவங்க

சொன்னாங்க.. ஊர்க் கட்டுப்பாடுன்னு கல்யாணத்தை முடிவு பண்ணிட்டாங்க.. நான் தப்பிச்சு ஓடினேன்.. துரத்தி வந்து பிடிச்சாங்க.. மறுபடியும் தப்பிச்சேன்.. உங்களைச் சந்திச்சேன்.."

ஆர்த்தி தரையில் சரிந்து அழுதாள்.. அவளுடைய தோழி கதவை அடைத்து விட்டு ஆறுதலாக தோழியை மடியில் சாய்த்துக் கொண்டாள்.. சோபாவில் உட்கார்ந்த சரவணன் வெகுநேரம் யோசித்தான்.. நிராதரவாக சுருண்டு கிடந்த காதலியைப் பார்த்தான். அணுகுண்டால் தகர்க்கப்பட்டதைப் போல அதிர்ந்து போனது அவன் மனது..

"வேணாம் சரவணன்.. நீங்க குன்னூருக்குப் போயிருங்க.. என்னை மறந்திருங்க.. எனக்கு ஃபாரின்ல வேலை கிடைக்கும் போல இருக்கு.. நான் இந்தியாவை விட்டே ஓடப் போறேன்.. திரும்பி வர மாட்டேன்.. நீங்க நல்ல பெண்ணாய் பார்த்து கல்யாணம் பண்ணிக்கிட்டு ஹனிமூன் செட்டில் ஆகிருங்க.." ஆர்த்தி அழுதாள்..

"நீ நல்ல பெண்ணில்லையா..?" எரிச்சல் பட்டான் சரவணன்..

"சிக்கலான குடும்பச் சூழ்நிலையில மாட்டியிருக்கேனே.. நமக்குக் கல்யாணம் நடக்கனும்னா உங்க வீட்டில இருந்து என்னைப் பெண் கேட்டு வரனும்.. அந்த ஊருக்குள்ளே காலடி வைச்சா கதைகதையாய் பொய்

மூட்டையை அவிழ்த்து விடுவாங்களே.. பஞ்சாயத்தில முடிவு பண்ணின கல்யாணத்தில என்னை சிக்க வைச்சிருவாங்களே.. இதெல்லாம் உங்க குடும்பத்துக்கு தேவையில்லாத தொரட்டுத்தானே..?"

"அதை நான்தான் தீர்மானிக்கனும்.. நீயில்லை.."

சரவணன் பால்கனிக்குப் போனான்.. யார், யாருடனோ போனில் பேசினான்.. திரும்பி வந்தான்.. குனிந்து ஆர்த்தியின் தோள் தொட்டு எழுப்பி நிறுத்தினான்.. அழுது அழுது முகம் வீங்கியிருந்தவளின் கண்ணீர் துடைத்து மார்பில் சாய்த்துக் கொண்டான்.. துடிப்புடன் அவன் மார்பில் அடைக்கலம் புகுந்தவளின் முடிகோதி ஆறுதல் படுத்தினான்..

"காதல்ன்னா சைட் அடிக்கிறது, ரொமான்ஸ் பண்றது மட்டும் இல்லைடி.. நேசிக்கிறது.. அதுவும் உண்மையாய் நேசிக்கிறதுதான் காதல்..! உனக்கொரு சிக்கல் இருக்குன்னா அதைத் தீர்த்து வைச்சுட்டு உன் கழுத்தில் தாலியைக் கட்டனும்.. அதுதான் காதல்.. அதை விட்டுட்டு கை கழுவிட்டு வேற பெண்ணைத் தேடிக்கிறதுக்குப் பேரு காதல் இல்லை ஆர்த்தி.. எது வந்தாலும் எதிர்த்து நின்று ஜெயிக்கிறதுதான் காதல்.."

"ஆனா.. உங்களுக்குன்னு ஒரு குடும்பம் இருக்கு.. அங்கிள், ஆண்ட்டி, சரண்யான்னு இருக்காங்க.. அவங்களையும் நினைச்சுப் பாருங்க.."

"அவங்க உனக்கு சப்போர்ட்டா நிற்கிறாங்கடி.. கவலைப் படாதே.. உன் ஊரில வந்து பெண் கேட்டு நம்ம கல்யாணத்தை நிச்சயம் பண்ணுவாங்க.. உன் ஊரோட பஞ்சாயத்தே நம்ம கல்யாணத்தை நடத்தி வைக்கும்டி.."

"எப்படி முடியும்..?" நிராசையுடன் கேட்டாள் ஆர்த்தி..

"என்னால் முடியும்... வா..." கை நீட்டினான் சரவணன்..

மனதில் அவநம்பிக்கைதான் மலையளவு குவிந்திருந்தது.. ஆனாலும் அவன் கரம் பற்றினாள் ஆர்த்தி.. அவளுக்காக அவன் முயற்சிகளை எடுத்திருக்கும் போது தட்டிக் கழிக்க அவளால் முடியவில்லை..

ஆர்த்தியின் கிராமத்துக்குப் போன போது எல்லையிலேயே சொப்னாவின் ஆள்கள் சுற்றி வளைத்துக் கொண்டார்கள்.. அதை எதிர்பார்த்திருந்த சரவணன் போலிஸின் உதவியை நாடியிருந்ததால் போலிஸ் ஜீப் வந்து விட்டது.. அதை எதிர்பார்த்திராத சொப்னாவின் ஆள்கள் பின் வாங்கி விட்டார்கள்..

சரவணனின் போன் காலில் சுந்தரம் குடும்பத்துடன் ஆர்த்தியைப் பெண் கேட்க கிளம்பி வந்திருந்தார்.. ஆர்த்தியின் வீட்டில் அவரை சட்டமாக எதிர்கொண்ட சொப்னா..

"பொண்ணு என் தம்பியோட குடும்பம் நடத்தியவ.. அதை இந்த ஊரே பார்த்திருக்கு.. பஞ்சாயத்தில நிப்பாட்டி

தீர்ப்பும் சொல்லி கல்யாணத்தையும் முடிவு பண்ணியாச்சு.. அதனால பொண்ணை எங்ககிட்ட ஒப்படைச்சுட்டு நீங்கள்ளாம் பொட்டியைக் கட்டுங்க..” என்று சட்டம் பேசினாள்..

ஆர்த்தியின் தந்தை உடைந்து போயிருந்தார்.. நடைபிணம் போல இருந்தவரின் மன வருத்தம் அவரது விழிகளில் தெரிந்தது..

“இது நான் முடிவு பண்ணின கல்யாணமில்லைங்க.. பஞ்சாயத்தில முடிவு பண்ணிய கல்யாணம்.. பஞ்சாயத்திலே தீர்ப்பைச் சொல்ற பெரிய வீட்டுக்காரனா இருந்துக்கிட்டு நானே பஞ்சாயத்தை மீறக்கூடாது..” இயலாமையுடன் புலம்பினார்..

“பஞ்சாயத்தை கூட்டுங்க.. நான் அவங்ககிட்டேயே நியாயம் கேட்கிறேன்..” என்று சொல்லி விட்டான் சரவணன்..

பஞ்சாயத்து கூடியது.. நடுக்கத்துடன் சரவணனின் முதுகிற்குப் பின்னால் மறைந்து நின்றாள் ஆர்த்தி.. சில போட்டாக்களையும் மருத்துவச் சான்றிதழ் ஒன்றையும் தூக்கிப் போட்டான் சரவணன்.. அந்தப் போட்டோக்களில் திருமண விழா ஒன்றில் ஆர்த்தி கலந்து கெண்டிருப்பதைப் போல போஸ் கொடுத்திருந்தாள்..

“ஆர்த்தியும் நானும் இரண்டு வருசமா காதலிக்கிறோம்.. நீங்க ஆர்த்தியையும் திருமதி

சொப்னாவின் தம்பியையும் ஒரே ரூமில் சேர்த்து பார்த்ததா சொல்கிற அந்த ராத்திரியில ஆர்த்தி அவள் வீட்டில் இல்லை.. பக்கத்து டவுனில நடந்த எங்க சொந்தக்காரங்களோட கல்யாணத்தில கலந்துக்க வந்திருந்தா.. அந்தக் கல்யாணத்தில அமைச்சர், எஸ்.பி, கலெக்டர்ன்னு பெரிய பெரிய வி.ஐ.பிக்கள் கலந்துக் கிட்டாங்க.. போட்டோவில பார்த்துக்கங்க.. சாட்சிக்கு வேணும்னா அவங்களையும் கூப்பிடலாம்.. நான் கேட்டுக்கிட்டா அவங்க கட்டாயம் வருவாங்க.."

சரவணன் படு நாசுக்காக தனது செல்வாக்கை உணர்த்தியதில் சொப்னாவின் ஆள்களுக்கு வயிற்றில் புளியைக் கரைக்க ஆரம்பித்தது..

"விடியறப்பதான் அவ வீட்டுக்கே வந்தா.. நான்தான் காரில் கொண்டு வந்து விட்டேன்.. நீங்க என்னடான்னா வேற ஏதோ கதை சொல்றீங்க..?"

"இல்லே தம்பி.. அவங்க ஒரே ரூமில இருந்ததை ஊரே பார்த்துச்சு.."

"உங்களோட பெருத்த இம்சைங்க.. ஒரே வீட்டில இருக்கிறவங்க யதேச்சையா ஒரு ரூமில நின்று பேசினா அதைக் குற்றம்ன்னு பஞ்சாயத்தைக் கூட்டிருவீங்களா..?"

"அதில்ல தம்பி.. இந்தப் பெண்ணோட சித்தியோட தம்பி கட்டில்ல படுத்துத் தூங்கிக்கிட்டு இருந்தான்.."

"அதுக்கு அவனையில்ல நாலு சாத்து சாத்தனும்..? அந்த லட்சணத்தில இவளோட வீடு இருக்கு.. ஒரு பொண்ணு வெளியில் கிளம்பிப் போனா அவ ரூமை மத்தவங்க யூஸ் பண்ணக் கூடாதுங்கிற மேனர்ஸ் இவங்க வீட்டாளுகளுக்கு இல்லை போல.. இவ இல்லாத சமயத்திலே கட்டில் காலியா இருக்குன்னு அந்த தடிமாடு படுத்துத் தூங்கியிருக்கான்.."

"அவன் வேற மாதிரி சொன்னானே.."

"அவனே ஒரு மாதிரி..! அந்த மாதிரிப்பட்டவன் வேற மாதிரி சொல்லாம என்ன பண்ணுவான்..? ஏங்க.. படிப்பு, அழகு, பணம்ன்னு எல்லாம் சேர்ந்த மாதிரி இருக்கிற பொண்ணு கழுத்தில தாலி கட்ட லட்டு போல சான்ஸ் கிடைச்சா எந்த மடையனாவது வேண்டாம்ன்னு விட்டிருவானா..? யூஸ் பண்ணிக்கப் பார்க்க மாட்டானா..? நீங்க அவன் சொன்னதாச் சொல்கிறீங்களே.. ஆர்த்தி என்ன சொன்னா..?"

"அது.. அது.. வந்து.. இல்லேன்னுதான் சொல்லுச்சு.."

"ஏங்க.. நல்ல குடும்பத்தில பொறந்த பொண்ணு இதுமாதிரி நிலைமையில பழகினவனையே கல்யாணம் பண்ணிக்கனும்னு தானே நினைக்கும்... ஆம்பளைதானே தப்பிக்கப் பார்ப்பான்..? பெண்கள் அதுக்கு இடம் கொடுக்காம இழுத்துப் பிடிக்கத்தானே பார்ப்பாங்க.. அவன் சொல்கிறது உண்மையா இருந்தா ஆர்த்தி ஏங்க அதை இல்லேன்னு

மறுக்கிறா..? அவனைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு தப்பிச்சு ஓடறா..? ஆசைப்பட்டு அவன்கூட ரகசியமா குடும்பம் நடத்தியவ ஓடி ஒளியக் காரணம் என்னங்க..?"

"அதானே.." சொப்னாவின் ஆள்கள் முகத்தில் ஈயாடவில்லை..

"ஊரே பார்த்துச்சு.." சொப்னா ஆங்காரத்துடன் அதை நிலைநாட்ட முயன்றாள்..

"எப்படிப் பார்த்துச்சு..? கதவை உடைச்சு உள்ளே போய் பார்த்துச்சா..?" சரவணன் கேட்டான்..

"இல்லையில்லை.. கதவு திறந்துதான் இருந்துச்சு.. வெளியில பூட்டுப் போட்டு வைச்சுட்டு சொப்னாதான் எங்களை வரச்சொல்லி இந்த அநியாயத்தைப் பாருங்கன்னு கதவைத் திறந்து காட்டினாங்க.."

"நல்லா இருக்குங்க உங்க ஊரோட நியாயம்.. தப்பு செய்கிறவங்க கதவைத் திறந்து வைச்சுக்கிட்டா தப்பு செய்வாங்க..?"

பஞ்சாயத்தில் திணறிப் போனார்கள்.. சரவணன் மருத்துவ சான்றிதழை சுட்டிக் காட்டினான்..

"இது மெடிகல் ரிப்போர்ட்.. ஆர்த்தியை செக் பண்ணின லேடி டாக்டர் தெளிவா சர்டிபிகேட் கொடுத்திருக்காங்க.. ஆர்த்தி பரிசுந்தமானவள்ன்னு.. சந்தேகமா இருந்தா

நீங்களே ஒரு லேடி டாக்டரை வர வைச்சு ஆர்த்தியை செக் பண்ணச் சொல்லலாம்.."

இந்த அடியை சொப்னா எதிர்பார்க்கவில்லை.. பஞ்சாயத்தின் கோபம் சொப்னாவின் மீது திரும்பி விட்டது.. அமைச்சர், போலிஸ், கலெக்டர் என்று உயர்மட்ட அதிகார வர்க்கத்துடன் தொடர்பில் இருக்கிற ஒருவனின் முன்னால் அந்த ஊரின் பஞ்சாயத்தை நிறுத்தி வைத்து விட்டதாக அவர்கள் கருவினார்கள்..

"இப்போ நான் இந்த சொப்னாம்மா மேல புகார் கொடுக்கிறேங்க.. என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிற ஆர்த்திமேல களங்கம் வர்றதைப் போல இவங்க சதி பண்ணிட்டாங்க.. ஆர்த்தியோட சொந்த வீட்டிலேயே சுதந்திரமா நடமாட முடியாம செஞ்சிட்டாங்க.. இவங்களோட தம்பிக்கு ஆர்த்தியைக் கல்யாணம் பண்ணி வைக்கனும்ங்கிற சுயநலத்தில ஆர்த்தியை ஊரை விட்டே ஓட வைச்சிட்டாங்க.. சொல்லுங்க.. இவங்களுக்கு உங்க பஞ்சாயத்தில என்ன தண்டனை கொடுப்பீங்க..? இல்லேன்னா இருக்கவே இருக்கு போலிஸ்ஸ்டேசன்.. கட்டாயக் கல்யாணம், ஆள் கடத்தல், அட்டெம்ட்டு ரேப்ன்னு இவங்களையும், இவங்களோட ஆருயிர் தம்பியையும் உள்ளே தூக்கிப் போட்டிருவாங்க.."

ஆடிப் போய் விட்டாள் சொப்னா.. போலிஸ் ஸ்டேசனுக்கு பஞ்சாயத்தே மேல் என்று அவள் கை கட்டி நிற்க.. பஞ்சாயத்து அவளை ஊரை விட்டுத் தள்ளி வைத்தது.. ஆர்த்தியின் அப்பா அவளை தன் வாழ்வை விட்டே ஒதுக்கி வைத்தார்.. தாலி கட்டி விட்ட கொடுமைக்காக ஊரோரமாக இருந்த பத்து ஏக்கர் வயலையும், தென்னந்தோப்பையும், தோப்புப் பங்களாவையும் சொப்னாவின் பெயரில் எழுதிக் கொடுத்தார்.. நிம்மதியாக ஆர்த்தியின் திருமணத்தை நிச்சயித்தார்..

"அந்த சொப்னாவுக்கு நம்ம வீட்டைப் பத்தின தகவலைக் கொடுத்தது வேறு யாருமில்லை அண்ணா.. மனோகரனும், அவனோட அம்மாவும்தான்.. ஆர்த்தி யார்ங்கிறத அவங்க எப்படியோ மோப்பம் பிடிச்சு கண்டு பிடிச்சுட்டாங்க.. நாய்களுக்குத்தான் மோப்ப சக்தி இருக்கனும்னு இல்ல.. இதுகளுக்கும் இருக்கு... சொப்னாவை ஊட்டியில பார்த்ததிலதான் ஆர்த்தி பயந்து போய் நம்ம வீட்டை விட்டுட்டு டில்லிக்கு கிளம்பிப் போயிட்டாங்க.." சரண்யா சொன்னாள்..

"அவனை அப்புறமா கவனிச்சுக்கலாம்.. முதலில் கல்யாண வேலைகளைக் கவனிக்கலாம்.." என்றான் சரவணன்..

"உனக்கு உன் பிரச்னை.."

"உன் பிரச்னையும் சேர்ந்துதான் வருது.."

"புரியலை.."

"ஒரே மேடையில் இரண்டு கல்யாணம்..! எப்படி..?..!"

அழகான ஓர் சுபயோக சுபதினத்தில் ஊட்டியில் பிரம்மாண்டமாக சரவணன் - ஆர்த்தி, குமார் - சரண்யாவின் திருமணங்கள் ஒரே மேடையில் நடந்தன.. ஆர்த்தியின் தந்தை ஆனந்தக் கண்ணீரை உகுத்தார்... சதிகாரர்கள் ஜெயிப்பது அந்தக்காலம்.. இது புதிதாய் காதல் சொல்லும் இனிய காலம்..



- முற்றும் -


முத்துலட்சுமி ராகவன்
புதுசா.. புதுசா.. ஒரு
காதல் பாட்டு